









# தமிழரசு

1-6-1987 ரூ. 1



அனைந்திந்திய அளவில், கொடி நாள் வசூலில் சாதனை புரிந்ததற்காகத் தமிழ்நாடு அரசுக்கு டில்லியில் பரிசளிக்கப்பட்டது. அப்பரிசைப் பெற்று வந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களிடம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வழங்கினார் (14-5-87). மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் உடனிருக்கிறார்.

வறட்சி நிவாரணம்:

# குடிநீர் பிரச்னை தீர மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீவிர நடவடிக்கைகள்



தமிழ்நாட்டில் பரவலாக ஏற்பட்டிருக்கின்ற வறட்சி நிலைமையைச் சமாளிக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அரியபல திட்டங்களைத் தீட்டிச் சிறப்புறச் செயல்பட்டு வருகிறார். பல்வேறு குடிநீர்த் திட்டங்களுக்காக மட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுவரை ஏறத்தாழ 42 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்.

இதுபற்றி, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அண்மையில் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதன் விவரம் வருமாறு:

வறட்சித் திட்டத்தின் கீழ் 4,000 ஆழ் துளைக் கிணறுகள் அமைக்க ரூ.1,000.00 இலட்சம் நிதியொதுக்கியதில் 2,251 ஆழ் துளைக் கிணறுகள் ரூ. 562.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

குடிநீர் வடிகால் வாரியம் தனது வளமையான திட்டத்தின் கீழ் ரூ.1,253.75 இலட்சம் ஒதுக்கி, 5,015 ஆழ்துளைக்கிணறுகள் அமைப்பதில் 2,930 ஆழ்துளைக்கிணறுகள் ரூ.732.50 இலட்சம் செலவில் போட்டுள்ளன.

4,047 கிணறுகளை ஆழப்படுத்த ரூ.250 இலட்சம் ஒதுக்கியதில் 1,607 கிணறுகள் ரூ.56.91 இலட்சத்தில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கிய ரூ. 215 இலட்சத்தில் ரூ. 67.80 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ரூ. 155.50 இலட்சம் ஒதுக்கியதில் ரூ. 30.77 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

544 திறந்த வெளிக்கிணறுகள் அமைக்க ரூ.130.50 இலட்சம் ஒதுக்கியதில் 107 திறந்த வெளிக் கிணறுகள் ரூ. 44.69 இலட்சத்தில் முடிக்கப்பட்டுள்ளன.

உறைக்கிணறுகள் அமைக்க ஒதுக்கிய ரூ. 50.00 இலட்சத்தில் ரூ. 10.84 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

குடிநீர் ஆதாரங்களுக்குத் தனி மின்வழிப் பாதை அமைக்க ஒதுக்கிய ரூ.13 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புப் பணிகளுக்கென ரூ.500 இலட்சம் ஒதுக்கியதில் ரூ. 258.46 இலட்சம் செலவு செய்து 24.87 இலட்சம் மனிதவேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**சென்னை**

சென்னைப் பெருநகருக்குக் குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழவரம், புழலேரி ஆகியவற்றின் மொத்தக் கொள்ளளவான 6,483 மில்லியன் கன அடிக்குப் பதிலாக 18.5.87 அன்று 244 மில்லியன் கன அடி நீரே உள்ளது. எனினும் மேற்சொன்ன நீர் ஆதாரங்கள் மூலமாகவும் பழைய மற்றும் புதிய கிணற்றுப் பகுதிகள் வாயிலாகவும் தினசரி 40 மில்லியன் காலன் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகம் செய்ய 4,885 குழாய்க் கிணறுகளும் 1,387 'இந்தியா மார்க் 2'பம்புகளும் மற்றும் 1,489 குடிநீர்த்தொட்டிகளும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் 462 கிணறுகள் தூர் எடுக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன

18.5.87 முதல் 138 லாரிகள் மற்றும் 49 டிராக்டர் டிரெயிலர்கள் மூலம் குடிநீர் விநியோகம் நகரெங்கும் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் பற்றிய புகார்கள் மற்றும் விசாரணை பற்றிய விவரங்களைத் தெரிவிப்பதற்காக சென்னைப் பெருநகர்க் குடிநீர் வாரியம் 24 மணி நேரமும் மக்கள் தொடர்பு கொள்ளும்பொருட்டு, மைய அலுவலகத்திலும், பகுதி அலுவலகங்களிலும் தனிப் பிரிவுகளை அமைத்து அதன்மூலம் மக்கள் குறைகளைக் கேட்டறிந்து ஆவன செய்துவருகிறது. இது தவிர, குடிநீர் விநியோகக் குறைபாடுகளைக் கண்காணிக்க மேற்பார்வைப் பொறியாளர்; பகுதி வாரியாகச் சென்று தக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2018
பிரபவ-வைகாசி 18
மலர்: 17 இதழ்: 23
1-6-1987

# நாடு நலம் பெற நாளும் உழைப்போம்



மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு ப. உ. சண்முகம்

**த**மிழகம் வளர்ச்சிப் பாதையில் வீறு நடை போட்டு முன்னேறுகிறது. நாட்டை வழி நடத்திச் செல்லும் பெரும் பொறுப்பை ஏற்றுள்ள நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் சீரியமுயற்சியாலும், செழுமையான சிந்தனை வளத்தாலும் தமிழ் நாட்டின் வளர்ச்சி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். நோய் நொடியின்றி வாழ வேண்டுமென்று தான் மனிதன் ஆசைப்படுகின்றான். ஆனால் அவனது செய்கையால் நோயைத் தானே வரவழைத்துக் கொள்கிறான்.

வசதிகளோடு வாழ்பவன் வாயைக் கட்டாத காரணத்தால் நோயாளி ஆகிறான்.

வறுமையோடு வாழ்பவன் வயிற்றுக்கு ஏதும் கிடைக்காத காரணத்தால் நோயாளி ஆக்கப்படுகிறான்.

முந்தையவன கண்டிக்கப்பட வேண்டியவன்; பிந்தையவன் அனுதாபத்துக்குரியவன்.

''மக்கள் நல்வாழ்வு'' அனைவரும் பெற வேண்டும் என்பதே இன்றைய அரசின் கொள்கையாகும். இதனை கி.பி. இரண்டாயிரம் ஆண்டின்போது நம்நாட்டு மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெற்றாக வேண்டும் என்ற இலட்சியத்தினை எய்திட நமது முதல்வர் புரட்சித் தலைவர் மாண்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள் அனைத்து உதவிகளையும், ஆலோசனைகளையும் நல்கி வருகிறார்.

அனைத்து மக்களுக்கும் - ஆம். குக்கிராமத்திலுள்ள கடை கோடி ஏழைக்கும் நல்வாழ்வு கிடைத்திட அரசின் ஆணைகள் மட்டும் போதாது; நல்வாழ்வுத்துறை அதிஙாரிகள், தொண்டு நிறுவனங்கள், பொது மக்கள் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும்.

மருத்துவக் கல்லூரிகளை ஒட்டிய மருத்துவமனைகள் - மாவட்ட மருத்துவ மனைகள் - தாலுகா மருத்துவமனைகள் - ஆரம்ப சுகாதார நிலையங்கள் - தாய் சேய் நல விடுதிகள் - கிராமக் கிளை மருந்தகங்கள் இவைகளில் பணியாற்றவும் பராமரிக்கவும் என்று நியமிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள் - செவிலியர்கள் - சுகாதார அதிகாரிகள் - ஆய்வாளர்கள் - சுகாதாரப் பணிப்பெண்கள்-பல நோக்குப் பணியாளர்கள் - மகப்பேறு பார்க்கும், சுகாதாரப் பெண் பணியாளர்கள் - இவர்களின் உத்வியாளர்கள் - இப்படி அடுக்கடுக்காக உள்ள அரசு ஊழியர்கள் மட்டுமின்றி அனைத்துப் பொதுமக்களும் சேர்ந்து ஒத்துழைப்பும் ஈடுபாடும் தந்திடல் வேண்டும்.

நமது முதலமைச்சர் அவர்கள், காலத்தைக் கணித்து, குடும்ப நலம் - குழந்தைகள் நலம்-தாய் சேய் நலம் - நோய்த்தடுப்பு ஊசி- இலவசப் பற்பொடி - இலவசக் காலணி - கண்ணொளி - காது கேளாதோர்க்கு ஒலிக்கருவி வழங்கல் - பாதுகாக்கப்பட்ட குடிநீர் மலேரியா ஒழிப்பு - காச நோய்த் தடுப்பு - பெருவியாதி ஒழிப்பு - இவைகளுக்கு மேலாகச் சத்துணவு! சத்துணவு.... குழந்தைகளுக்கும் பள்ளிச் சிறார்களுக்கும் கிடைத்தற்கரிய வரப்பிரசாதம். ஏழைக் குழந்தைசள் இதன் மூலம் நோயைத் தடுக்கும் சக்தி பெற்றுள்ளனர்.

- **பழைய வைத்திய முறைகள் பாதுகாக்கப்பட வேண்டியவைகளே தவிர, பரிகசிக்கப்பட வேண்டியவைகளல்ல. நாட்டு வைத்தியம் பற்றிய நூல்கள் வைத்திருப்பவர்கள் அரசுக்குத் தந்துதவலாம்.**

இப்படி ஏராளமான நல்வாழ்வுத் திட்டங்களை உருவாக்கித் தந்துள்ளார் நமது முதல்வர். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அனைத்துத் திட்டங்களையும் வெற்றிகரமாக நடத்தி வருகிறோம்.

நோய் வந்தபின் வைத்தியம் செய்வதைவிட, வருமுன் தடுக்க வேண்டும். அதுதான் எளிது. பாதகம் வந்த பின் பரிகாரம் தேடுவதைவிட வருமுன் பாதுகாப்பு செய்தல் தானே புத்திசாலித்தனம்.

குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைத்தாக வேண்டும்.

பிறக்கும் பனிரெண்டு குழந்தைகளில் ஒன்று முதல் ஆண்டு முடியுமுன்னே இறந்து விடுகிறது. ஐந்து வயதை அடைவதற்குள் எட்டுக் குழந்தைகளில் ஒன்று இறந்து விடுகிறது. பெரும்பாலான மரணத்துக்குக் காரணம் இசிவு நோயும் வயிற்றுப் போக்குந்தான்.

தடுப்பு ஊசி முறையாகக் குழந்தைகளுக்குப் போட்டால் இறப்பைக் குறைக்க முடியும், சுத்தத்தைக் கையாள்வதன் மூலம் வயிற்றுப் போக்கைத் தடுக்க முடியும்.

'பீரம்பேணின் பாரம் தாங்கும்' - இது தமிழ்நாட்டில் முதுமொழி. 'பீரம்' என்றால் தாய்ப்பால். ஆம், தாய்ப்பால் குடிக்கின்ற குழந்தைகள் உடல் பலம் மட்டுமல்ல; மனபலமும் பெறுவர். தாய்ப்பாலுக்கு அந்தச் சக்தி உண்டு. ஆனால் சில தாய்மார்கள் தங்கள் உடல் அழகைக் காக்க தாய்ப்பால் கொடுக்க மறுக்கின்றனர். இது கொடுமை. சிலர் வறுமையின் காரணமாகத் தாய்ப்பால் சுரக்காமல் தவிக்கின்றனர். இது அதைவிடக் கொடுமை.

இப்படிப் பல காரணங்களால் தாய்ப்பால்பெற இயலாத குழந்தைகளுக்குத்தேவையான புரதச்சத்தைச் சேர்க்கத் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மூலம் ஆறு மாதம் முதல் இரண்டரை ஆண்டு வரை உள்ள குழந்தைகளுக்கு ஆறு மாவட்டங்களில் ஊட்டச் சத்துள்ள உணவு அளித்து வருகிறோம்.

கருவுற்ற தாயின் உடலைப் பரிசோதித்துத் தேவைப்பட்டால் இரும்புச் சத்துள்ள மாத்திரைகள் இலவசமாக அரசு வழங்கி வருகிறது.

பிறக்கும் குழந்தைகள் எடைக்குறைவாக இருக்கக் காரணம், கருவுற்ற காலங்களில் தாய்மார்கள் உணவில் போதுமான புரதச்சத்து இல்லாததுதான். எனவே, தாய்மார்கள் கருவுற்றிருக்கும் காலங்களில் புரதச்சத்துள்ள உணவினையோ இரும்புச்சத்துள்ள மாத்திரையையோ உட்கொள்வது நல்லது.

பள்ளிச்சிறுவர்கள் அனைவரையும் ஆண்டுதோறும் வைத்தியப் பரிசோதனை செய்து வருகிறோம். சென்ற ஆண்டு அறுபத்து நான்கு இலட்சம் பள்ளிச் சிறுவர்களை வைத்தியப் பரிசோதனை செய்ததில் பதினான்காயிரம் சிறுவர்களுக்குப் பெருவியாதிக்கான அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவர்களுக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பெரு வியாதி எனப்படும் குஷ்டம் இப்போது குணப்படுத்தக்கூடிய வியாதி. உறுதியாக அரசு வகுத்துள்ள திட்டப்படி கி.பி. இரண்டாயிரம் ஆண்டு வரும் முன்னரே இந்த வியாதி அறவே ஒழிக்கப்படும்.

போக்குவரத்துப் பெருகியுள்ள இந்நாட்களில் விபத்துகள் வேகமாகப் பெருகி வருகிறது. வருந்தத்தக்க இந்த நிலை கண்டு நமது முதலமைச்சர் அவர்கள் அனைத்துத் தாலுகா மருத்துவ மனைகளிலும் 'விபத்து வைத்தியப் பிரிவு' படுக்கை வசதியோடு கூடிய கட்டடம் கட்ட ஆணை பிறப்பித்துள்ளார்கள். பல இடங்களில் கட்டி வருகிறோம். சில இடங்களில் கட்டி முடித்துவிட்டோம்.

கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கும் வைத்திய வசதி தந்து உதவிட இந்த ஆண்டு 140 புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கூடுதலாகத் திறக்க ஆணை வெளியிட்டுள்ளார்.

வளர்ந்து வரும் புதுப்புது வைத்திய வசதிகள் அனைத்தும் தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விரும்பி பல அரிய கருவிகளை வாங்கி வைத்துள்ளார்கள். மேலும் வாங்க ஆணையிட்டுள்ளார்கள்.

மற்றொரு முக்கியமான அம்சம் சுற்றுப்புறச் சூழலாகும்.

சாக்கடை நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

வளர்ந்து வரும் நாட்டின் மிகப் பயங்கரமாக உருவாகி சமூகத்திற்கே பெருங்கேடாக மாறி வருவது தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரும் புகைபோக்கி வழியாக வழியும் நச்சுப் பொருட்களுமாகும். இது இப்போது பெரும் சவாலாக வளர்ந்துள்ளது.






தொழிற்சாலைகளின் கழிவு நீரைச் சுத்திகரிப்புச் செய்தாக வேண்டும். இல்லையேல் நிலத்தடி நீரே பாழாகிவிடும். இப்போதே பாலாற்றுப் படுகையில் நீர் பயனற்றதாகி விட்டது.

தொழிற்சாலையா? குடிதண்ணீரா? எது முக்கியம்? தோல் பதனிடுவோர் இதனை மனதில் கொண்டு விரைவில் சுத்திகரிப்பு ஆலை நிறுவ வேண்டும். தவறினால் அரசின் கடும் நடவடிக்கைக்கு ஆளாவர்.

தொழில் அதிபர்கள் சுகவாழ்விற்காகப் பொதுமக்களின் நல்வாழ்வினைப் பலியாக்க முடியாது.

செல்வம் இருந்தும் நோயோடு வாழ்ந்து என்ன இலாபம்? வறுமையோடு வாழலாம், ஆனால் நோயோடு வாழக்கூடாது!

சித்தர்கள் நமக்கென்று விட்டுச் சென்றுள்ள மருந்துகள்தான் பெரும்பாலான மேலைநாட்டு மருந்துகளாக மாறி வந்துள்ளன! இதனால்தான் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சித்த வைத்தியத்தை வளர்க்க முனைப்பாக உள்ளார்.

நாட்டு வைத்தியம் - நம்மில் பலருக்கு இதனுடைய பெருமை தெரிவதில்லை.

நாட்டு வைத்தியர்கள் நோயாளியின் கை நாடியைப் பிடித்து, பித்தம் - வாதம்-சிலேத்துமம் இவைகளைக் கணித்தே வியாதியின் தன்மையை உணர்ந்து மருந்தளிப்பார்கள். சித்த வைத்தியம் நோயின் வேரையே அறுக்கும்!

அலோபதியில் தீராத சில வியாதிகளை, சென்னை அண்ணா நகரில் உள்ள அண்ணா மருத்துவமனையில் குணப்படுத்துகின்றனர்.

நாட்டு வைத்தியம் பற்றிய நூல்கள் இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை; வைத்திருப்பவர்கள் அரசுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

சித்தம் மட்டுமல்ல, யுனானி-ஆயுர்வேதம்-ஹோமியோபதி இவைகளுக்கு உயிரூட்டும் நல்ல காரியம் பெரிய அளவில் சென்னையில் உள்ள அண்ணா மருத்துவமனையில் நடந்து வருகிறது.

பழைய வைத்திய முறைகள் பாதுகாக்கப்பட வேண்டியவைகளே ஒழிய பரிகசிக்கப்பட வேண்டியவைகளல்ல! மக்கள் இதனை உணர வேண்டும் என்பதற்காகத்தான் ஒவ்வொரு 'ஆரம்பச் சுகாதார நிலையத்திலும்' ஓர் சித்த மருத்துவர் நியமிக்கப்பட்டு வருகிறார்.

தமிழகத்தில் அனைத்து மருத்துவத்திலும் உலக வல்லுநர்களோடு ஒப்பிடத்தக்கவர்கள் உள்ளனர். ஏன், மேலை நாட்டாரும் வியக்கத்தக்க வகையில் பணியாற்றும் மருத்துவர்கள் தமிழ்நாட்டில் உள்ளனர்.

இந்தப் பெருமை மேலும் வளர, பொதுமக்கள் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் சென்னை வானொலியில் "வளரும் தமிழ்நாடு" நிகழ்ச்சியில் 19.4.87 அன்று ஆற்றிய உரை.**

## எமனாகத் திகழும் எய்ட்ஸ் நோய்

எய்ட்ஸ் நோயை எதிர்த்துப் போராடுவதற்காக உலகச் சுகாதார நிறுவனத்துக்கு 1987-ஆம் ஆண்டில் கூடுதலாக 50 இலட்சம் டாலர்களை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

எய்ட்ஸ் நோயாளிகளில் பெரும்பாலானவர்கள், "நரம்பு ஊசி" மூலம் போதை மருந்தை ஏற்றிக் கொண்டதனாலேயே அந்த நோய்க்கு ஆளானவர்கள் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. எனவே, போதை மருந்துப் பழக்கத்துக்கும் எய்ட்ஸ் நோய்க்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

இந்தக் கொடிய மர்ம நோயை வேரறுப்பதற்கு மனித குலம் தனது முழு ஆற்றலையும் திறமையையும் செலவிட வேண்டும். எய்ட்ஸ் நோய் பற்றிய ஆய்வுப் பணிகளையும், அந்நோயைப் பற்றிப் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து எச்சரிப்பதையும், எய்ட்ஸ் இரத்தப் பரிசோதனைத் திட்டங்களையும் உலக நாடுகள் தொடர்ந்து நடத்தி வர வேண்டும்.

எய்ட்ஸ் நோயை எதிர்த்துப் போராடுவதற்கான அனைத்து நாட்டுத் திட்டம் ஒன்றை உலகச் சுகாதார நிறுவனம் உருவாக்கியுள்ளது. 1987-ஆம் ஆண்டு ஏப்ரல் 29-ந்தேதி நிலவரப்படி, 104 நாடுகளிலிருந்து 48,498 எய்ட்ஸ் நோயாளிகள் பற்றி உலகச் சுகாதார நிறுவனத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உலகில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு இலட்சத்துக்கும் மேல் இருப்பார்கள் என்று இந்நிறுவனம் மதிப்பிடுகிறது!

* தமிழ்நாடு அரசு தனது குறைந்த அளவு நிதி வசதியில், புதிய கல்விக் கொள்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்களை நிறைவேற்ற முயற்சி மேற்கொண்டுள்ளது. மைய அரசின் நிதியுதவி கிட்டுமாயின் அதை நிறைவேற்றும் பணி இன்னும் துரிதமாக்கப்படும்.

தேசிய கல்விக் கொள்கையில் கல்வி வளர்ச்சிக்காகத் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கியமான அம்சங்கள், தமிழ்நாடு அரசுக்கு இசைவானவையாகவே உள்ளன. பார்க்கப் போனால், தேசிய கல்விக் கொள்கையின் முக்கியப் பரிந்துரைகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு ஏற்கெனவே முன்னோடியாக இருந்து வந்துள்ளது.

# புதிய கல்விக் கொள்கை

மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் **திரு சி. பொன்னையன்**

கல்விக்காக 1987-88-ஆம் ஆண்டில் ஒதுக்கியுள்ள ரூபாய் 597 கோடி. அவ்வாண்டு வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூபாய் 2,874 கோடியில் சுமார் 21 விழுக்காடாகும்.

வரவு செலவு மதிப்பீட்டில், பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்கங்களைக் கணக்கில் கொண்டால், 1987-88ஆம் ஆண்டில் கல்விக்காகச் செலவிட இருக்கும் தொகை ரூ. 734 கோடியாகும்.

இவ்விட்த்தில் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது பின்வருவதாகும்—அதாவது ஆதிதிராவ்டர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர் நலப்பள்ளிகள், விடுதிகள், ஆதி திராவிடர் பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவு; சீர்திருத்தப்பள்ளிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், ஊனமுற்றோர்களுக்கான பள்ளிகள் போன்றவற்றிற்காக ஆகும் செலவு; மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகிய வகைக் கல்விகளுக்கும் ஆகும் செலவு ஆகிய செலவினங்கள் கல்விச் செலவு பற்றிய மேற்கண்ட புள்ளி விவரங்கள் எவற்றிலும் சேரவில்லை.

புதிய கல்விக் கொள்கையை உருவாக்கும் பொருட்டு மைய அரசு 1985 ஆகஸ்ட் திங்களில் 'கல்வி ஒரு சவால்-ஒரு கொள்கைத் தொலை நோக்கு' என்னும் முன்னோடி அறிக்கையை வெளியிட்டது. பின்னர் நாடுதழுவிய விவாதத்திற்குப் பின்னர், புதிய தேசிய கல்விக் கொள்கை 1986 மே திங்களில் நாடாளுமன்றத்தில் வைக்கப் பெற்றது.

தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவது குறித்து மைய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பணியை மைய அரசின் 'மனித ஆற்றல் மேம்பாட்டு அமைச்சகம்' கவனித்து வருகிறது. இக்கொள்கையின் பல்வேறு அம்சங்களை அமல்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதற்கான விரிவான செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அவை வருமாறு:

தொடக்கப்பள்ளி நிலையில் பள்ளியில் சேரும் மாணவர் மாணவியர் எண்ணிக்கையை அதிகரிக்க ஊக்குவிப்புத் திட்டங்கள் (முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்களுக்கு இலவச உணவளிக்கும் மாபெரும் திட்டம் 1-8 வகுப்பு மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் இலவசச் சீருடைகள் வழங்குதல் முதலியன) மேல்நிலைப்பள்ளி நிலையில் தொழிற் கல்விப் பாடங்கள்; பெரிய அளவிலான வயது வந்தோர் கல்வித் திட்ட நடவடிக்கைகள்; சுயாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் அமைத்தல்; ஆசிரியர்கள் தம்திறனை முழுமையாகக் கல்விப் பணியில் செலுத்தும் வண்ணம் அவர்களுக்குச் சலுகைகளும், நன்மைகளும் பல அளித்தல்; பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் மூலம் கல்வி வளர்ச்சிக்கு உள்ளூர் மக்களின் நன்கொடைகளையும் ஒத்துழைப்பையும் பெறுதல்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதி ஆண்டாகிய 1989-90-ஆம் ஆண்டின் இறுதிக்குள் அடைய வேண்டும் என மைய



அரசு கருதியுள்ள இலக்குகள் 6-11 வயது குழந்தைகளுள் 100 சதவிகிதமும், 11-14 வயது குழந்தைகளுள் 75 சதவிகிதமும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டுமென்பதாகும். தமிழ் நாட்டில் இப்பொழுது (1986-87) 6-11ஆம் வயதுத் தொகுதியினருள் பள்ளியில் சேர்ந்துள்ளோர் விழுக்காடு 100 சதவிகிதத்தையும், 11-14 வயதுத் தொகுதியினருள் பள்ளியில் சேர்ந்துள்ளோர் விழுக்காடு 79.63 சதவிகிதத்தையும் எய்தியுள்ளது மகிழ்வு தரத்தக்கதாகும். இளஞ்சிறார் கல்வியிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது.

வயது வந்தோர் கல்வியில் தமிழ்நாட்டின் சாதனை சிறப்பாக இருந்து வருகிறது. வயது வந்தோர் கல்வி மையங்களில் பெண்களைச் சேர்ப்பதில் சிறந்த பணியாற்றியதற்கான விருதுகளைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

நாடு முழுவதிலும் மேல் நிலைப் பள்ளி மாணவர்களில் தொழிற்கல்விப் பாடங்களைப் பயிலுவோர் 1990-ல் 10 விழுக்காட்டினராகவும், 1995-ல் 25 விழுக்காட்டினராகவும் இருக்க வேண்டுமென்பது தேசிய கல்விக் கொள்கை வகுத்துள்ள இலக்காகும். தமிழ் நாட்டிலோ மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற் கல்விப் பாடங்களைப்பயின்று வந்தோர் எண்ணிக்கை 1986-87லேயே 24 விழுக்காடாக இருந்து வந்தது.

அனைத்து மாநிலங்களிலும், தமிழ் நாட்டில்தான் சுயஆட்சி உரிமை பெற்றுள்ள கல்லூரிகள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. 'மாநில உயர் கல்விக் குழு' அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

புதிய கல்விக் கொள்கையில் தெரிவிக்கப் பட்டுள்ள ஓரிரண்டு விஷயங்களில் மட்டும் இவ்வரசின் நிலை மைய அரசின் கொள்கைக்கு மாறுபட்டதாக உள்ளது. இவ்வரசின் நிலை அவ்வாறு மாறுபட்டதாகத் தோன்றிய போதிலும், அது விழுமிய கல்வீத் தத்துவங்களின் அடிப்படையில் அமைந்த நிலையே ஆகும்.

புதிய கல்விக் கொள்கை, பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையைப் பரிந்துரைத்துள்ளது. தமிழகச் சட்ட மன்றத் தீர்மானத்தின்படி அறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த தமிழக அரசு தமிழ்நாட்டுப் பள்ளிகளில் (கல்வித்துறை நிலை ஆணை 105/ 24-1-1968-ன் படி) இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்தியது.

மும்மொழிக் கொள்கை எந்த நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதோ, அதற்கேற்ப உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற இந்தி பேசும் மாநிலங்களில் குடியேறி வசிக்கும் தென்னிந்தியர் சங்கங்கள் நடத்தும் ஓரிரு பள்ளிகளைத் தவிர, பிற பள்ளிகளில் பள்ளிப் பாடத் திட்டத்தில் மூன்றாவது மொழியாகத் தென்னிந்தியமொழிகள் எவையும் கற்றுத் தரப்படுவதில்லை. சொல்லப் போனால் இந்தி மாநிலங்களில் பெரும்பாலான பள்ளிகளில் ''ஒரு மொழிக் கொள்கையே'' பின்பற்றப்படுவதாகக் கூறலாம்—அதாவது 6-8 வகுப்புகளில் மட்டுமே ஆங்கிலம் கட்டாயப் பாடமாகக் கற்றுத் தரப்பட்டு, அதற்கு மேல் வகுப்புகளில் அம்மொழி இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததும், இந்தியோடு நெருங்கிய தொடர்புடையதுமான சமஸ்கிருதமே கற்றுத் தரப் படுகிறது.



தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் இருமொழிக் கொள்கையின் கீழ் மொழிச் சிறுபான்மையினருக்குத் தக்க பாதுகாப்பு இருக்கிறது. அவர்கள் பகுதி 'ஏ' இன் கீழ் தங்கள் தாய்மொழியைப் பயிலலாம். தங்கள் தாய் மொழியோடுகூடத் தமிழையும் பயில விரும்பும் மொழிச் சிறுபான்மையினர் பள்ளி நேரமல்லாத நேரங்களில் அவர்களுக்குத் தமிழ் கற்றுத்தரப் பள்ளிகளிலுள்ள வசதிகளைப் பயன்படுத்தித் தமிழ் கற்றுக் கொள்ளலாம்.

மாணவ மாணவியர்கள் பயில வேண்டிய மொழிகளின் எண்ணிக்கைச் சுமையைக் கருதிப் பார்க்கும் பொழுதும் இரு மொழிக் கொள்கையே பின்பற்றத் தக்கதாகிறது. அறிவியலிலும், தொழில் நுட்பவியலிலும் கடும் விரைவான வளர்ச்சிகள் நடைபெறும் இக்காலத்தில், வளர்ச்சி பெற்ற நாடுகளின் மாணவர்களைப் போல முன்னேற வேண்டுமாயின் நமது மாணவ, மாணவியர் மொழிகளைக் கற்கச் செலவிடும் காலத்தைக் குறைத்துப் பாடங்களைக் கற்கச் செலவிடும் காலத்தை அதிகரிப்பதே பொருத்தமானதாகும்.

'நவோதயா' பள்ளிகளில் அந்தந்த மாநில மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமெனவும் மொழிச் சிறுபான்மையினருக்கும் பிற மாநில மாணவ மாணவியருக்கும் பயன்படுவதற்காகத்தேவையானால் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவும் இருக்கலாம் எனவும் இவ்வரசு கருதுகிறது.

தேசிய கல்விக் கொள்கை மற்றும் வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சரின் திட்டம் ஆகியவற்றிற்கேற்ப பாடத் திட்டக் குழுக்கள் தமிழகப் பள்ளிகளுக்கான பாடத் திட்டங்களை முற்றிலுமாக மாற்றியமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இப்பணியில் அவை டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா தலைமையிலான உயர் மட்டக் குழுவின் வழி நடத்துதலின்படி செயல்படுகின்றன.

மாநில அரசு தனது குறைந்த அளவு நிதி வசதியைக் கொண்டு புதிய கல்விக் கொள்கையிலுள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட அம்சங்களை, இயன்ற அளவுக்கு நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மைய அரசு ஏழாவது திட்ட காலத்தில் எஞ்சியுள்ள காலத்திலாவது இதற்கான தனது நிதியுதவியை அதிகரிக்க முன்வருமாயின், புதிய கல்விக் கொள்கையை நிறைவேற்றும் பணி இன்னும் துரிதமாக்கப்படும்.

**[சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட தமிழ்நாடு அரசு கல்வித்துறை மானியக் கோரிக்கை (1987-88) யின் ஒரு பகுதி.]**

# படமும் - செய்தியும்



மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் மூன்று நாள் பயணமாகச் சென்னை வந்தபோது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாலையணிவித்து மகிழ்ச்சி தெரிவிக்கும் காட்சி (25.5.87).



மேதகு இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சென்னைக்கு வருகைதந்தபோது மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்களும், மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களும் விமான நிலையத்தில் வரவேற்றனர் (16-5-87).

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2 O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்.
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/என்ஏஎஸ்.

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

# சட்டப் பேரவையில் திரட்டியவை

* கலப்பு மணம் செய்து கொள்பவர்கள் ஆறு மாத காலத்திற்குள் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றிருந்த காலவரம்பு இரண்டு ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

* ஆண்டுக்கு ரூ. 4800-க்குக் குறைவாக வருவாய் உள்ள ஏழை மக்களை அடகுக்காரர்களிடமிருந்து பாதுகாக்க வகை செய்யும் கடன் நிவாரண திருத்தச் சட்டம் சட்டப் பேரவையில் நிறைவேறியது.

* ஊழல் புரிந்தவராக உள்ள அல்லது தமது நிலையைத் தவறாகப் பயன்படுத்திய ஊராட்சித் தலைவர் அல்லது பேரூராட்சி உறுப்பினர் அல்லது ஊராட்சி ஒன்றியத் தலைவர் அல்லது நகராட்சித் தலைவர் அல்லது நகராட்சி மன்ற உறுப்பினர் ஆகியோரை அப்பதவிகளிலிருந்து திரும்ப அழைக்க வகை செய்யும் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது.

* ஆலயங்களில் இனி புதிதாக நியமிக்கப்படும் காவலர்கள், ஓய்வு பெற்ற இராணுவத்தினராகவோ அல்லது கூர்க்காவாகவோ இருக்க வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* திரைப்படங்கள் தொடர்பான ஆபாச விளம்பரச் சுவரொட்டிகள், ஓவியங்கள், வன்முறையைத் தூண்டும், மத, இன,மொழி பற்றிய சுவரொட்டிகள் மற்றும் விளம்பரப் பொருட்களைக் கட்டாயமாகத் தணிக்கை செய்ய வகை செய்யும் சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்பட்டது.

* நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் இதுவரை 1 இலட்சத்து 66 ஆயிரத்து 757 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 1 இலட்சத்து 24 ஆயிரத்து 275 ஏக்கர் நிலம் விநியோகிக்கப்பட்டது.

* மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்களை அவமதிக்கும் வகையில் உள்ள திரைப் படங்களைக் காட்டுவோருக்குச் சிறை தண்டனை விதிக்க வகை செய்யும் மசோதா நிறைவேற்றப்பட்டது.



- அன்னை இந்திராவுக்குச் சென்னையில் சிலை!

- அடகுக்காரர்களிடமிருந்து ஏழைகளைப் பாதுகாக்க புதிய சட்டம்!

- தனி நபர்கள் நிலத்தடி நீர்எடுக்கக் கட்டுப்பாடு!

- ஆலயங்களுக்குக் காவலர்கள் நியமிப்பதில் புதிய முறை!

* தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத் தொடர், கடந்த பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதி மேதகு ஆளுநர் அவர்கள் உரையுடன் தொடங்கியது. 11.5.87 அன்று மறுதேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பட்டது. ஆக மொத்தம் 44 நாட்கள், சரியாக 210 மணி 45 நிமிடங்கள் இந்தமுறை சட்டமன்ற நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. மார்ச்சு மாதம் 20-ஆம் தேதி வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டது.

* முன்னாள் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அம்மையாரின் திருவுருவச்சிலையை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது, சிலையை எந்த இடத்தில் அமைப்பது என்பது பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்வார்.

* கையினால் வரையப்பட்ட அன்னை இந்திராகாந்தி அம்மையாரின் திருவுருவப் படம் சட்டமன்றத்தில் வைக்கப்படும். இதற்கான ஓவியர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பணிமுடிக்கப்பட்டு விரைவில் படம் திறந்து வைக்கப்படும்.

* தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறை எடுத்த முடிவிற்கேற்ப, தஞ்சாவூர், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வந்த பயணியர் விடுதிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது நிர்வாகத்தின்கீழ் எடுத்துக் கொண்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திவரும் ஓட்டல்களோடு இவை இணைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்துதரும்.

* தமிழ்நாட்டில் இவ்வாண்டு 38 புதிய காவல் நிலையங்களும், 10 புறக்காவல் நிலையங்களும், 2 போக்குவரத்துக் காவல் நிலையங்களும் நிறுவப்பட உள்ளன.

* சென்னை நகரிலும், செங்கல்பட்டு, மாவட்டத்தின் சில பகுதிகளிலும் தொழிற்சாலைகள் மற்றும் தனி நபர்களால் நிலத்தடி நீர் வகை தொகையின்றிப் பிரித்தெடுக்கப் படுவதை முறைப்படுத்திக் கட்டுப்படுத்தும் மசோதா நிறைவேற்றப்பட்டது.

---




பத்திரிகையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, தவணை முறைத் திட்டத்தின் கீழ் சென்னையில் பத்திரிகையாளர்களுக்கு நூறு வீடுகள் கட்டித் தரப்படும். இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிலேயே திட்டப்பணிகள் தொடங்கும். இத்திட்டத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார் என்று (7-5-1987) சட்டப் பேரவையில் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

மாவட்டத் தலைநகரங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அரசு ஊழியர்களுக்காகக் கட்டியுள்ள வாடகைக் குடியிருப்புகளில் தற்போது பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்படும் ஒதுக்கீடு எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. சென்னையில் ஒதுக்கீடு செய்யப்படும் வாடகை வீடுகளின் எண்ணிக்கை ஐம்பதிலிருந்து அறுபதாகவும்- மதுரை, திருச்சி, கோவை, உதகை, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தஞ்சை உள்ளிட்ட மாவட்டத் தலைநகரங்களில் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் எண்ணிக்கையைப் பதினைந்தாகவும் உயர்த்துவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கச் சொல்லியிருப்பதாக மாண்புமிகு வீட்டு வசதித் துறையமைச்சர் அவர்கள் அவையில் தெரிவித்தார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தவிர மற்ற மாவட்ட தலைநகரங்களில் பத்திரிகையாளர்களுக்கான வாடகை வீடு ஒதுக்கீட்டின் எண்ணிக்கை பத்தாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'உலகச் சுற்றுப்புறச் சூழ்நிலை நாள்' ஜூன் 5

# சுற்றுப்புறச் சுகாதாரம்

'சுத்தம் சோறு போடும்' என்பார்கள் கிராமப்புறங்களில்.

சுத்தம் எப்படிச் சோறு போடும்?

அவசரப்பட்டு இப்படிக் கேட்பது அறிவுடைமையாகாது. ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய சொல்லாகும் இது.

வீதியோரங்களில் தாடியும் மீசையும், அழுக்காகிக் கிழிந்து உடம்பை வெளிக்காட்டும் உடையுமாய்க் கிடக்கும் பிச்சைக்காரர்களைப் பார்க்கிறோம். அவர்களைப் பார்த்தாலே நாம் முகம் சுளிக்கிறோம். 'ஐயா, சாமி' என்றோ 'அம்மா தாயே', என்றோ அவர்கள் பலவீனமாகக் கொடுக்கின்ற குரலைக் கேட்டாலே அருவருப்படைகிறோம். நகமும் வெட்டப்படாமல் அவர்கள் ஏந்துகின்ற அழுக்குக் கைகளில் வேண்டா வெறுப்போடு காசைப் போட்டுவிட்டுத் திரும்பிப் பார்க்காமலே நடக்கிறோம்.

சோற்றுக்கு வழியில்லை; ஆகவே, அவர்களால் சுத்தமாக இருக்க முடியவில்லை என்று சிலர் கூறலாம். சோற்றுக்கு வழியில்லாவிட்டாலும் அவர்கள் சுத்தமாக இருக்கும் பட்சத்தில், சோறு என்ன-அவர்களுக்கு வேலையே தரக்கூட நம்மில் பலரும் தயார்தானே?

வேலை கிடைக்கும்போது நிச்சயம் கூலி கிடைக்கும்; கூலி கிடைக்கிறபோது அதன் மூலம் உறுதியாகச் சோறு கிடைக்கும்.

உண்டா இல்லையா? ஒரு நிமிஷம் சிந்தியுங்கள்.

'சுத்தம் சோறு போடும்' என்பதற்கு இப்போது உங்களுக்கெல்லாம் பொருள் விளங்கியிருக்கும். 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்ற சொற்கோவைக்குள் எவ்வளவு அருமையான அறிவுரை புதைந்து கிடக்கிது என்பதைச் சிறிது நிதானிப்போமானால் நாம் புரிந்துகொள்ள முடியும்.



நோயுற்றவர்கள் உடுத்தும் உடைகளை, அவர்கள் படுக்கின்ற படுக்கை விரிப்புகளை மருத்துவர்கள் அன்றாடம் மாற்றவேண்டும், வெந்நீரில் துவைக்க வேண்டும் என்றெல்லாம் கூறுவார்கள். ஏன் தெரியுமா? துணிகளில் படியும் அழுக்கிலிருந்தும் நோய்க் கிருமிகள் உற்பத்தியாகி வியாதியின் வேகத்தை அதிகரிக்கச் செய்துவிடும்.

நோய்வாய்ப்படுகிறவர்கள் வசதியுள்ளவர்களாக இருந்தால் நாளுக்கொரு துணி மாற்றிக் கொள்ள அவர்களால் முடியும். வசதியற்றவர்களாக இருந்தால்? இருக்கின்ற இரண்டு துணிகளை மாற்றி மாற்றிக் கட்டவேண்டிய அளவுக்கு வறியர்களாக இருந்தால்?

இப்படிப்பட்ட இயலாதவர்களுக்காக எழுந்த முதுமொழிதான் 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்பது.

'சுத்தம் சுகம் தரும்' என்பதெல்லாம் இந்த அடிப்படையிலே கூறப்படுவதுதான்.

சுத்தமாக இருப்போமானால் நாம் நோயற்ற சுகவாழ்வு வாழ்பவர்களாகத் திகழ முடியும். அசுத்தத்தில் ஆனந்தம் காண்பவர்களாக இருந்தால் நம் வாழ்நாளின் எண்ணிக்கையை நாமே குறைத்துக் கொண்டவர்கள் ஆகிவிடுவோம்.

சுத்தத்தை நோய் எதுவும் அணுகுவதில்லை.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று பெரியவர்கள் இதைத்தான் சொன்னார்கள்.

மேதை ஒருவருக்காக விருந்தொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விருந்துக்குச் சவரம் காணாத முகத்தோடும் அழுக்காகிக் கசங்கிய உடையோடும் ஒருவர் வந்தார். அவரை உள்ளே விடாமல் திருப்பியனுப்பி விட்டார்கள் வாயிலில் நின்றவர்கள்.

ஒருமணி நேரம் கழித்து விருந்து தொடங்கியது. முக்கிய விருந்தினரான அந்த மேதை, தனக்கு முன்னாள் இருந்த இலையில் வைத்திருந்த இனிப்பு வகை

யறாக்களையும், பதார்த்தங்களையும் எடுத்து ''நீ சாப்பிடு'' என்று தன் சலவைக் கோட்டிலும் பேண்ட்டிலும் போட்டார்.

அதை வியப்போடு பார்த்த மற்றவர்கள் ''தாங்கள் இப்படிச் செய்வதன் காரணமென்ன?'' என்று கேட்டார்கள்.

''விருந்து துவங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னால், நான் எப்போதும் எப்படியிருப்பேனோ அப்படி இங்கு வந்தேன், வாயிலில் நின்றவர் என்னை விடவில்லை. பிறகு என்னை நானே இரவல் உடையில் அலங்கரித்துக் கொண்டு வந்த பின்புதான் உள்ளே விட்டார்கள். ஆகவே, இந்த விருந்து என் கோலத்திற்குத் தானே தவிர, எனது மேதைமைக்கு இல்லை அல்லவா? ஆகவேதான் இப்படிச் செய்கிறேன்'' என்றார் அந்த மேதை.

இளமைப் பருவத்தில் இப்படியொரு கதையை நாம் கேட்டிருக்கிறோமல்லவா?

அந்தக் கதையின் மூலக் கருத்து மதிப்பும் மரியாதையும் சுத்தத்திற்குத்தானே தவிர அசுத்தத்திற்கு இல்லை என்பதுதானே?

ஆகையால் நாமும் நம்மைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதில் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் நாம் மட்டும் அப்படியிருப்பது மட்டும் போதாது. நம்மைச் சுற்றியிருப்பவர்களையும் அப்படியிருக்கும்படித் தூண்ட வேண்டும்.

நம்வீடு, நம் பெண்டு, நம் பிள்ளை, நம் சுற்றம் மட்டுமே சமூகத்தில் மதிப்படைய வேண்டும் என்று கருதுவது சுயநலமாகிவிடும். அடுத்த வீடு, எதிர்வீடு, நமது தெரு, நமது ஊர், நமது மாநிலம், நமது இந்தியா எல்லாமே உலக அந்தஸ்தில் உயர நினைப்பதுதான் பொதுநலம்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்!'' எனப் பாடிய பண்டைத் தமிழர் வழிவந்தவர்களல்லவா நாம்?

ஆகவே, சுயநலக் கருத்தைத் தவிர்ப்போம். பொது நலம் விரும்பி நம்போல் மற்றவர்களும் மதிப்படைய நினைப்போம். எல்லோரோடும் சேர்ந்து நாமும் உயர்வோம் என நாம் ஒவ்வொருவரும் உறுதிபூண வேண்டும். நம் சுற்றுப்புறம் சுத்தமாக இருந்தாலன்றி நாம் சுத்தமாக இருக்க முடியாது.

# சுற்றுப்புறத் தூய்மை பாதுகாப்பு

சுற்றுப்புறத் தூய்மை பாதுகாக்கப்பட, நாம் ஆற்றவேண்டிய கடமைகள் யாவை?

—இந்தக் கேள்விக்குச் சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத் துறை இரண்டு டஜன் ஆலோசனைகளை நமக்கு இலவசமாக வழங்குகிறது. இதோ அவை :

(அ) ஒவ்வொருவரும் தன் வீட்டையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

(ஆ) வீட்டில் மரங்கள் வளர்க்க வேண்டும்; இருக்கும் மரங்களை வெட்டக் கூடாது.

(இ) பொதுமக்கள் ஒன்றாக முடிவெடுத்துக் கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள தெருக்கள், மற்ற பொது இடங்கள் ஆகியவற்றைச் சுத்தமாக வைக்கப் பழகிக் கொள்ள வேண்டும். பூங்காக்கள் அமைத்து, மரங்கள் வளர்த்து அவற்றை நன்கு பராமரிக்க வேண்டும்.

(ஈ) வீட்டிலிருந்து வரும்கழிவு நீர், வீட்டின் உள்ளேயோ, தெருக்களிலோ வழிந்து ஓடக் கூடாது. கழிவுநீர்ச் சாக்கடைகள் ( Septic Tanks ) போன்றவையால் இதைத் தவிர்க்கவேண்டும்.

(உ) தொழிற்சாலைகளை எங்கு வேண்டுமானாலும் அமைக்கலாம் என்ற நிலை மாற வேண்டும். உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் நகரமைப்பு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், மாசுக் கட்டுப்பாடு வாரியம்(Town Planning M.M.D.A. Pollution Control Board) போன்ற அமைப்புகளின் அறிவுரைகளையும், அனுமதியையும் பெற்ற பிறகே தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும். பொதுமக்களுக்கு இடைஞ்சல் விளைவிக்கக் கூடிய- நீர், காற்று மாசுபடக் கூடிய தொழிற்சாலைகளை அனுமதியின்றி ஆரம்பித்தால் சட்டப்படி தண்டனை பெறக்கூடிய ஆபத்தும் உண்டு.

(ஊ) மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதி அளிக்கும் பொழுது விதிக்கும் நிபந்தனைகளைத் தவறாமல் பின்பற்றினால் நீர், காற்று மாசுபடுவதையும், குற்றம் செய்வதையும் சட்டப்படி தவிர்க்கலாம்.

(எ) மிருகங்கள், பறவைகள், பாம்புகள் மற்றும் பிற உயிரினங்களை அழிக்கக் கூடாது. மிருகங்களை வேட்டையாடுவது சட்டப்படி குற்றமாகும்.

(ஏ) நச்சுப் பொருள்கள், விரைவில் நெருப்புப் பற்றிக் கொள்ளும் பொருள்கள், வெடி மருந்துகள், அமிலங்கள் போன்றவற்றை சேமித்து வைக்கும் இடங்கள், ஏற்றிச் செல்லும் லாரிகள், குழாய்கள் போன்றவற்றைப் பராமரிப்பதிலும் கண்காணிப்பதிலும் மிக எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஒருவர் கவனக்குறைவாக இருந்தாலும் பலர் அல்லல் படவேண்டி வரலாம். தொழிலாளர்களுக்கு இப்பொருள்கள் பற்றி நல்ல பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

(ஐ) இலாபத்தைக் கருதி மாசுக் கட்டுப்பாட்டிலும், ஆபத்தான பொருள்களை (Hazardous Materials) கையாளுவதிலும் தேவையற்ற சிக்கனம் காட்டக் கூடாது.

(ஒ) தேவைகளைக் குறைத்துக் கொண்டு வளங்கள் இன்னும் பல்லாயிரம் ஆண்டு கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். கார், லாரிகள், பஸ், மோட்டார் சைக்கிள் போன்றவைகளைநன்கு பராமரித்தல் மிக முக்கியம். இதனால் காற்று மாசுப்படுவதுகுறையும்.

(ஓ) சூரிய ஒளி, காற்று போன்றவற்றிலிருந்து பெறக்கூடிய புதிய சக்திகளை ( New Sources of energy ) அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், நிலக்கரி ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் சிக்கனம் தேவை.

(ஔ) அணைக்கட்டுகள், மின்சார உற்பத்தித் திட்டங்கள், சாலைகள், சுற்றுலா மையங்கள் போன்றவற்றைத் துவக்கும் முன் சுற்றுப்புறத் தூய்மை பாதிக்கப்படுமா, திட்டத்தின் நீண்டகால விளைவுகள் என்ன என்பதை எல்லாம் நன்கு ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

இன்சூரன்ஸ்—நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!

(ஜெனரல் இன்ஷூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

# மனத் தூய்மை

மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் பண்புக்கும் பாங்குக்கும் நாம் சொந்தக்காரர்கள் ஆகவேண்டும்; அதுவே வாழ்க்கை வெற்றிக்கு வழிகாட்டும்!

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம். ஜி. ஆர்



தாரே அழுகிவிட்ட பிறகு ஒரே ஒரு வாழைப்பழம் மட்டும் நல்லபடி இருக்க முடியாதல்லவா? ஆகவே, முதலில் நாம் நம் சுற்றுப்புறத் தூய்மையை முதலாவதாகப் பாதுகாக்க வேண்டும்.

நிலத்தையும் நீரையும் காற்றையும் கெடுப்பதில் முதலிடம் வகிக்கின்ற தொழில் நிறுவனங்கள், நமது சமுதாயக் கடமையை உணர்ந்து கழிவுப் பொருட்களை முறையாக அப்புறப்படுத்த முன் வரவேண்டும்.

கழிவுப் பொருட்களை வெளியேற்றவும், ஒதுக்கவும் சரியான இடம் அமைத்தல், சில நேரங்களில் மூலப் பொருட்களையும் தொழில் முறைகளையும் மாற்றிக் கொள்ளுதல், ஆலைகளைச் சுகாதாரமாக வைத்திருத்தல் ஆகியவற்றின் மூலமே அவ்வகைக் கேடுகளைத் தொழில் நிறுவனங்கள் களையலாம். கழிவுப் பொருட்களை வெளியேற்றுவது குறித்து தொழிலுக்குரிய திட்டத்தின் ஆரம்பத்திலேயே சிந்தித்து, தொழிலின் ஒரு முக்கியப் பகுதியாக இதையும் கருதிச் செயல்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக - சுற்றுப்புறத்தைக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு பொது மக்களிடம்தான் இருக்கிறது. நமது சுற்றுப்புறத்தைக் காக்க வேண்டியதன் அவசியத்தை நாம் நன்குணர வேண்டும். தவறினால் அதன்பின் ஏற்படும் கேடுகளை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஒவ்வோராண்டும் ஜுன் 5ஆம் தேதி 'உலகச் சுற்றுப்புறச்சூழ்நிலை நாள்' என உலகு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

இந்த நாளிலேதான் ஐ.நா. பொதுச் சபையில் உறுப்பு நாடுகள் முதலாவது தடவையாக 1972 ஜூன் மாதத்தில் 'ஸ்டாக்ஹோம்' நகரில் கூடியது. அப்போதுதான் உலகத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலை கெடுவதற்கான காரணங்கள் மீது எல்லா நாடுகளின் கவனமும் திரும்பியது. வாழ்வாங்கு வாழ்வதற்கு மிக முக்கியத் தேவையான இது குறித்து அப்போது அன்னை இந்திரா காந்தி அவர்கள் அங்கே தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து உரை நிகழ்த்தினார்.

வளரும் நாடுகளிலுள்ள சுற்றுப்புறச்சூழல் பிரச்னைகள், போதிய அளவுக்கு மேம்பாடு அடையாத சூழ்நிலைகளாலேயே ஏற்படுகின்றன என்கிற உண்மையை ஐ.நா. மனிதச் சுற்றுப்புறச் சூழல் மாநாடு வலியுறுத்தியுள்ளது.



குடிநீர் வசதி, வீட்டுச் சுகாதார வசதி, எரிபொருள், போக்குவரத்து, தொலைத் தொடர்புத்துறை, மருத்துவப் பாதுகாப்பு முதலியவை மிகக் குறைவாகக் கிடைப்பதனால்தான் சுற்றுப் புறச் சூழல் பிரச்னைகளே தோன்றுகின்றன.

இப்பிரச்சினைகளைச் சமாளிக்க, வாழ்க்கை மேம்பாடு என்பது ஓர் அத்யாவசியமானதே.

தொழில்நுட்ப உபயோகம், பொருளாதார வளர்ச்சிக்கான வழக்கமான முறை பொன்றவை இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதன்றித் தீவிரப்படுத்தவே செய்யும் என அறியப்படுகிறது.

இந்தியாவில், புதுதில்லியில் உள்ள விஞ்ஞானத் தொழில் நுட்பத் துறையில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் ஒருங்கிணைப்புக்கான தேசியக்குழு, மக்களுக்கு எவ்வகையில் சுத்தமான ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழ்நிலையை அளித்திட முடியும் என்று தொழில் துறைக்கும் அரசுக்கும் நல்ல பல ஆலோசனைகளைக் கூறி வருகிறது.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு பொதுவான சுற்றுப்புறச்சூழல் மேம்பாட்டுக்கு மிக முக்கியமானதாகும் என்று இக்குழு கருதுகிறது. காற்று, தண்ணீர், நிலம் ஆகியவற்றின் அசுத்தத்தைத் தடுப்பதற்காக குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் அதிகமான மனிதக் குடியேற்ற மேம்பாட்டின் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்என்று இக்குழுவானது வேண்டுகோள் விடுத்தது. அதற்குச் செவிமடுப்போம். சுகம்தரும் சுத்தத்தைப் பரவலாக்கும் பணியில் நாள்தோறும் நாம் ஈடுபடுவோம்.

—'ராஜூ'

# குமரி மாவட்டச் சிறப்புத் திட்டங்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 23,000 எக்டேர் பரப்பில் இரு போகப் பயிராக நெல்லும், 12,000 எக்டேரில் மரவள்ளியும், 17,000 எக்டேரில் தென்னையும், 4,000 எக்டேரில் பயறு வகைப் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகிறது. இம்மாவட்டத்தில் இப்போது கிடைக்கும் சராசரி நெல் மகசூலை விட எக்டேருக்கு 750 கிலோ அதிக மகசூல் கிடைக்கவும், பயறு உற்பத்தியில் எக்டேருக்குக் குறைந்தது 400 கிலோ கிடைத்திடவும், தேங்காய் உற்பத்தியில் மரம் ஒன்றிற்கு ஆண்டுக்கு இப்போது கிடைக்கும் 45 தேங்காய்களை 65 ஆக உயர்த்திடவும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

கிராம அளவில் திட்டமிட்டு செயலாற்றி விளைச்சல் திறனை உயர்த்துதல் அதாவது இப்போது பெறும் விளைச்சலைவிட 1 எக்டேருக்குக் குறைந்தது 750 கிலோ நெல் அதிகமாகப் பெற, நீர் நிலைகளின் தன்மையை அறிந்து வேளாண்மைப் பணியாளர்கள் நல்ல பாசன நீர் உபயோகம், வடிகால் வசதி இவற்றை ஊக்குவிப்பதை தனது பணியாக ஏற்று செயல்படுத்த, நாளும், வெளிவரும் புதிய தொழில்நுட்ப முறைகளை விரிவாக்கப் பணியாளர் பகுதியில் அமைய இருக்கும் நிரூபண மையங்களில் பகுதிக்கேற்றதான பருவத்திற்கேற்ற தானப் பரிந்துரைகளைக் கடைபிடித்து விளைச்சல் திறனைப் பெருக்க, தொழில் நுட்பங்களை எல்லோரும் ஏற்று செயல்பட ஊக்குவிக்கும் இயக்கக் கூட்டங்களில் உழவர்கள் பங்கேற்று பயன் அடைய, பூச்சிநோய் தாக்குதல் கண்டறிந்து களப்பணியாளர்கள் கூறியவுடன் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக, ஒட்டு மொத்தமாக எடுத்திட, திட்டங்கள் வகுக்கப்பட்டு செயலாற்றப்படுகின்றன.



கோட்ட அளவிலே தொழில் நுட்ப செயல் விளக்க மையங்களையும், 3பி நிரூபணங்களையும் அமைத்து அதில் சிபாரிசு செய்யப்படும் நெல் ரகங்களைச் சாகுபடி செய்து அத்தனை தொழில் நுட்பங்களையும் கடைபிடித்து அதிக விளைச்சல் பெற்று அப்பகுதி விவசாயிகள் இவ்விளக்க மையங்களைப் பார்வையிட்டு தாங்களும் தங்கள் வயல்களில் சிபாரிசு செய்யப்படும் தொழில் நுட்பங்களை கையாண்டு உயர் விளைச்சலைப் பெற்றிட நிரூபண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி நிலையங்களால் கண்டுபிடிக்கப்படும் புதிய நெல் மற்றும் பயறு வகை இரகங்கள் இம்மாவட்ட சூழ்நிலைக்கு உகந்ததாக அமைகிறதா என்பதையும், ஆராய்ச்சி நிலையங்களால் சிபாரிசு செய்யப்படும் தொழில் நுட்பங்கள் இம்மாவட்டத்தில் நல்ல பலன் அளிக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கும், பண்ணைத் திடல்கள் ஆங்காங்கே அமைத்து இம்மாவட்டத்திற்கேற்ற நெல் இரகங்களை தேர்வு செய்வதோடு திருந்திய தொழில் நுட்பங்களும் கண்டறியப்படுகிறது.

உற்பத்தியைப் பெருக்குவதற்கு முக்கிய காரணமாக இருக்கின்ற உயர் விளைச்சல் இரகங்களை அதிக அளவில் சாகுபடி செய்ய விவசாயிகளிடம் எடுத்துக்கூறி



இம்மாவட்டத்திற்கு முதற் போகத்திற்கேற்ற டி. கே. எம். 9, பொன்னி, மற்றும் திருப்பதி சாரம்-1 போன்ற உயர் விளைச்சல் ரகங்களும், இரண்டாம் போகத்திற்கு ஐ. ஆர். 20, பொன்மணி போன்ற இரகங்களும் சிபாரிசு செய்து தேவையான சான்றிதழ் பெற்ற விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

புதிதாக வெளியிடப்பட்டுள்ள அமோக விளைச்சல் நெல் இரகங்கள் விவசாயிகளிடம் எளிதாகப் பரவுவதற்கு புது இரகங்களின் சிறு தளைப் பொட்டலங்கள் இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றன. இவ்வாண்டு ஐ. ஆர். 56, எயு. 42/1, டி.பி. 1974 மற்றும் ஐ. ஆர். 36 போன்ற புதிய இரகங்கள் சிறு தளைப் பொட்டலங்களாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறப்புத் திட்டங்களாக நெற்பயிரைத் தாக்கும் குலை நோய் கட்டுப்படுத்துதல், இலைச்சுருட்டுப்புழு கட்டுப்படுத்துதல், எலி ஒழிப்புபோன்ற திட்டங்களுக்கு மானிய விலையில் பூச்சி மற்றும் பூஞ்சாண மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. களைகளை ஒழிப்பதற்கு களைக்கொல்லி மருந்துகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. இதைத் தவிர ஆதி திராவிட மற்றும் பழங்குடியினருக்கு 25 சதவீத மானிய விலையில் விதைகள் மற்றும் பூச்சிமருந்துகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இம்மாவட்டத்தில் இயங்கி வரும் மண் ஆய்வுக் கூடம் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக் கூடம் மூலம் ஆண்டு ஒன்றிற்கு 30 ஆயிரம் மண்மாதிரிகள் விவசாயிகளின் நிலங்களிலிருந்து எடுத்து மண் பரிசோதனை முடிவுப்படி உரம் இடுவதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. முக்கிய இடுபொருட்களான இரசாயன உரம் விநியோகத்தில் இவ்வாண்டு 7,000 டன் தழைச் சத்தும் 1800 டன் மணிச்சத்தும், 1800 டன் சாம்பல் சத்தும் விநியோகிக்கத் திட்டம் வகுக்கப்பட்டு தேவையான உரங்கள் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தனியார் உரக்கடைகளிலும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது

மாவட்ட அளவிலே பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தி அதிக விளைச்சல் பெறக்கூடிய விவசாயிகளுக்குப்பரிசுகள் வழங்கி விவசாயிகளிடையே உற்பத்தியைப் பெருக்குவதில் போட்டி மனப்பான்மையை உருவாக்கி மாவட்ட அரிசி உற்பத்தியைப் பெருக்கிட பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

> **மற்றவர்களிடம் பழகும் விதத்தையும் ஒழுக்கத்தையும் சிறுவயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால், அவனே எதிர்கால வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்!**
>
> **—தந்தை பெரியார்**

திருப்பதி சாரத்தில் இருக்கும் அரசு விதைப் பண்ணையில் சான்றிதழ் பெற்ற விதைகள் ஆண்டு ஒன்றிற்கு சுமார் 120 டன் அளவில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

திருப்பதிசாரத்தில் இயங்கி வரும் உழவர் பயிற்சி நிலையத்தால் விவசாயிகளுக்கு மற்றும் உழவர் பயிற்சி நிலைய அமைப்பாளர்களுக்கு இம்மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் பல்வேறு பயிர்களில் சாகுபடி முறைகள் பற்றி பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. மேலும் தொழில் நுட்பங்களை விவசாயிகள் உடனடியாக கடைபிடிப்பதற்கு கிராமங்கள் தோறும் உழவர் பயிற்சி நிலையத்தால் நிரூபணங்கள் செய்து காட்டப்படுகிறது.

இம்மாவட்டத்தில் பயறு உற்பத்தியைப் பெருக்கிட இவ்வாண்டு நஞ்செய்த தரிசில் 6,000 எக்டேர் பரப்பளவில் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக சுமார் 4 கிலோ பயறு விதைகள் கொண்ட 7,000 சிறுதளைப் பொட்டலங்கள் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட இருக்கிறது. இதைத் தவிர பயறு வகைப் பயிர்களின் உற்பததியை அதிகரிக்க 7,000 நுண்ணுயிர் பொட்டலங்கள் இலவசமாக விநியோகம் செய்யப்படும்.

எண்ணெய் வித்துத் துறையின் கீழ் பரப்பற்று, மற்றும் புத்தளத்தில் இயங்கிவரும் அரசு தென்னை நாற்றுப் பண்ணையிலிருந்து தரமான வீரிய நெட்டைக் குட்டை மற்றும் குட்டை நெட்டை, நெட்டை தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் சிறப்புத் திட்டமாக, தென்னையைத் தாக்கும் கேரளா வாடல் நோயைக் கட்டுப்படுத்த, இந் நோய்தாக்கிய மரங்களைவெட்டி மாற்றவும் அந்த இடங்களில் புதிதாக நெட்டை, குட்டை தென்னங்கன்றுகள் நடுவதற்கு மரம் ஒன்றிற்கு ரூபாய் 75 வீதம் வழங்கப்படும். மேலும் அவ்வாறு அளிக்கப்பட்டு நடப்படும் தென்னங்கன்றுகளுக்கு உரம் வைத்து வளர்த்திட ரூ. 2 மதிப்பிலான இரசாயன உரமும் வழங்கப்படுகிறது.

தென்னையைத் தாக்கும் தஞ்சாவூர் வாடல் நோயைக் கட்டுப்படுத்த 50 சதவிகித மானிய விலையில் காப்பர் கல்பேட் மருந்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. தென்னையில் காணப்படும் கருந்தலைப் புழுவைக் கட்டுப்படுத்த நாகர்கோவிலில் இயங்கி வரும் ஒட்டுண்ணி வளர்ச்சி நிலையத்தில் ஒட்டுண்ணியை வளர்த்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்து கருந்தலைப் புழு கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. தென்னையில் காணப்படும் காண்டாமிருக வண்டினைக் கட்டுப்படுத்தப் பச்சை மஸ்பார்டன் உற்பத்தி செய்து தொழு உரக்குண்டுகளில் இட்டு காண்டாமிருக வண்டுகளின் புழுக்களை ஒழிக்கும் திட்டமும் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

தோட்டக்கலைத் துறையின் கீழ் கன்னியாகுமரியில் ஒரு அரசு பழப்பண்ணையும், பேச்சிப்பாறையில் ஒரு அன்னாசி நாற்றுப் பண்ணையும் மிளகு நாற்றுப்பண்ணையும்செயல்பட்டு வருகின்றது. இந்த நாற்றுப் பண்ணைகளிலிருந்து பழச்செடி கன்றுகளும், அண்ணாசி நாற்றுக்களும், கிராம்பு ஜாதிக்காய், மிளகு நாற்றுக்களும் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் மேற்கு தொடர்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, மாதுளை, பலா மற்றும் கிராம்பு அண்ணாசி போன்ற பழ மரக் கன்றுகளும் விநியோகம் செய்யபடுகின்றன. உரம் மற்றும் பூச்சி மருந்துகள் 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யபட்டு வருகின்றது.

**வை புண்ணியமூர்த்தி**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், நாகர்கோயில்.**

# பாஞ்சைப் பதிஎனச் சொன்னாலே-வீரம் பாய்ந்து வருகுது தன்னாலே!



இந்திய விடுதலைப் போருக்கு முதன்முதலில் வித்திட்ட பெருமை வீரபாண்டிய கட்டபொம்மனைச் சாரும். இன்றைய சிதம்பரனார் மாவட்டத்தில் இடம் பெற்றிருக்கும் பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து அரசாட்சி செய்த அந்தக் குறுநில மன்னன் இந்திய வரலாற்றில் பெரும் புகழ் எய்தினான்.

இந்தியாவையும் இந்தியரையும் அடிமைப்படுத்திய ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர்க்கொடி ஏந்திய அந்த மாவீரனின் நினைவுநாள் விழா மே மாதம், 8, 9 ஆகிய நாட்களில் பாஞ்சாலங்குறிச்சியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

மே மாதம் 8ஆம் நாள் மாலை 5 மணியளவில் திருநெல்வேலி சங்கர கம்பர் குழுவினரின் நாயன இசையுடன் விழா தொடக்கமாகியது.

வீரபாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டுக் கழகத்தின் மாநிலத் தலைவர் அரிமா திரு மு. பரத பாண்டியன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சிதம்பரனார் மாவட்ட வருவாய் அலுவலர் திரு சிவசூரியன் விழாவுக்குத் தலைமை ஏற்றார். அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

'பொன்போன்ற இன்னுயிரைப் போரிலே நீத்து, தரணி காத்தவன் கட்டபொம்மன். இந்த அரசு அவன் பெயரில் மாவட்டம் அமைத்திருக்கிறது. மாநில அளவில் அவனுக்கு விழா எடுக்கிறது.

''அவனது முன்னோர்கள் ஆந்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அவன், உடலால், உணர்வால், செயலால், தமிழனாகவே திகழ்ந்தான்.

"ஆர்க்காட்டு நவாபின் அதிகாரத்தில் தென்னாடு இருந்த சமயம் ; குறுநில மன்னர்களிடமிருந்து வரி வசூல் செய்யும் உரிமையை ஆங்கிலேயர்களுக்கு வழங்கினான் நவாபு.

''அவர்கள் கட்டபொம்மனிடம் வரி கேட்டபோது, 'வரிகொடுக்க முடியாது'என்று அவன் எதிர்ப்புக் குரல் கொடுத்தான்; கட்டபொம்மன் மாவீரன் மட்டுமல்ல, சுதந்தரதாகம் மற்றவர்களுக்கும் ஏற்படுவதற்கு வழி வகை செய்தவன். மனித உரிமைகளை நிலை நாட்டியவன்''

வீர ஜக்கதேவி ஆலயக்குழுவின் துணைத் தலைவர் திரு ஜகவீர சுப்பிரமணிய கட்ட பொம்முதுரை உரையாற்றுகையில்,'இந்த பாஞ்சைப் பகுதி, வீரத்தின்விளை நிலமாகத் திகழ்கிறது; இங்கே எந்தப் பகுதியைத் தோண்டினாலும் எலும்புகளைக் காணலாம்; வீரப் போரில் தியாகம் செய்து இன்னுயிர் நீத்த வீரர்களின் எலும்புகள்தான் அவை'' என்று குறிப்பிட்டார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் பண்பாட்டுக் கழகப் பொதுச் செயலாளர் திரு பி. கோபாலன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"இந்தப் பண்பாட்டுக் கழகம் தொடங்கி 5 ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கழகத்தின் சார்பில் தமிழக அரசுக்குப் பல கோரிக்கைகள் விடுத்தோம். அவற்றில் முக்கியமானது, கட்டபொம்மன் பெயரை ஒரு மாவட்டத்துக்குச் சூட்ட வேண்டும் என்பதாகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கோரிக்கையை ஏற்று, திருநெல்வேலி மாவட்டத்திற்கு, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் என்று பெயர் சூட்டியுள்ளார்.

''இந்தக் கோட்டையின் அருகே கூட்டுறவு நூற்புஆலை ஒன்றைத் தொடங்கி, கட்டபொம்மன் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும்.''

அடுத்து உரையாற்றிய திரு. முருகையா, 'இந்த விழாவை 2

## அரண்மனைக் கோவிலுக்கு நிவந்தம் இல்லை

*திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி திருக்கோயிலுக்கும் வேறு சில ஆலயங்களுக்கும் கட்டளைகள்-நன்கொடைகள் அளித்த கட்டபொம்மன், ஜக்கதேவி ஆலயத்திற்கு எந்த விதமான நிவந்தத்தையும் தரவில்லை; ஜக்கதேவி ஆலயம், அவனது அரண்மனைக்குள்ளேயே இருந்ததுதான் அதற்குக் காரணம்.*

நாள் விழாவாகக் கொண்டாட முன் வந்திருக்கும் தமிழக அரசுக்கு நன்றி'' என்று குறிப்பிட்டார்.

திரு சீனி கந்தசாமி உரையாற்றுகையில், "இந்த அரசு கட்டபொம்மனை மதிப்பதறிந்து மகிழ்கிறோம்; நன்றி செலுத்துகிறோம்; எங்கள் சமுதாயத்துக்கு நல்ல பதவிகளை அளித்தால் நாங்கள் மேலும் நன்றிசெலுத்துவோம்'' என்று தெரிவித்தார்.

திரு ஆத்மாநந்த சுவாமிகள் தமது உரையில் குறிப்பிட்டார்:

"எத்தனையோ கோடி மக்கள் இறந்து விட்டார்கள். இறக்காமல் இருப்பவர்கள் ஒரு சிலர்தான்! கட்டபொம்மனைச் சேர்ந்த 48 தலைமுறையினர் ஆண்டு மடிந்தனர்; எல்லோரையும் நாம் பாராட்டுவதில்லை. ஒரே ஒரு கட்டபொம்மனை மட்டும் நாம் பாராட்டுகிறோம். அதனால் அவன் ஒருவன் மட்டும் சாகவில்லை. ஒரு மனிதன், இறவா வரம் பெற வேண்டும் என்றால் அவன், மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். கட்டபொம்மன் மக்களுக்குத் தொண்டாற்றிய மாவீரன்''

பேராசிரியர் திரு சடகோபால் தமது உரையில் தெரிவித்ததாவது:

''ஓர் இந்துவுக்குப் புண்ணியத் தலமாக காசி அல்லது மதுரை மீனாட்சி ஆலயம் இருக்கலாம். ஒரு கிறிஸ்துவருக்குப் புண்ணியத் தலமாக வேளாங்கண்ணி ஆலயம் அமையலாம். ஒரு இஸ்லாமியருக்கு மசூதி புண்ணியத் தலமாக இருக்கலாம். ஆனால் குமரி முனையிலிருந்து இமயம் வரை 70 கோடி இந்திய மக்களுக்கும் புனிதமான ஓர் இடமாகத் திகழ்வது - பாஞ்சாலங்குறிச்சி.

'கட்டபொம்மனிடம் மோதிய பானர்மென் தோற்று ஓடினான். பின்னர் மிகப் பெரிய பீரங்கிப் படையோடு வந்து கோட்டையைத் தாக்கினான். அது மணற் கோட்டைதான்; ஆனாலும் கோட்டைச் சுவரின் உள்ளே உள்ள தானியங்கள் குண்டைச் சாப்பிட்டு ஏப்பம் விடுவதில் வல்லமை பெற்றிருந்தன.

'கவண் கற்கள், அம்புகள், வேல்கள், ஈட்டிகள், ஆகிய சாதாரண கிராமப்புற ஆயுதங்களைக் கொண்டு வெள்ளையரின் பீரங்கிப் படையை எதிர்த்து நின்றான் கட்டபொம்மன் என்றால் அதற்குக் காரணம் அவனது மனோதிடம் தான்.

''வீரபாண்டிய கட்டபொம்மன் விழா இந்திய தேசியத் திருவிழாவாகும்.''

புதூர் ஒன்றியத் தலைவர் திரு கிருஷ்ணசாமி உரையாற்றுகை



யில், 'கட்டபொம்மனை விழா நாளன்று மட்டும் நினைத்துவிட்டு மற்ற நாட்களில் மறந்துவிடுகிறோம். அனுதினமும் நாம் நினைக்க வேண்டும்.''

அடுத்து, ராஜகம்பளமகாஜன சங்கத் தலைவர் திரு எம். சுந்தரராசன் தமது உரையில் தெரிவித்ததாவது:

"முந்திய ஆண்டைவிட இந்த ஆண்டு இந்த விழாவிற்கு ஒரு சிறப்பு உண்டு. கட்டபொம்மன் மாவட்டத்தைக்கொடுத்தஆண்டு இது. இதற்கு முழு முதற்காரணமாக உள்ள இதய தெய்வம்-புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

''கட்டபொம்மன் சரித்திரம் நிலைத்து நிற்க வேண்டிய ஒன்று. கட்டபொம்மன் நாடகம் பல இடங்களில் நடிக்கப்படவேண்டும் என்பது பலரது அவா.

''வாளை நம்பி, மண் கோட்டையை நம்பி - மனத்தை நம்பி-நாட்டை சுபிட்சப்படுத்தலாம் என்றும், விடுதலை ஒன்றுதான் தனது குறிக்கோள் என்றும் பணியாற்றிய கட்டபொம்மனின் நாடகம் மூலை முடுக்கு, பட்டி தொட்டியெல்லாம் நடைபெற வேண்டும். அப்போதாவது இன்றைய இளைய சமுதாயம் சுதந்தரம் என்றால் என்ன என்பதையும், அதைப் பெறுவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டோம் என்பதையும், அதை எப்படிக் காப்பாற்ற வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ள முடியும்'

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு க. சுப்பு உரையாற்றுகையில் கூறினார்:

''இந்த மண்ணை மதித்து-வீரத்தை மதித்து இந்த விழா எடுக்கப்படுகிறது. பஞ்சாபில் வாளை வணங்கும் பழக்கம் இருந்தது; அதே பழக்கம்தான் கட்ட

## கட்டபொம்மன் குறித்த கவிதை நூல்கள்

**வீரபாண்டியன்**

**வீரபாண்டியன் அநுராக மாலை**

**பாஞ்சைக் கோவை**

**கட்டபொம்மு சண்டைக் கும்மி**

**பாஞ்சாலங்குறிச்சி சண்டைக் கும்மி**

**கட்டபொம்மன் கூத்து**

பொம்மன் பரம்பரையினரிடமும் உள்ளது.

''சிதம்பரனார் ஆங்கிலேயரை எதிர்த்தார் என்றால்-அவருக்குள் கட்டபொம்மன் இருந்திருக்கிறான்.''

செய்தி மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு. பி. சுப்பையா, ராஜ கம்பள மகாஜன சங்கச் செயலாளர் திரு பி. ஆதிராம் ஆகியோர் நன்றி கூறினர்.

பின்னர், கரகம், வில்லுப் பாட்டு நிகழ்ச்சி ஆகியவை நடை பெற்றது. அதன் பின்னர், வீர பாண்டிய கட்டபொம்மன் திரைப் படம், திரையிடப்பட்டது.



விழாவின் தொடக்கத்தில் ஊமைத்துரை படை என்னும் அமைப்பைச் சேர்ந்த இளை ஞர்கள் கட்டபொம்மன் ஜோதி யைத் திருச்செந்தூரிலிருந்து தொடர் ஓட்டமாகக்கொண்டு வந்து சேர்த்த நிகழ்ச்சி பார்வை யாளர் அனைவரையும் பரவசத் தில் ஆழ்த்தியது.

ஜக்க தேவியின் ஆலயம் பாஞ் சாலங்குறிச்சிக் கோட்டைக் குள்ளேயே அமைந்திருந்தது. தமிழக அரசு, நினைவுக் கோட்டையை உருவாக்கிய போதும், ஆலயம், கோட்டை வளாகத்துக்குள் இருக்கும் வண்ணம் சுற்றுப் புறச்சுவர் உருவாக்கப்பட்டுள்ளது

இரவெல்லாம் ஒயில் ஆட்டமும், உறுமி மேள நிகழ்ச்சியும் விழாவுக்கு வந்திருந்த மக்களை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தின.

மறுநாள் காலையில் (9.5.87) ரேக்ளா பந்தயம் நடை பெற்றது. மாடுகள்கூட, தமது வீர உணர்வைக் காண்பித்து வேக வேகமாக ஓடிய காட்சி, கண்கொள்ளக் காட்சியாகத் திகழ்ந்தது.

மாலை 6 மணியளவில் 'கட்ட பொம்மன் வரலாற்றில் மிகுந்து காணப்படுவது நாட்டுப் பற்றே-தெய்வப் பற்றே' என்ற தலைப் பில் பட்டிமண்டப நிகழ்ச்சி தொடங்கியது. பேராசிரியர் வளன் அரசு, நடுவர் பொறுப்பை ஏற்றிருந்தார்.

'தெய்வப் பற்றே' என்ற அணி யின் தலைவர் திரு. புலவர் ஏ. எம். டி. செல்லத்துரை தமது வாதத்தில் எடுத்துரைத்ததாவது:

'கட்டபொம்மன் துணிவுமிக்க வீரனாகத் திகழ்ந்தான். தெய்வப் பற்று உள்ளவர்களுக்கு மட்டும் தான் இந்தத் துணிவு உண்டு. கட்டபொம்மனிடம் நாட்டுப் பற்று இருந்தது. என்றாலும் அதைவிட அவனிடம் மிகுந்து காணப்பட்டது தெய்வப்பற்று தான்.''

'நாட்டுப் பற்றே' என்ற அணி யின் தலைவர் திரு பாஸ்கர பால்பாண்டியன் தமது விவாதத் தில் எடுத்துரைத்தார்:

''ஜக்கம்மாள் கட்டபொம் மனைத் தன் மகனாக ஏற்றுக் கொண்டாள். அதே நேரத்தில் இந்த நாட்டு மக்களை எல்லாம் தமது மக்களாக ஏற்றுக்கொண்ட வன் கட்டபொம்மன். மற்ற பாளையக்காரர்களுக்கும் குறு நில மன்னர்களுக்கும் வராத விடுதலை எண்ணம் கட்டபொம் மனின் உள்ளத்தில் தோன்றியது என்றால் கட்டபொம்மனிடம் மிகுந்து காணப்பட்ட நாட்டுப் பற்றே அதற்குக் காரணம்.''

பின்னர், நாட்டுப் பற்றே என்ற அணியில் திரு தி. வ. கல் யாண சுந்தரனார், பேராசிரியர் திரு ஜி. டி. பாண்டியன் ஆகி யோரும், 'தெய்வப்பற்றே என்ற அணியில் பேராசிரியர் திரு. குமரிக் கண்ணன், திரு புலவர் இளசை அருணா ஆகியோரும் தங்கள் கருத்துகளை எடுத்து ரைத்தனர். அதன் பின்னர் இரு அணித் தலைவர்களும் தமது முடிப்புரையை வழங்கினர். பின்னர் நடுவர் திரு வளன் அரசு 'கட்டபொம்மன் வரலாற்றில் மிகுந்து காணப்படுவது நாட்டுப் பற்றே' என்று தீர்ப்பு வழங்கி னார்.

தமது தீர்ப்புக்கு அவர் கூறிய செய்திகள் - ஆதாரங்கள் வரு மாறு:

'தெய்வப் பற்று ஒருவரின் கடமை; நாட்டுப் பற்று இருப் பின் அது பெருமை.

'கட்டபொம்மனின் வல விழி யாக நாட்டுப் பற்றும் இட விழி யாக தெய்வப்பற்றும் இருந்தன.

'அவனது வாழ்வின் அடித்தள மாக தெய்வப் பற்றும், கோபுரக் கலசமாக நாட்டுப் பற்றும் விளங்கின.

''அவனது சாவில், அவனது வீர வரலாறு முடிந்துவிட்டது என்று வெள்ளையர் நினைத்த னர்.

'அவனது நாட்டுப்பற்று தொடர் கதை; அவனது வீரம் ஒரு தொடர் கதை:

''அவன் மூட்டிய விடுதலை உணர்ச்சி 20 ஆம் நூற்றாண்டி லும் தொடர்ந்தது''

அடுத்து சிங்கிலிப்பட்டியைச் சேர்ந்த ஒயிலாட்டக் குழுவினரின் ஒயிலாட்டம் நடைபெற்றது.

பின்னர் சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ரெ. ஆறுமுகம் இ. ஆ. ப. தலைமை யில் சிறப்புரை நடைபெற்றது.

வரவேற்புரையாற்றிய திரு எம். சுந்தரராசன் தெரிவித்தார்:

வீரபாண்டிய கட்ட பொம்மன் கி.பி. 1760-ல் தோன்றினான். 1790-ல் ஆட்சி பீடத்தில் ஏறினான். 1799-ல் வெள்ளை யருடன் போரிட்டு, வீரமரணம் எய்தினான். 39-வயது வரை வாழ்ந்த கட்டபொம்மனின் ஆட்சிக்காலம், 9 ஆண்டு 8 மாதம் 14 நாட்கள்.

'ராஜ கம்பள மகாஜன சமுதாயம் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறும் என்ற நம்பிக்கையை நமது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வழங்கியிருக்கிறார்.

'மாவட்டத்திற்குக் கட்டபொம்மன் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முதல்வரிடம் தெரிவித்த போது - அக்கோரிக்கை நிறைவேறுவதற்கு நமக்குப் பலவகையிலும் உதவி செய்திருக்கிறார் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்கள் இருவருக்கும் நமது நன்றி.

''ராஜகம்பள சமுதாயம் பொருளாதார நிலையில் மேன்மை பெறுவதற்குப் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தக்க உதவியாக இருந்து ஆவன செய்து தர வேண்டும். கல்வி அறிவிலும் இந்தச் சமுதாயம் முன்னேற்றம் பெற அரசு ஆவன செய்ய வேண்டும். பாஞ்சைக் கோட்டைக்குப் பக்கத்தில் நூற்பு ஆலை அல்லது தொழிற்சாலை ஏற்படுத்தித் தர வேண்டும்''.

இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் பல கோரிக்கைகளை முன் வைத்தார்.

அடுத்து, ராஜ கம்பள மகாஜன சங்கப் பொதுச் செயலாளர் திரு பாலுச்சாமி ஓர் அறிக்கையைப் படித்தார். அதில் பல்வேறு கோரிக்கைகள் காணப்பட்டன. அவற்றில் சில :

'ராஜகம்பள மகாஜன மரபைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகள் தரப்பட வேண்டும்'.

'பிற்பட்டோர் இனத்தில் இடம் பெற்றுள்ள இந்தச் சமுதாயத்தை செட்யூல்டு பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும்'.

'பாஞ்சாலங்குறிச்சியில் விழாக் காலங்களில் பயன்படுத்தப்படுவதற்காக, நிரந்தரக் கலையரங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்'.

அடுத்து, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்கள், சமுதாய நலக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டி, நலிந்தோர்க்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அடுத்து திரு. பா. ராமசாமி உரையாற்றுகையில் ,

> **கட்டபொம்மனின் பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டைப் பகுதியில் போரில் மடிந்த 42 வெள்ளையர்களின் கல்லறைகளும் உள்ளன.**
>
> **வீரபாண்டிய கட்டபொம்மனின் தந்தை, ஜெகவீர பாண்டியன் ஆவான். தாத்தா பாஞ்சாலன் பெயரால் ஊருக்குப் பாஞ்சாலங்குறிச்சி என்று பெயரிடப் பட்டது.**

''1954-ல், பொட்டலாகக் கிடந்த இந்த இடத்தில் ஒரு சிறு கூட்டமாக வந்து தேங்காய் உடைத்து பக்தி செலுத்தினோம், இது, இன்று ஆல்போல்தழைத்து அருகுபோல் வேரூன்றியுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, ராஜ கம்பள மகாஜன சங்கத்தைச் சேர்ந்த திரு நல்லையா பேசுகையில், "திருச்செந்தூரில் உள்ள கம்பளத்தார் மடம் பிறரது ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ளது. அதனைச் சரி செய்து கம்பளத்தாருக்கு உரியதாக ஆக்கித் தரவேண்டும்"
—என்று கேட்டுக் கொண்டார்.

அடுத்து, மாவட்ட ஆட்சியாளர் திரு ரெ. ஆறுமுகம் இ.ஆ.ப. தமது உரையில் தெரிவித்தார்:

"பாஞ்சாலங்குறிச்சி என்று சொன்னவுடன் வீர உணர்வு ஏற்படுகிறது. இந்திய விடுதலை வரலாற்றில் முதல் முதல், வீர முழக்கம் எழுப்பியவர் கட்டபொம்மன்".

> **"கட்டபொம்மன் அஞ்சா நெஞ்சம் மிகுந்தவன். நாட்டின் சுதந்தரத்திற்காகத் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்தவன். எனது நாடு என்ற உணர்வு இறுதிவரை அவனிடம் இருந்தது" என்று வெள்ளையர் தளபதி பானர்மென் குறிப்பு எழுதி வைத்திருக்கிறான்.**
>
> **"கட்டபொம்மனிடம் நாட்டுப் பற்று அதிகமாக இருந்தது. இது போல் நாட்டுப்பற்று உள்ள ஒருவரை எங்கும் பார்க்க முடியாது" என்று கால்டுவெல் குறிப்பிட்டிருக்கிறார்.**
>
> **கட்டபொம்மனைக் குறித்து 20-க்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன.**

"கட்டபொம்மனின் வாரிசுகள் நலம் பெற வேண்டும் என்ற முறையில் பல்வேறு திட்டங்கள் தீட்டி வருகிறோம்.

''500, 600 ஏக்கர் நிலத்தில் மாதிரிப் பண்ணைகள் அமைத்து அவற்றில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கத் திட்டமிடப் பட்டு வருகிறது.''

ரேக்ளா பந்தயத்தில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும் கட்டபொம்மன் ஜோதிகொண்டு வந்த இளைஞர்களுக்குப் பனியன்களும் வழங்கிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தமது உரையைத் தொடங்கினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

"கட்டபொம்மன் விழா சிறப்பாக நடைபெறுகிறதா என்று என்னிடம் கேட்டார் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள். விழா சிறப்பாக நடைபெறுகிறது என்று சொன்னேன். அதைக் கேட்டு உள்ளம் பூரித்தார்.

"வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தூக்குக் கயிற்றில் கழுத்தை நீட்டியபோது, நடுங்காமல் நிமிர்ந்து நின்றவன் வீரபாண்டிய கட்டபொம்மன்.

''இந்தச் சமுதாயம் அறிவாற்றல் மிக்க சமுதாயமாக உருவெடுத்தாக வேண்டும். அதற்கு இந்தச் சமுதாயம்தான் முயற்சி செய்ய வேண்டும்.

''இந்தச் சமுதாயம் சொன்ன சொல்லைக் காப்பாற்றும் சமுதாயம். கட்டபொம்மன் காலத்திலிருந்து இன்றைய காலம் வரை தூய பண்பு இந்தச் சமுதாயத்திடம் நிலவி வருகிறது.''

அமைச்சரின் சிறப்புரைக்குப் பிறகு, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு எம். அண்ணாமலை நன்றி நவின்றார். அதன் பின்னர் நடைபெற்ற கிராமிய கலை நிகழ்ச்சிகளும், மதுரை திரு வேலுச்சாமி குழுவினர் நடத்திய வீரபாண்டிய கட்ட பொம்மன் நாடகமும் பொதுமக்களைக் கவர்ந்தன.

மொத்தத்தில் கட்டபொம்மன் விழா. நெஞ்சை விட்டு நீங்காத விழாவாக அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

—நமது செய்தியாளர்

# கோவை மாவட்ட வறட்சி நிவாரணம்



**மு. அபுல்ஹசன் இ.ஆ.ப.,**
**கோவை மாவட்ட ஆட்சித் தலைவர்**

**கோ**வை மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் தொடர்ந்து வறட்சி நிலையே காணப்படுகிறது. இம்மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதல் கட்டமாகப் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் 411 அமைக்க அரசு அனுமதி அளித்த தன் பேரில் ஊராட்சி ஒன்றியங்களில் 300, பேரூராட்சிகளில் 70, நகராட்சிகளில் 41 ஆக 411 ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டு விட்டன. இரண்டாம் கட்டமாக 150 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த 150 ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைக்கும் பணி விரைவாக நடைபெற்று வருகின்றது. ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காக இது வரை ரூ. 187 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

### குடிநீர்க் கிணறுகள்

குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த அரசு ரூ. 56.38 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 40 இலட்சம் செலவிலும், பேரூராட்சிகளில் ரூ. 15 இலட்சம் செலவிலும், நகராட்சிகளில் ரூ. 1.38 இலட்சம் செலவிலும் குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய கிணறுகள்வெட்டும்பணிக்காக அரசு ரூ. 14.25 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களில் புதிய கிணறுகள் ரூ. 10 இலட்சம் செலவிலும், பேரூராட்சிகளில் ரூ. 2.75 இலட்சம் செலவிலும் வெட்டப்படும். ஊராட்சி ஒன்றியங்களில் வட்டக் கிணறுகள் ரூ. 1.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும். இதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

### லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல்

கோவை மாவட்டக் குடிநீர்ப் பிரச்னை தீர்க்க, லாரிகள் மூலம் குடிநீர் வழங்க அரசு ரூ. 25.91 இலட்சம் ஒதுக்கியுள்ளது. பேரூராட்சிகளின் ரூ. 1.31 இலட்சம் செலவிலும், நகராட்சிகளில் ரூ. 10.60 இலட்சம் செலவிலும், ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 14 இலட்சம் செலவிலும் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன.

### மேம்பாடு செய்தல்

பேரூராட்சிகளில்உள்ளகூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைமேம்பாடு செய்ய அரசு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆனைமலை பேரூராட்சியில் 3 பணிகள் ரூ. 2 இலட்சம் செலவிலும், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் ரூ. 2 இலட்சம் செலவில் 2 பணிகளும், கோட்டூர் பேரூராட்சியில் ரூ. 1 இலட்சம் செலவில் ஒரு பணியும் நடைபெற்று வருகின்றன.

### வேலைவாய்ப்புத் திட்டப்பணிகள்

வேலைவாய்ப்புத் திட்டப்பணிகளுக்காக அரசு ரூ. 36 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ரூ. 30 இலட்சம் செலவில் ஊராட்சி ஒன்றியங்களில் ஊரணிகள், சிறுநீர்ப் பாசனக் குளம் மற்றும் குட்டைகளில் தூர் எடுக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

ரூ. 6 இலட்சம் செலவில் வேளாண்மைப் பொறியியல், பொதுப்பணித்துறை (பாசனம்) மற்றும் (சிறு பாசனம்) ஆகியவற்றின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவைமாவட்டத்தில்வறட்சி நிவாரணப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பொது மக்களுக்குக் குடிநீர் வழங்குவதிலும், வேலைவாய்ப்பு வழங்குவதிலும் பணிகள் மிக முனைப்போடு இம்மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.



சின்னஞ்சிறு அரும்புகள் வயிற்றுப்போக்கால் அவதிப்படுவதைப் பார்க்கிறபோது, நாமே மனங்கலங்கி விடுகிறோம். அதைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் இங்கே விளக்கப்படுகின்றன.

# வயிற்றோட்டம்


கோ. த. கோபாலகிருஷ்ணன்
கூட்டுத் தலைமை இரசாயன வல்லுநர்.
கிங் நிலையம்-கிண்டி.


குழந்தைப் பிறப்பு ஒருவரின் வரப் பிரசாதமாகும். மழலைகள் ஒரு நாட்டின் செல்வங்களாகும். இசைக்கருவிகளின் நாதத்தைக் காட்டினும் இன்பம் தருவது தாம் பெற்ற குழந்தைகளின் மழலைப் பேச்சாகும்.

வளரும் நாடுகளில் குழந்தைகளுக்கு அதிகம் காணப்படும் நோய்தான் பேதி. பாம்பன் சுவாமிகள் அருளிய 'சண்முக கவசம் இந்நோயின் தன்மையை ''அவதி செய் பேதி'' என்று கூறுகிறது. மருத்துவ அகராதிப்படி, பேதி என்றால் அடிக்கடி மல ஜலம் கழிப்பது. பேதியினால் அவதிப்படும்போது உடல் பெருமளவு நீர்ச்சத்தை இழக்கிறது. வயிற்றுப் போக்கினால் சுமார் 40 இலட்சம் குழந்தைகளின் உயிர் பறிபோகிறது.

## உயிர்வாங்கும் அரக்கன்

வயிற்றுப் போக்கினால் உடலிலுள்ள நீர்ச்சத்தும் அத்துடன் தேவையான முக்கிய உப்புகளாகிய சோடியமும் பொட்டாசியமும் வெளியேறுகின்றன. இதனைத் தமிழில் வயிற்றோட்டம் என்றும் ஆங்கிலத்தில் (Dehydration) என்றும் கூறுவர். வயிற்றோட்டம் மழலைகளுக்கு ஒரு கொடிய அரக்கனாகத் தோன்றி, குழந்தைகளின் உயிரைப் பறிக்கின்றது.

முதலும் முக்கியமானதுமான சிகிச்சை யாதெனில் வயிற்றோட்டம் காரணமாக இழக்கும் நீர்ச்சத்தை ஈடு செய்ய வேண்டும் ( Rehydration ). கிராமத்தில் பெரும்பாலான மக்கள் மூடப் பழக்க வழக்கங்களில் மூழ்கி இருப்பதாலும், மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றமாட்டானா?' என்பது போன்ற வினாக்களினாலும் வயிற்றோட்டம் கண்ட குழந்தைகளை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லத் தாமதமாகிறது. இத்தகைய தாமதத்தினால் குழந்தைகள் இறக்க நேரிடுகின்றது.

தற்போது மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியினால் மக்கள் ஓரளவு தெளிவடைந்து உடனடி சிகிச்சையளிக்க முற்படுகிறார்கள். தென்னை மரம் அதிகமுள்ள மணிலா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் வயிற்றுப் போக்கு கண்ட குழந்தைகளை இளநீர் அருந்தச் செய்கிறார்கள். அது உடனானது ஓரளவு இழந்த உப்புக்களை ஈடு செய்யும்.

> தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 'டிஸ்கோ' நடனப் பயிற்சிகளோ நிகழ்ச்சிகளோ நடத்தக்கூடாது என்று பள்ளிக்கல்வி இயக்குநர் ஆணையிட்டிருக்கின்றார். 'டிஸ்கோ' நடனப் பயிற்சி பெறும் குழந்தைகள் மனோ ரீதியாகப் பாதிக்கப்படுவதாக, மனோதத்துவ ஆய்வுகள் தெரிவிப்பதை அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

## வாய் மூலம் சிகிச்சை

பங்களா தேசத்தில் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சர்க்கரையும் உப்பும் கலந்த நீரை வாய்மூலம் கொடுத்து அதிலே வெற்றியும் கண்டனர். இதற்கு வாய் மூலம் ஈடு செய்யும் சிகிச்சை ( Oral Rehydration Therapy ) என்று பெயரிடப்பட்டது. இந்த நோயின் அறிகுறியானது மிகுந்த தாகம், சிறுநீர் குறைவாக வெளி வருதல், குழி விழுந்த கண்கள், வயிற்றின் தோல் சுருக்கங்காணல் போன்றவைகளாம்.

உலக சுகாதார நிறுவனத்தார் ( WHO ) ஐ. நா. ஸ்தாபனத்தார் ( UNICEF ) கீழ்க் கண்ட உப்புக்களைக் கொண்ட கலவையை வாய்மூலம் கொடுக்க சிபாரிசு செய்திருக்கிறார்கள்.

| பொருள் | அளவு (கிராம்) |
|---|---|
| சோடியம் குளோரைடு | 3.5 |
| சோடியம் பைகார்போனேட் | 2.5 |
| பொட்டாசியம் குளோரைட் | 1.5 |
| குளுக்கோஸ் நீத்த நீர் | 20.0 |

மேற்கூறிய அத்தனை'' பொருட்களையும் ஒரு லிட்டர் காய்ச்சிய குளிர்ந்த நீரில் கலக்க வேண்டும். இந்தக் கரைசல் எல்லா வகை பேதிகளுக்கும் எத்தகைய வயதினருக்கும் உகந்ததாக அமைந்துள்ளது. குளுக்கோஸ் இந்த மூன்று உப்புக்களையும் சிறுகுடலில் உட்கிரகிக்க உதவி செய்கிறது. அமிலத்தன்மையைப் போக்க சோடியம் பைகார்பொனேட் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய பொருட்கள் பொட்டலமாகச் செய்து வைக்கப்பட்டு, தேவைப்படும்போது அதில் சிறிதளவு எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து வாய் வழியே செலுத்தி சிகிச்சை அளிக்கலாம். இதற்கு வாய் மூலம் ஈடு செய்யும் கரைசல் என்று கூறுவர் (Oral Rehydration Solution-ORS).

## நாமே செய்யலாம்

வாய்மூலம் ஈடு செய்யும் கரைசல் (பொட்டலங்கள்) கிடைக்காவிடில், குழந்தைகளை வீட்டிலேயே உப்பும் சர்க்கரையும் கலந்து நீரை அருந்தச் செய்யலாம். அப்படிக் கரைத்த நீர் 12 மணியிலிருந்து 24 மணிக்குள் உபயோகப்படுத்த வேண்டும். எட்டுத் தேக்கரண்டி சர்க்கரையும் ஒரு தேக்கரண்டி உப்பும் நன்றாகக் காய்ச்சிய நீரில் கலந்து,



வயிற்றோட்டம் கண்ட குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

வாய் மூலம் ஈடுசெய்யும் கரைசல் உயிரைக் காக்கும் மருந்தாகக் கருதப்படுகிறது. இந்தக் கரைசலைக் கொஞ்சம் கொஞ்சமாக அருந்தச் செய்வதால் வாந்தியும் தடைபடும். வாய்மூலம் செல்லும் கரைசலின் அளவு, வெளியேற்றப்பட்ட நீர் கலந்த பேதியின் அளவுக்கு ஏறக்குறைய சமமாக இருக்க வேண்டும்.

ஒரு சில தாய்மார்கள் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதால் பேதி அதிகமாகும் என்ற தவறான எண்ணம் கொண்டுள்ளனர். ஆனால் மாறாக, தாய்ப்பாலும் அத்துடன் அரிசிக்கஞ்சியும் நீர் கலந்த மோரும் அளவாகக் கலந்து கொடுத்தால் பேதி நிற்கும்.

## அரசின் ஆணை

குழந்தை வைத்திய நிபுணர்கள் வாய் மூலம் கொடுக்கும் பொட்டலக் கரைசலினால் மாத்திரைகளையும் விலையுயர்ந்த ஊசி மருந்துகளையும் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துகின்றது என்று கருதுகின்றனர். வாய் மூலம் ஈடு செய்யும் கரைசல் ஓரளவு உயிரைக் காப்பாற்றுகின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிங் நிலையத்தில், வாய் மூலம் ஈடு செய்யும் பொட்டலக் கரைசல் தயாரிக்கத் தக்க முயற்சிகள் விரைந்து எடுக்கப்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமும் தமிழக அரசின் சுகாதார முன்னேற்றத் திட்டங்களும் பேதி என்ற கொடிய நோயைத் தடுக்கவும், மழலைச் செல்வங்கள் உடல் நலமுடன் வாழவும் வகை செய்கிறது என்பதை மறுக்க முடியாது.


**தமிழரசு**

**தமிழ் - மாதம் இருமுறை**

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 24.00 |
| 6 மாதச் சந்தா | ரூ. 12.00 |

**'தமிழரசு' - ஆங்கிலம்**

ஆண்டுச் சந்தா ரூ. 12.00

6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

—சந்தா தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்பவேண்டிய முகவரி :

உதவி இயக்குநர்,
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.


## இலவசப் பாடப் புத்தகம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தால் பயன்பெறுகின்ற 8-ஆம் வகுப்புவரை படிக்கும் மாணவ மாணவியருக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கும் தமிழ்நாடு அரசின் மாபெரும் திட்டம் ஜூன் 16-ஆம் நாள் முதல் அமலுக்கு வரும். இதன்மூலம் 60 இலட்சம் அரும்புச் சிறுவர் சிறுமியர் பயன்பெறுவர். இத்திட்டத்தின்கீழ் ரூ. 13 கோடி மதிப்புள்ள புத்தகங்கள் விநியோகிக்கப்படும்.

தமிழ்நாடு பாடநூல் நிறுவன நிர்வாக இயக்குநர் திரு லியாகத் அலிகான் இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.



# நிருபமா

ரவீந்திரநாத்தாகூர்

ஐந்து பிள்ளைகள் அடுத்தடுத்துப் பிறந்த பின்னர் ஒரே பெண்ணாக அவள் பிறந்தாள். தாய் தந்தையர் அவளுக்குச் செல்லமாக நிருபமா என்று பெயரிட்டார்கள். இப்படி ஒருபுதுமையான பெயர் அவர்கள் வம்சத்திலேயே இதுவரையில் கேள்விப்பட்டதில்லை. கணேசன், கார்த்திகேயன், பார்வதி என்பதுபோல் தெய்வங்களின் பெயர்களைத்தான் வைப்பது வழக்கம்.

நிருபமாவுக்குக் கல்யாண வயதாயிற்று. அவளுடைய தகப்பனார் ராமசுந்தர மித்ரர் எவ்வளவு தேடியும் மனத்திற்குப் பிடித்தமான வரன் எவனும் கிடைக்கவில்லை. கடைசியில், பிரபலமான ராய் பகதூர் வீட்டு ஒரே பிள்ளையைத் தேடிப்பிடித்தார். ராய் பகதூருக்குப் பிதுரார்ஜிதச் சொத்து அப்படி 'ஓகோ' என்று சொல்லும்படியாக இல்லை. என்றாலும், பழைய திமிர்மட்டும் சற்றும் குறையாமல் இருந்தது. பிள்ளை வீட்டார் பத்தாயிரம் ரூபாய் ரொக்கமாக வரதட்சணையும் பெருமளவில் சீர் வகைகளும் கேட்டு வந்தார்கள். ராமசுந்தரர் தயங்கவில்லை. அவர்கள் கேட்டதைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார். இவ்வளவு உயர்த்தியான வரனைக் கைநழுவவிட அவருக்கு விருப்பமில்லை. ஆனால், பணத்துக்கு ஏற்பாடு செய்வதில் மிக்க கஷ்டம் ஏற்பட்டது. அடகு வைத்தும் விற்றுங்கூட ஆறு ஏழு ஆயிரங்களுக்கு மேல் பணம் பின்னும் தேவைப்பட்டது. கல்யாணநாள் குறுகியது.

முகூர்த்த நாளும் வந்தது. அநியாய வட்டிக்குக் கடன் தருவதாகச் சொன்ன ஒருவனும் சமயத்தில் கை விரித்துவிட்டதால், மணப்பந்தலில் பெருத்த குழப்பமே ஏற்பட்டது. ராமசுந்தரர் ராய் பகதூரின் காலைப் பிடித்துக் கொண்டார். 'திருமணம் நல்லபடியாக நடக்கட்டும். பணத்தைக் கண்டிப்பாகத் தீர்த்துவிடுகிறேன்' என்று கெஞ்சினார். 'பணத்தை முழுவதுமாகத் தராவிட்டால் மாப்பிள்ளை பந்தலுக்கு வரமாட்டான்' என்று ராய் பகதூர் ஒரே பிடியாக நின்றார்.

இப்படி ஒரு குழப்பம் ஏற்படவே, உள்ளே புலம்பல் எழுந்தது. இத்தனைக்கும் மூலகாரணமாக இருந்தவளோ புதுச்சேலை, நகை நட்டுகளுடன், சந்தனப் பொட்டுடன் சிங்காரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். வருங்காலத்தில் புக்ககத்து மனிதராகப் போகிறவர்களிடம் அவளுக்கு ஒருவிதப் பிடித்தமோ, மரியாதையோ பிறக்கவில்லை.

இதற்குள் ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டது. மாப்பிள்ளைப் பையனுக்கு என்ன தோன்றியதோ, திடீரென்று அவன் தகப்பனாருக்கு எதிராகத்திரும்பினான். 'இந்தக் கத்தரிக்காய்ப் பேரமெல்லாம் எனக்குத் தெரியாது. கல்யாணம் செய்து கொள்ள வந்தேன். அது நடக்கத்தான் வேண்டும்' என்று அவன் அடித்துச் சொன்னான்.

ராய்பகதூர் எதிர்பட்டவர்களிடமெல்லாம் குறைப்பட்டுக் கொண்டார். 'பார்த்தீர்களா, இந்தக் காலத்துப் பிள்ளைகளை!'

'ஊம்! எல்லாம் அரைகுறைப் படிப்பினால் வருகிற கேடு! சாஸ்திரம், நீதியெல்லாம் எங்கே சொல்லிக் கொடுக்கிறார்கள்?' என்று சில முதியோர்கள் அவருக்குஆறுதலாகச்சொன்னார்கள்.



கல்வி முறையில் ஏற்பட்ட குறை தம் பிள்ளையிடம் பூரணமாகப் புலனாவது கண்ட ராய்பகதூருக்கு, அடங்குவதைத்தவிர வேறு வழியேதும் தோன்றவில்லை. திருமணமும் யாதொரு கலகலப்பின்றி மிகச் சாதாரணமாகவே நடந்தேறியது.

புக்ககம் செல்ல வேண்டிய நேரம் வந்தது. ராமசுந்தரர் தம் பெண்ணை அணைத்துக் கொண்டார். அவரால் கண்ணீரை அடக் முடியவில்லை. 'ஏனப்பா! அவர்கள் என்னை இங்கே அனுப்பவே மாட்டார்களா?' என்று கேட்டாள் நிருபமா.

'ஏனம்மா அனுப்பமாட்டார்கள்! நானே வந்து அழைத்து வருகிறேன்' என்றார் தகப்பனார்.

பெற்றவர் அடிக்கடி பெண்ணை பார்க்கச் செல்வார். ஆனால், அங்கு அவருக்கு எந்தவிதமான மரியாதையும் கிடைக்காது. வேலையாட்கள்கூட அவரை அலட்சியமாகப் பார்த்தனர். வெளிப்புறத்து அறையில் இரண்டொரு நிமிஷங்களே அவரால் பெண்ணைக் காண முடிந்தது. அதுவுங்கூடச் சில நாட்கள் முடியாமல் போய்விடும்.

சம்பந்தியின் வீட்டில் இவ்வளவு அவமதிப்புப் பொறுக்க முடியாதுதான்; எப்படியாவது பணத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்று ராமசுந்தரர் முடிவு செய்தார். ஆனால், அதுவரையில் ஏறிய கடன் சுமையே தாளமுடியாத அளவுக்கு இருந்தது. செலவினங்களும் அதிகமாயின. கடன்காரர்களிடமிருந்து தப்ப அவர் இழிவான தந்திரங்களையும் வழிகளையும் மேற்கொள்ள வேண்டிவந்தது. புக்ககத்தில் பெண் வேறு, எடுத்ததற்கெல்லாம் பேச்சுக் கேட்கவேண்டி வந்தது. பிறந்தகத்தைப் பழிப்



பது கேட்டு நிருபமா தன் அறைக் கதவைத் தாழிட்டுக்கொண்டு அழுவாள். இதுவே அவளது தினசரி வழக்கமாகவும் ஆகி விட்டது.

மாமியாருக்கு ஆத்திரம் தணியவே இல்லை. 'ஆகா! அழகு என்றால் உன் மாட்டுப் பெண்தான்! முகத்தைப் பார்த்தாலே மனம் குளிருகிறது' என்று யாராவது சொல்லிவிட்டால் போதும்; 'ஆமாம்! ரொம்ப அழகுதான்! பிறந்தகத்து அழகு தான் சொட்டி வழிகிறதே!' என்றுஇடித்துரைப்பாள். மாட்டுப் பெண்ணின் ஊனுடை சம்பந்த மாகவும் எவரும் அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. அண்டை வீட்டார் யாராவது இளகிய மனசுடன் எடுத்துச் சொன்னால், மாமியார், 'அவள் அழகுக்கு எல்லாம் இது போதும்' என்பாள். அவள் குரலில், பிறந்தகத்தார் செய்ய வேண்டியதைச் செய்தால்தான் மாட்டுப்பெண்ணுக்குரிய மதிப்பு இவளுக்குக் கிடைக்கும் என்று பொருள் தொனிக்கும், நிருபமாவுக்குப் புக்ககத்தில் ஒருவித அதிகாரமும் கிடையாது. ஏமாற்றிவிட்டு உள்ளே நுழைந்தவள்தானே என்ற எண்ணம் எல்லோரிடமும் நிறைந்திருந்தது.

இப்படி நிருபமா புக்ககத்தில் பழிப்புக்கும் இழிவுக்கும் ஆளாவது, நிச்சயம் தகப்பனாருக்கும் எட்டியிருக்கத்தான் வேண்டும். அதனால் அவர் தமதுவீட்டையே விற்கவும் முயற்சிசெய்யலானார். அதைப் பிள்ளைகளுக்குத் தெரியவிடக்கூடாது என்று எண்ணினார். வீட்டை விற்றுவிட்டு அதிலேயே குடிக்கூலிக்கு இருக்கலாம் என்று எண்ணியிருந்தார். தமது கடைசி நாள் வரையில் பிள்ளைகளுக்கு இதைத் தெரியவிடக்கூடாது என நினைத்தார். ஆனால் பிள்ளைகளுக்கு இது விஷயம் எப்படியோ தெரிந்துவிட்டது. அவர்கள் அப்பாவிடம் வந்து முறையிட்டார்கள். பெரிய பிள்ளைகள் மூவருக்கும் மணமாகிக் குழந்தைகளும் இருந்தன.

அவர்களுடைய எதிர்ப்பானது சற்றுக் கடுமையாக இருக்கவே, வீடு விற்கும் யோசனையை ஒத்திப்போட வேண்டியதாயிற்று. அதிக வட்டிக்கு அவர் கொஞ்சங் கொஞ்சமாகக் கடன் வாங்கலானார். இதன் விளைவாக அன்றாடத் தேவைகளுக்கே கஷ்டமாகிவிட்டது.

தகப்பனாரின் முகத்தைக் கண்டே விவரங்களைப் புரிந்து கொண்டாள் நிருபமா. நரைத்த தலை, வறுமையும், கவலையும்



வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூரின் 126வது பிறந்தநாள் நினைவாக, அவரெழுதிய சிறுகதையொன்றின் தமிழாக்கம் வெளியிடப்படுகிறது!

தோய்ந்து வாடிய முகம் இவையே விஷயத்தைத் தெளிவாக்கின. பெண்ணுக்குத் தவறிழைத்ததனால் ஏற்பட்ட மனவேதனை தந்தையின் முகத்தில் தெரியாமல் இருக்குமா? சம்பந்தியின் அனுமதியுடன் தம் பெண்ணைச் சந்திக்கும் சில கணங்களில் அவருடைய உள்ளம் படும்பாட்டை அவருடைய சிரிப்பிலிருந்தே புரிந்துகொள்ள முடிந்தது.

இப்படிக் குமுறும் தந்தையின் உள்ளத்துக்குச் சிறிதேனும் ஆறுதலளிக்க வேண்டும், அதற்காகவேனும் சில நாட்கள் பிறந்தகம் சென்று இருக்க வேண்டுமென்று தவித்தாள் நிருபமா. தந்தையின் முகவாட்டத்தைக் கண்டபின்னர் அவளால் ஒதுங்கியிருக்க முடியவில்லை. 'அப்பா! என்னை வீட்டிற்கு ஒரு தடவை அழைத்துச் செல்லுங்களேன்' என்றாள்.

அதற்கு அவருக்கு ஏது அதிகாரம்? பெற்ற பெண்ணிடம் ஒரு தந்தை கொண்டாடக்கூடிய உரிமையைத் தாம் வரவேண்டிய வரதட்சணைக்காக அடகுவைத்துவிட்டாரே! பெண்ணைப் பார்க்கவுங்கூட அவர் தயக்கத்துடன் தான் கெஞ்ச வேண்டியிருந்தது. சில சமயங்களில் ஏமாற்றம் ஏற்படும். அப்போதெல்லாம் இரண்டாந்தரம் கேட்கவும்கூட அவருக்கு வாயிருக்காது. ஆனாலும், பெற்ற பெண்ணே பிறந்தகம் வர ஆசைப்படும்போது, எந்தத் தகப்பனால்தான் கம்மென்று இருக்க முடியும்! சம்பந்தியிடம் போய்ப் பெண்ணைப் பிறந்தகம் அழைத்துச் செல்ல அனுமதி கேட்க, எவ்வளவோ அவமானங்களையும், பழிச்சொற்களையும் கேட்டுக்கொண்டு மூவாயிரம் ரூபாய் சேகரித்தார் ராமசுந்தரர். பணத்தைக் கைக்குட்டையில் சுற்றி,மேல்துண்டில் மூடி எடுத்துக்கொண்டு சம்பந்தியிடம் சென்றார். முதலில் சிரித்துக்கொண்டே ஊர் வம்புகள் பேசினார். இன்னார் வீட்டில் திருட்டுப் போனது நவனி-ராதா மாதவன் என்ற அண்ணன் தம்பிகளைப்பற்றியெல்லாம் வம்பளந்தார். தம்பியின் புத்திசாலித்தனம், அண்ணனின் மூடத்தனம்பற்றிப் புகழ்ந்தார்; இகழவும் செய்தார். ஊரில் பரவியிருக்கும் புதுவித நோயைப்பற்றியும் பலவிதமாகப் பேசித் தீர்த்தார்.

கடைசியில் ஹுக்காக் குழலை வைத்துவிட்டு அசட்டுச் சிரிப்புடன் 'ம் .. ம் அந்தப் பணம் பாக்கி நின்று விட்டது. தினமும் நினைக்காமல் இல்லை. போகும் போது கொஞ்சம் கொடுக்கலாமே என்றுதான்... ஆனால், நினைவே இருப்பதில்லை. வயசும் ஆகிக்கொண்டு வருகிறதில்லையா?' என்ற பீடிகையுடன் மார்புக்கூட்டின் மூன்று விலா எலும்புகளுக்கு ஈடான மூன்று ஆயிரம் ரூபாய் நோட்டுக்களையும் அலட்சியமாய் எடுப்பது போல் எடுத்தார். ஆனால் ராய்

பகதூரோ மூன்றே ஆயிரந்தானா என்பதுபோல் உரக்கச் சிரித்தார்; 'கிடக்கிறது; இது எனக்குத் தேவையில்லை' என்று ஒரு வங்கப்பழமொழியை உதிர்த்தார். அநாவசியமாகத் தமது கையைக் கறையாக்கிக்கொள்ளத் தமக்கு விருப்பமில்லை என்றும் காட்டிக் கொண்டார். இதற்கு மேல் பெண்ணைப் பிறந்தகம் அனுப்பி வைக்கும்படி எவ்வாறு கேட்க முடியும்? ஆனால், ராமசுந்தரரோ அதற்குமேல் கூச்சப்படுவது அழகல்ல என்று எண்ணி மெதுவாக விஷயத்தை எடுத்தார். ராய் பகதூர் காரணம் கூறாமல், 'இப்போதைக்கு அது சாத்தியமில்லை' என்று சொல்லிவிட்டு வேறு வேலையாகக் கிளம்பினார்.

ராமசுந்தரர் பெண்ணிடம் முகத்தைக் காட்டவும் இயலாமல் ரூபாய் நோட்டுக்களை மேல் துண்டில் முடிந்து எடுத்துக் கொண்டு வீடு திரும்பினார். பணத்தை முழுவதும் தீர்க்காமல் சம்பந்தியின் வீட்டுக்கே இனிப் போவதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டார்.

சில நாட்கள் சென்றன. நிருபமா ஆளுக்குமேல் ஆளாக அனுப்பியும் தகப்பனார் வரவில்லை. அவளும் கடைசியில் ரோஷத்துடன் ஆள் அனுப்புவதை நிறுத்தினாள். இது தமது மனத்தைப் புண்படுத்தியது என்றாலும், ராமசுந்தரர் அதை வெளிக்காட்டவில்லை.

புரட்டாசி மாதம் வந்தது. 'இந்தத் தடவை கட்டாயம் நிருபமாவை அழைத்துவரத்தான் வேண்டும்' என்று அவர் உறுதியும் செய்து கொண்டார்.

பஞ்சமியன்று அவர் மறுபடியும் சில ரூபாய் நோட்டுக்களைத் துண்டில் மறைத்து எடுத்துக் கொண்டு சம்பந்தியின் வீட்டுக்குக் கிளம்பினார். அந்தச் சமயம் அவருடைய ஐந்து வயதுப் பேரன் ஓடிவந்து அவருடைய கால்களைக் கட்டிக் கொண்டான், 'தாத்தா, எனக்கு வண்டி வாங்கி வரத்தானே போகிறாய்?' என்றான். அவனுக்கு நீண்ட நாட்களாகவே சைக்கிள் வண்டி ஓட்டவேண்டுமென்று ஆசை. அந்த ஆசையை எப்படி நிறைவேற்றி வைப்பது என்று அவருக்குத் தெரியவில்லை. ஆறு வயதுப் பேத்தி ஒருத்தி ஓடி வந்தாள்; 'தாத்தா, நவராத்திரிக்கு நல்லதாக ஒரு பாவாடை வேணும்; நாலுபேர் பார்க்கும்படியாக இருக்க வேண்டாமா?' என்றாள் அவள்.

ராமசுந்தரருக்கும் இது தெரிந்த விஷயந்தான். அதற்காக அவர் எத்தனையோ யோசனைகள் செய்ததுண்டு. ராய் பகதூர் வீட்டில் விஜயாவை அழைத்தால் தமது மாட்டுப்பெண் ஏழை போலச் சென்று நிற்கவேண்டியிருக்கும் என்பதும் அவர் அறிந்ததுதான். ஆனால், இந்தக் கவலைகளால் முகத்தில் வறுமையின் சின்னங்கள்தான் அதிகரித்தன; வேறு பலன் ஏதும் கிட்டவில்லை.

வீட்டில் எழும் குற்றச் சாட்டுகளைக் கவனியாமல் அவர் சம்பந்தியின் வீட்டுக்குச் சென்றார்.

# பார்த்தோம் படித்தோம்

'தமிழரசு 1-4-87 இதழ் கண்டேன். விண்முட்டும் திருவரங்கக் கோபுரத்தின் பொலிவையும், கம்பீரத்தையும் அதன் மெருகு கொஞ்சமும் குறையாதபடி அட்டைப்படமாக்கியிருந்தீர்கள். அந்த அழகிய அட்டையைப் பத்திரப்படுத்திவிட்டேன்.

—எம். லேனாப்ரியன், திருமருகல்—609 702.

16-4-87 தமிழரசில் இடம் பெற்றிருந்த 'இந்திய தேசிய நூல் திருக்குறள்' அருமையான கட்டுரை; பன்மொழிப் புலவர் அவர்கள் எழுதியிருந்த அந்தக் கட்டுரை அனைவருமே படித்துப் பயன்பெறும் விதத்தில் இருந்தது. இதேபோல் தொடர்ந்து சிறுகதைகள் வெளியிட்டால் நல்லது!

— எஸ் இராணி, நிலையூர் அறந்தை, புதுகை மாவட்டம்.

'தமிழரசில் இடம் பெற்றிருந்த டாக்டர் வா. செ. குழந்தைசாமியின் 'எண்ணும் எழுத்தும்' அற்புதமான கருத்துகளை உள்ளடக்கியதாக இருந்தது. 'கணிதம், அறிவியல்கலைகளின் அரசி' என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது மிகச் சிறப்பு.

—பக்வத்சலம், மேல்மாயில்—632 203.

உவமைக் கவிஞர் சுரதா எழுதியிருந்த கவிதை, சித்திரை மலருக்குச் சிறப்புச் சேர்ப்பதாக இருந்தது. என்ன இருந்தாலும் மரபுக் கவிதைக்கு உள்ள சுவையே தனி தான்!

—உமாதினகரன், கோயம்புத்தூர்.

'தமிழரசு' சித்திரை மலரைப் பல வண்ணங்களில், எல்லா அம்சங்களோடும் தயாரித்துச் சிறப்பாக வெளியிட்டிருந்தீர்கள். இதே போல் தொடர்ந்து ஒவ்வொரு இதழையும் வெளியிட்டால் என்ன?

எம். பிச்சையா, கடையநல்லூர்.

'இணையிலா இன்பம் வழங்கும் இசைக்கருவிகள்' என்கிற கட்டுரை படித்தேன். சங்கீத ஞானம் உள்ள என் போன்றவர்களுக்குச் சர்க்கரைப் பொங்கல் அது!

—ஏ.வி. கணபதி, கோவிலம்பாக்கம்

'தமிழரசு' 16-4-87 'இதழில் 'சோவியத் பூங்காவில் தமிழ் மலர்கள்', 'அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம்' 'மோகூர் கந்தசாமி' போன்ற நல்ல பல கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. இதேபோலத் தொடர்ந்து பயனுள்ள கட்டுரைகளை வெளியிட வேண்டுகிறேன்.

—எஸ். பத்மஜா, மன்னார்குடி.

1-5-87 தமிழரசு இதழில், டாக்டர் அம்பேத்கார் பற்றிய கட்டுரை, மாணவர் பக்கம் எல்லாமே அற்புதமாக இருந்தன.

—கிருஷ்ண முத்துராமலிங்கம் எழுமலை - 626 535.

தஞ்சை மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்த பல்வேறு பயனுள்ள திட்டங்கள் பற்றி நன்முறையில் கட்டுரை வெளியிட்டிருந்தீர்கள். நன்றி.

—சொ. முத்தமிழ்வாணன் தஞ்சாவூர் - 613 001.

அன்று அவர் மனத்தில் தயக்கம் ஏதுமில்லை. வேலைக்காரன், வாயில் காப்போன் இவர்களைக் கூட ஏறிட்டுப் பார்க்கத் தயங்கு பவர், அன்று தம்முடைய வீட்டி னுள் நுழைவதுபோல் உள்ளே சென்றார். ராய் பகதூர் அப் போது வீட்டில் இல்லை. சற்று நேரம் காத்திருக்க வேண்டி வந்தது. மனத்தில் பொங்கி எழும் ஆர்வத்தைத் தணிக்க இய லாமல் அவர் பெண்ணைப் பார்த் தார். அகத்தின் மலர்ச்சி அவர் கண்களில் புலப்பட்டது. பெண் ணும் அழுதாள்; சிறிது நேரம் அவர்களால் பேசவும் முடிய வில்லை. கடைசியில் ராமசுந்தரர் 'இந்தத் தடவை, நிச்சயம் உன்னை அழைத்துப் போகிறேன் அம்மா! தடையே எதுவும் இராது' என்றார்.

அந்தச் சமயத்தில் அவருடைய பெரிய பிள்ளை ஹரிமோகன் தன் னுடைய பிள்ளைகள் இருவரை யும் அழைத்துக்கொண்டு உள்ளே வந்தான். 'ஏனப்பா, எங்களை யெல்லாம் நடுத்தெருவில் நிற்க வைத்து விட்டாயே; இது நியாயமா?' என்றான் அவன்.

'உங்களுக்காக, நான் சொன்ன வார்த்தை தவற வேண்டுமா? நரகத்துக்கா நான் போக வேண் டும்!' என்று எரிந்து விழுந்தார் ராமசுந்தரர். அவர் வீட்டை விற்றுவிட்டார். பிள்ளைகளுக்கு அது விவரம் தெரியக்கூடாது என்று எவ்வளவோ மூடித்தான் வைத்தார். என்றாலும், அவர் களுக்கு அது தெரிந்து விட்டது. அவர்களுக்கு இது எரிச்சலையும் அருவருப்பையும் மூட்டியது.

'தாத்தா, எனக்கு நீ வண்டி வாங்கித் தரமாட்டியா?' என்ற வாறு பேரன் அவர்காலைக் கட்டிக் கொண்டான். தலை குனிந்து உட்கார்ந்திருந்த தாத்தாவிட மிருந்து பதில் ஏதும் வரவில்லை. மெல்ல அவன் அத்தையை அணுகி னான். 'அத்தை! நீ எனக்கு வண்டி வாங்கித் தர்றயா?' என் றான்.

நிருபமாவுக்கு விஷயம் தெள் ளென விளங்கியது. 'அப்பா, இனிமேல் என் மாமனாருக்கு ஒரு காசு கொடுத்தாலுங்கூட உங்கள் பெண்ணைக் காண மாட்டீர்கள். உங்களைத் தொட்டுச் சொல் கிறேன்' என்றாள் அவள்.

'சீச்சீ! அப்படிச் சொல்லாதே அம்மா! பணம் தராவிட்டால், உனக்கும் அவமானம்; உன் தகப் பனுக்கும் தலைகுனிவு' என்றார் ராமசுந்தரர்.

'பணம் கொடுத்தால்தான் அவ மானம். உங்கள் பெண்ணுக்கு ஒருவித மரியாதையும் கிடை யாதா? பணம் இருக்கும் வரை யில்தான் எனக்கு மதிப்பா? வேண்டாம் அப்பா! இந்தப் பணத்தைக் கொடுத்து என்னைச் சிறுமைப்படுத்தாதீர்கள். தவிர, என் கணவருக்கு இந்தப் பணம் தேவையில்லையே!'

'உன்னை அனுப்பமாட்டார் களே, அம்மா.'

'அதற்கு என்ன செய்வது? நீங்களும் அந்த ஆசையை விட்டு விடுங்கள்!'

> * வரதட்சணை கொடுத்தாலன்றித் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று கூறுகிற எந்த வாலிபனும்—தான் படித்த படிப்பிற் கும், தான் பிறந்த நாட்டிற்குமே இழிவு செய்பவனாவான்; அத்தோடு பெண்ணினத்தையே அவமானப் படுத்துபவனும் ஆவான்.
>
> -மகாத்மா காந்தியடிகள்

ராமசுந்தரர் வேறு வழியின்றி மேல்துண்டில் பணத்தை முடிந்து எடுத்துக்கொண்டு திருடனைப் போல வெளியேறினார்.

ராமசுந்தரர் பணம் கொண்டு வந்தது, நிருபமா அதைத் தடுத் தது, அவர் பணத்தைத் திரும்ப எடுத்துச் சென்றது இவை யாவும் ரகசியமாக இருக்கவில்லை. வம்புக் காரியான வேலைக்காரி ஒருத்தி இதற்குக் கண்ணும் மூக்கும் வைத்து, மாமியாரிடம் எடுத்துச் சொன்னாள். மாமியாரின் ஆத்திரம் அளவுகடந்துபோயிற்று. அதன் விளைவாக, நிருபமாவுக்குப் புக்கக வாழ்க்கை நரகமாகிவிட் டது. கணவனோ, கல்யாணமான சில நாட்களுக்குள் டெபுடி மாஜிஸ்டிரேட் பதவியேற்று வெளியூர் சென்றுவிட்டான். பிறந்தகத்தாருடன் பழகினால் கீழ்த்தரமான பழக்கந்தான் படியும் என்ற சாக்கில், பிறந்த வீட்டாரின் தொடர்பும் இற்று விட்டது.

இந்த நிலையில் நிருபமா உடம்புடன் படுத்துவிட்டாள். மாமியார் மட்டுந்தான் இதற்குக் காரணம் என்று சொல்லிவிடமுடி யாதுதான். நிருபமா உடம்பைச் சரியாகக் கவனித்துக் கொள்ள வில்லை. கார்த்திகை மாதக் குளிரில் போர்வைகூட இராமல் ஜன்னல்களைத் திறந்துவைத்துக் கொண்டு தூங்கினாள், உரிய வேளையில் சாப்பிடுவதுகூடக் கிடையாது. வேலைக்காரி நடு நடுவே சாப்பாடு கொண்டு வர மறந்துவிட்டால், அவள் வாய் திறந்து கேட்கமாட்டாள்.

நோய் முற்றியது. மாமியார் 'அத்தனையும் வேஷம்!' என் றாள். ஒரு தடவை நிருபமா, அண்ணன்மாரையும், தகப்பனா ரையும் பார்க்க விரும்பினாள். 'பிறந்தகம் போக ஒரு சாக்கு' என்று இடித்துரைத்தாள் மாமியார்.

சொன்னால் நம்புவதுகூடக் கடினந்தான். கடைசியாக ஒரு நாள் நிருபமாவுக்குச் சுவாசம் வாங்கத் தொடங்கியபோதுதான் முதல் முறையாக டாக்டர் வந்து பார்த்தார். அதுவே கடைசியாக வும் ஆகிவிட்டது.

வீட்டிற்குப் பெரிய மருமகள் காலமாகிவிட்டாள். கடைசிக் காரியங்கள் தடபுடலாக நடந் தன. ராய் பகதூர் வீட்டில் விஜயாவன்று காளிப் பிரதிமை விஸர்ஜனம் எவ்வளவு ஆடம் பரத்துடன் நடக்குமென்று புகழ் பெற்றதோ, அவ்வளவு புகழுடன் ராய் பகதூர் வீட்டு முதல் மருமகளின் கடைசிக் கிரியைகள் நடந்தேறின! சந்தனக் கட்டை களாலேயே முழுதும் இதுவரை யில் எந்தச் சிதையும் அடுக்கிய தில்லை என்று பேசிக்கொண் டார்கள். இத்தகைய நடப்பு ராய் பகதூர் வீட்டில்தான் நடக்க முடியும் என்ற அளவுக்கு அவர்கள் செய்தார்கள். கொஞ் சம் கடன்கூட ஏற்பட்டதாகக் கேள்வி.

ராமசுந்தரரைத் துக்கம் விசா ரிக்க வந்தவர்கள், எவ்வளவு ஆடம்பரத்துடன் அவளுடைய கடைசிக் காரியங்கள் நடந் தேறின என்று விதவிதமாக வருணித்தார்கள்.

டெபுடி மாஜிஸ்டிரேட் அதற்குள் ஒரு கடிதம் எழுதியிருந்தான். 'ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்டேன். மனைவியை அனுப்பி வை' என்று அவன் எழுதியிருந்தான். தன்னுடைய ஒரு கண் போய் விட்டதை அவன் அறிய மாட்டான்.

ராய் பகதூரின் மனைவி, 'அப்பனே, உனக்காக வேறு பெண் பார்த்து வைத்திருக்கிறேன். ஆகவே, லீவு எடுத்துக்கொண்டு வா' என்று அதற்குப் பதில் எழுதி னாள். இந்தத் தடவை இருபதி னாயிரம் ரூபாய் வரதட்சணை; அதுவும் கைமேல் ரொக்கமாகக் கொடுத்துவிட வேண்டும் என்று ஏற்பாடு.



# இந்திய உதவி நாடும் அமெரிக்கா!

அறிவியல் பூங்காக்களை' அமைப்பது எப்படி என்று அமெரிக்கர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக, இந்திய நிபுணர்கள் சிலர் விரைவில் அமெரிக்கா செல்ல உள்ளனர்.

5 முதல் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வேடிக்கையாக விஞ்ஞானக் கருத்துக்களை விளக்கக்கூடிய விளையாட்டுத் திடல்களை உருவாக்குவதில் இந்தியா முன்னணியில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இத்தகைய 'அறிவியல் பூங்காக்கள்' வெற்றிகரமாக இயங்கி வருகின்றன என்கிறார் அமெரிக்காவிலுள்ள செயின்ட் லூயி மியூசியத்தின் இயக்குநர் ஜெப்ரி பான்னர்; அண்மையில் அவர் இந்தியாவுக்கு வந்திருந்தார். இங்குள்ள 3 பெரிய அருங்காட்சிக் கூடங்களை அவர் பார்வையிட்டார். ''குழந்தைகளின் துடிதுடிப்பான ஆற்றலையும் துருதுருப்பத்தனத்தையும் திசை திருப்பி, விஞ்ஞானக் கருத்துக்களை விளையாட்டாகவே அவர்களுக்கு விளங்க வைக்கும் பணியில் இந்தியர்கள் காட்டும் உற்சாகம் அனைவரையுமே தொற்றிக் கொள்ளும்'' என அவர் குறிப்பிட்டார்.

இத்துறையில் இந்திய நிபுணர்களின் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அமெரிக்கர்கள் ஆர்வத்துடன் உள்ளனர். ''இத்தகைய பூங்காக்களை நாங்களே உருவாக்கக்கூடிய தொழில்நுட்பம் எங்களிடம் இல்லை என்று இதற்குப் பொருளல்ல; இந்தியா இத்துறையில் நல்ல அனுபவம் பெற்றுள்ளபோது, அதைப் பயன்படுத்திக் கொள்வதை விட்டுவிட்டு, நாங்களும் இதில் முதலிலிருந்து ஆரம்பிப்பது வீண் வேலை'' என்று நியூயார்க் விஞ்ஞானக் கூடத்தின் இயக்குநர் ஆலன் பிரீட்மன் கூறினார்.

பம்பாயிலுள்ள மிகப் பெரிய அறிவியல் பூங்காவுக்கு இணையானதாகக் கூறத்தக்க பூங்கா அமெரிக்காவில் ஒன்றே ஒன்றுதான் உள்ளது என்றும், பிலடெல்பியாவிலுள்ள பிராங்களின் இன்ஸ்ட்டியூட் விளையாட்டுத் திடல்தான் அது என்றும் ஆலன் பிரீச்மன் சொன்னார்.

இதுபோன்ற முழு அளவிலான அறிவியல் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு நியூயார்க் விஞ்ஞானக் கூடம் திட்டமிட்டு வருவதாகவும் அறிவியல் கொள்கைகளை விளக்கும் முழு அளவிலான 50 விளையாட்டுப் பொருட்கள் இங்கே நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டால், இதனை நிறுவுவதற்கு இந்தியாவில் உதவி கோரப்படும் என்றும், பதிலுக்கு இந்தியாவுக்குக் கல்வித்துறையில் பயன்படுத்தப்படக்கூடிய டெலிவிஷன், திரைப்படச் சாதனங்கள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இத்திட்டம் பற்றி இந்திய நிபுணர்களுடன் விவாதிப்பதற்காகத் தூதுக்குழு ஒன்றை இந்த ஆண்டு துவக்கத்தில் இந்தியாவுக்கு அனுப்பி வைத்ததாகவும் அவர் சொன்னார்.

மிஸ்ஸௌரியில் 'அறிவியல் பூங்கா' ஒன்றை அக்டோபர் மாதத்தில் துவக்குவதற்கு அங்குள்ள 'செயின்ட் லூயி சென்டர்' திட்டமிட்டுள்ளது. இங்கு 22 காட்சிப் பொருள்கள் அமைக்கப்படும். மணலைப் பயன்படுத்திக் கணிதத்தைக் கற்பிப்பது, ஊஞ்சல்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி விஞ்ஞானக்கருத்துக்களை விளக்குவது ஆகியவை இவற்றுள் அடங்கும்.

அறிவியல் பூங்காக்களை வடிவமைப்பது பற்றிய கருத்தரங்கொன்று லூயி மையத்தில் அண்மையில் நடைபெற்றது. 3 இந்திய நிபுணர்கள் இதில் பயிற்சி அளித்தனர். கல்கத்தாவிலுள்ள ''அறிவியல் காட்சிக் கூடங்களுக்கான தேசியக் கவுன்சிலின்'' இயக்குநர் டாக்டர் சரோஜ்கோஸ், பம்பாயிலுள்ள நேரு அறிவியல் மையத்தின் இயக்குநர் டாக்டர் ஆர்.எம். சக்ரவர்த்தி, அம்மையத்தின் தொழில்நுட்ப அதிகாரி ஏ.கே. தாட்கே ஆகியோரே அவர்கள்.

''அறிவியல் பூங்காக்களின் வடிவமைப்பும் கட்டுமானமும்'' என்னும் அந்தக் கருத்தரங்கிற்குக் கல்வி, அறிவியல் பற்றிய இந்திய அமெரிக்கத் துணைக் கமிஷனும் அறிவியலுக்கான இந்திய தேசியக் கவுன்சிலும் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன.

# அறிவுச் சுடர்

* ஜீன்களைத் தாங்கிச் செல்பவை யாவை?
  குரோமோசோம்கள்

* தங்கம், பாதரசம் இவற்றின் அடர்த்தி எண்கள் யாவை?
  தங்கத்தின் அடர்த்தி எண். 19.3 கிராம். பாதரசத்தின் அடர்த்தி எண். 13.6 கிராம்.

* ஜெனரேட்டரைக் கண்டு பிடித்த விஞ்ஞானி யார்?
  1860-ஆம் ஆண்டு பிகிஒண்டி என்ற அறிவியலார்.

* வாய்ப்புண், வயிற்றுப்புண், குடல் புண் ஆகியவற்றை ஆற்றுகின்ற சக்தியுடைய தாவரம் எது?
  மணத்தக்காளி.

* பென்சிலின் மருந்தைக்கண்டு பிடித்தவர் யார்?
  அலெக்ஸாண்டர் பிளமிங்

* கொய்னா எதற்குப் பயன் படுகிறது?
  மலேரியாவைக் குணப் படுத்த...

* சூரியனைச் சுற்றிவர 165 ஆண்டுகள் எடுத்துக் கொள்ளும் கோள் எது?
  நெப்டியூன்

* நேர் எதிர் இருபடி விகித ஈர்ப்பு விதியை உருவாக்கிய அறிவியல் அறிஞர் யார்?
  நியூட்டன்

* மின்சாரத்தில் ஒரு யூனிட் என்பது எதைக் குறிக்கிறது?
  100 வாட் பல்பு 1 மணி நேரம் எரிந்தால் செலவாகும் மின் சாரத்தின் அளவு 1 யூனிட் ஆகும்.

* நீர் மூழ்கிக் கப்பலில் பயன் படுத்தப்படும் ஒரு கருவி எது?
  பெரிஸ்கோப்

* ஒரு பொருள் விழும்பொழுது எவ்வாற்றல் குறைகிறது?
  எவ்வாற்றல் அதிகரிக்கிறது?
  நிலையாற்றல் குறைகிறது. இயக்க ஆற்றல் அதிகரிக்கிறது.

* பாலூட்டிகளின் வகையைச் சார்ந்த ஐந்து பிராணிகள் கூறு.
  எறும்பு திண்ணி, டால்பின், எலி, முயல், குரங்கு போன்றவை.



**மா**ணவ மணிகளே!

இது உங்கள் பக்கம்.

குட்டிக்கதைகள், கட்டுரைகள், பொது அறிவுத் துணுக்குகள், கவிதைகள் முதலானவை எழுதி அனுப்பலாம். கதை, கட்டுரை, கவிதைகள் சொந்தமானவையாக இருத்தல் வேண்டும். துணுக்குகளுக்கு ஆதாரம் இருத்தல் வேண்டும்.

கல்வியோடு கதை, கட்டுரை எழுதுதல், விளையாட்டு, நாடகம், ஓவியம், பேச்சு முதலானவற்றில் திறமையுள்ள மாணவ, மாணவிகள் தங்களைப் பற்றிய குறிப்புடன், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தையும் இணைத்து, வகுப்பு ஆசிரியர் கையொப்பமுடன் அனுப்பி வைக்கலாம்.

பள்ளி சார்பில் நடக்கும் நாட்டு நலப்பணித் திட்டம் (என். எஸ். எஸ்.) பற்றிய செய்திகளையும் புகைப்படத்துடன் ஆசிரியர்கள் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்.





# மரம் வளர்ப்போம்!

—நாகை மனோகரன்

மரங்கள் மண்ணின் மைந்தர்களாம்
மகிழ்ந்து நாமும் போற்றிடுவோம்.
உரமாம் இலைகள் தன்னையே
உவந்து மரங்கள் அளித்திடுமே!

இயற்கை தந்த விசிறிகளாம்
இனிய மரங்களைக் காத்திடுவோம்.
உயிரின் காற்றை வழங்கிடுமே
உவந்து வாழ உதவிடுமே!

விண்ணில் தவழும் மேகங்களை
விரைந்து காற்றாய்த் தழுவியே,
மண்ணில் மழையைப் பெய்விக்கும்
மந்திரக் கோல்கள் மரங்கள்தாம்!

இயற்கை அளித்த சீதனத்தை
எளிதாய் வெட்டுதல் நன்றாமோ?
உயர்ந்த மரங்களை அழித்திடவே
உரிமை நமக்கும் ஏதப்பா?

மரங்கள் நாட்டின் செல்வமாம்
மகிழ்ந்து நாமும் வளர்க்கலாம்.
விரைந்து நாமும் செயல்படுவோம்
வீட்டில் மரங்கள் வளர்த்திடுவோம்!



## காயிதே மில்லத்



## மாணவர் பக்கம்

**ந**மது நாட்டின் மிகச்சிறந்த தலைவர்களுள் காயிதேமில்லத் இஸ்மாயில் அவர்களும் ஒருவர். அன்பும், பண்பும்மிக்க அவர், சமுதாய வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தார்.

'காயிதே மில்லத்' என்னும் அரபுச் சொல்லுக்கு 'மக்களின் வழிகாட்டி' என்பது பொருள். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முகம்மது இஸ்மாயில் என்பதாகும்.

இவர் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள பேட்டை என்னும் ஊரில் 1896-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5-ஆம் நாள் பிறந்தார். தந்தை யாரின் பெயர் மியாகான் இராவுத்தர்; தாயாரின் பெயர் முகைதீன் பாத்திமா.

நெல்லையிலும், சென்னையிலும் கல்வி கற்ற இவர். சிறந்த மாணவராகத் திகழ்ந்து பரிசுகள் பலவற்றையும் பெற்றார். விடுதலை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். 1921-ஆம் ஆண்டில் காந்தியடிகள், மௌலானா முகம்மது அலி முதலியோர் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். இவர் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவராக இருந்து சிறுபான்மை மக்கள் உரிமைக்கும், நாட்டு மக்களின் நலனுக்கும் பெரிதும் பாடுபட்டார்; சட்டமன்ற உறுப்பினராகவும் அரசியல் நிர்ணயசபையின் உறுப்பினராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்து சிறந்த முறையில் பணியாற்றியிருக்கிறார்.

ஒரு சமயம் இந்திய நாட்டுக்குப் பொதுமொழியாக எந்த மொழியைத் தேர்ந்தெடுப்பது என்று அரசியல் நிர்ணய சபையில் விவாதம் நடந்தது; அப்போது காயிதேமில்லத் அவர்கள். 'தொன்மை, எளிமை, இனிமை, இலக்கிய, இலக்கண வளம் நிறைந்த ஒரு மொழியே பொது மொழி ஆக்கப்பட வேண்டும். இத்தகைய சிறப்புகள் இந்தியமொழிகளுள் தமிழுக்கு மட்டுமே உள்ளன. எனவே, தமிழையே இந்திய நாட்டின் பொது மொழி ஆக்க வேண்டும்' என்று உறுதிபடக் கூறினார்.

கல்வி வளர்ச்சிக்கு இவர் பெரிதும் பாடுபட்டார். பலபள்ளிகள் இவரது முயற்சியில் தோன்றின.

காயிதே மில்லத் 4-4-1972 இல் மறைந்தார். அவரது நினைவாக சென்னை அரசினர் கலைக் கல்லூரிக்குக் காயிதே மில்லத் கலைக் கல்லூரி என்ற பெயரும், சென்னை, திருவல்லிக்கேணி நெடுஞ் சாலைக்குக் 'காயிதே மில்லத் நெடுஞ்சாலை' என்ற பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

# தெரிந்து கொள்ளுங்கள்!

## அந்தமான் நிக்கோபார் தீவுகள்

**அ**ந்தமான் நிகோபார் தீவுகள் வங்காள விரிகுடாவில் அமைந்துள்ளன. இந்தியத் தீபகற்பத்திலிருந்து 1200 கிலோமீட்டர் தொலைவில் இத்தீவுகள் அமைந்துள்ளன. இத்தீவுகளின் இயற்கைச் செல்வம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் இத்தீவுகளில் நெல் உற்பத்தி 10,000 டன்களாக இருந்தது. தற்போது நெல் உற்பத்தி 21,000 டன்களாக உயர்ந்துள்ளது. பருப்பு வகைகள் உற்பத்தி மும்மடங்காக அதிகரித்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 230 டன்களை எட்டியுள்ளது. இத்தீவின் வனத்துறை, சிகப்பு எண்ணெய் பனைமரச் சாகுபடியை மேற்கொண்டுள்ளது. சிகப்பு எண்ணெய் பனம்பழம் உற்பத்தி எக்டேர் ஒன்றுக்கு 8 டன்களை எட்டியுள்ளது.

இத்தீவுகளில் பொருளாதார மண்டலத்தில் அமைந்துள்ள மீன் வளம் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்துள்ளது. ஆண்டொன்றிற்கு 6,000 டன் மீன் பிடிக்கப்பட்டபோதிலும் இப்பகுதியில் மீன் வளம் ஒரு லட்சத்து 50,000 டன்களாக அமைந்துள்ளது. மீன் பிடித்தலை அதிகரிப்பதற்குத் தகுந்த உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். மீன் பிடித்தலின்போது, இத்தீவுகளை சுற்றியுள்ள உயிரின சமன்பாட்டு நிலைமைக்குப் பாதகம் ஏற்படாதவாறு பாதுகாக்கப்படும். டுனா வகை மீன் இனம் இப்பகுதியில் காணப்படுகிறது.

இத்தீவுகளில் 86 சதவீத நிலப் பகுதியில் காடுகள் அமைந்துள்ளன. வன வளத்தினைப் பாதுகாக்க விஞ்ஞான நிர்வாகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தோட்டப்பயிர் பயிரிடுவதற்கான அதிக வாய்ப்பும் இத்தீவுகளில் அமைந்துள்ளது.

இத்தீவுகளில் கப்பற் போக்குவரத்து, வாழ்க்கை இணைப்புப் பாலமாக அமைந்துள்ளது. சமுத்திரம் நெடுஞ்சாலையாக அமைந்துள்ளது. இந்தியாவிலிருந்து கப்பற்போக்குவரத்து இணைப்பு மார்க்கமாக அமைந்துள்ளது.

பள்ளிக்கூட சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஆரம்பப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு விரிவான சுகாதார சேவை அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றிற்கு 2000 மாணவர்கள் மருத்துவசோதனை செய்யப்பட்டு நோய்த்தடுப்பு பெற்றுள்ளனர்.

தொழுநோயை ஒழிப்பதற்காகக் களப்பணி மருத்துவ ஆய்வாளர்களுக்குத் தொழுநோயைக்கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து சுகாதார இயக்கம் கல்வி அளித்து வருகின்றது.





# இந்திய—சோவியத் இளைஞர்க்கு இடையில் நட்புறவு

இந்தியா முழுவதுமுள்ள 608 மத்திய செகண்டரி(சி.பி.எஸ்.இ) பள்ளிகளுக்கான 12ஆம் வகுப்புத் தேர்வுமுடிவுகள் தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளன. ஆம்; அத் தேர்வில் தமிழ்நாட்டு மாணவமாணவிகள் பல்வேறு பாடங்களிலும் அகில இந்தியாவிலேயே அதிக மதிப்பெண்கள் வாங்கி முதன்மை பெற்றிருக்கிறார்கள்.

குறிப்பாக - கணித பாடத்தில் மட்டும் 59 தமிழக மாணவ-மாணவியர், நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் அடைந்துள்ளனர்!

மொத்தத்தில் மத்திய செகண்டரி பள்ளித் தேர்வில் இந்த ஆண்டு 77.8 சதவிகித மாணாக்கர்கள் தேறியிருக்கின்றனர். சென்ற ஆண்டைவிட இது 1.1 சதவிகிதம் குறைவு.

விஞ்ஞானம், வர்த்தகம், மற்றும் தொழிற்கல்விப் பாடங்களில் மாணாக்கர் தேர்வு சதவிகிதம் சென்ற ஆண்டைக்காட்டி

# கல்வி சிறந்த தமிழ்நாடு

லும் இந்த ஆண்டு அதிகமாகியுள்ளது. அதே நேரத்தில் சரித்திரம், புவியியல் போன்ற பாடங்களில் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 5.1 சதவிகித மாணாக்கர்கள் குறைவாகத் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டில் இத்தேர்வு எழுதியவர்களின் மொத்த எண்ணிக்கை 44,437 பேர். சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 6,000 மாணவமணிகள் கூடுதலாகத் தேர்வு எழுதியிருக்கிறார்கள்!

மாணவர்களைவிட மாணவியரே அதிக அளவில் தேர்வெழுதியது சென்ற ஆண்டில்தான் என்பதல்ல; 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற பாரதி வாக்கை மெய்ப்பிக்கும் வகையில் - இந்த ஆண்டும் மாணவர்களை விட மாணவியரே அதிக அளவில் தேர்வெழுதி, அதிக மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

ஆசிய—பசிபிக் பிராந்தியத்தில் கூட்டுப் பாதுகாப்பு அமைப்பை உருவாக்கும் பணியில், இளைஞர் அமைப்புக்கள் தங்கள் பங்கினைச் செலுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை நாள்தோறும் வளர்ந்து வருகிறது.

இந்திய இளைஞர்களுக்கும் சோவியத் இளைஞர்களுக்கும் இடையில் வளர்ந்து வரும் உறவுகள் இதற்கு ஒரு முன் மாதிரியாக விளங்குகின்றன. ஆசிய—பசிபிக் பிராந்திய இளைஞர்களுக்கிடையில் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வளர்ப்பதற்கு இது ஒரு ஆதர்சமாக விளங்குகிறது.

சோவியத் யூனியனில் (1987 ஜூலை—1988 ஜூலை) நடைபெற இருக்கும் ''இந்திய விழாவிலும்'', இந்தியாவில் நடைபெற இருக்கும் ''சோவியத் விழாவிலும்'' (1987 நவம்பர் — 1988 நவம்பர்) இரு நாடுகளின் இளைஞர்களும் செயலூக்கத்துடன் பங்குபெற இருக்கிறார்கள். ஆசியாவில் சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் பாதுகாக்க ஆசிய மாணவர்-இளைஞர்களின் கூட்டு முயற்சிகளை வளர்ப்பதற்கு இந்த விழாக்கள் பெரிதும் உதவும் என நம்பலாம்.

ஐரோப்பாவில் 1981ல், 40க்கும் மேற்பட்ட சர்வதேச மாநில மாணவர்-இளைஞர் அமைப்புகளை உள்ளடக்கிய ஒரு ''அனைத்து ஐரோப்பிய மாணவர்-இளைஞர் ஒத்துழைப்பு மன்றம்'' ஒன்று உருவாக்கப்பட்டது. அது முறையாகக் கூடி, உலகின் முக்கியப் பிரச்னைகளை விவாதித்துச் செயல்பட்டுவருகிறது. அதே போல ஆசியாவிலும் ஒரு அமைப்பை உருவாக்கலாம் என சோவியத் நாட்டு இளைஞர் அமைப்புக்களின் தலைமை நிறுவனத் தலைவர் கெல்னோகோல் கூறியுள்ளார்.

—சோவியத் செய்தி

# நூல் நயம்

## வசந்தகால மலர்கள்

தொகுப்பாசிரியர்: புலமைதாசன்.
வெளியீடு: புலமைப் பதிப்பகம், 10, பார்த்தசாரதி சாமி சந்து, திருவல்லிக்கேணி சென்னை - 600005.

விலை: ரூ.4. பக்கம்: 140

வெவ்வேறு எழுத்தாளர்கள் எழுதிய பதின்மூன்று சிறுகதைகள் வசந்தகால மலர்களாக இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. நல்ல சிறுகதைகளையே தொகுப்பாசிரியர் தேர்ந்தெடுத்துள்ளார்.

சமுதாயத்தில் ஏற்பட வேண்டிய மாற்றத்தை ஒவ்வொரு கதையின் கருப்பொருளும் உணர்த்துகின்றது.

ஒவ்வொரு சிறுகதை பற்றியும், ஒரு பிரபல எழுத்தாளரிடமிருந்து கருத்துப் பெற்று, அதனை வெளியிட்டிருப்பது எழுத்துலகில் ஒரு புதுமையாகும்.

> • சென்னை-கல்கத்தா தொலைக்காட்சி நிலையங்களுக்கு 1987-88ல் இரண்டாவது அலைவரிசையை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஜித் பாஞ்சா மக்களவையில் தெரிவித்தார்!

## முத்திரைக்குமரி

ஆசிரியர்: கவிஞர் மீனவன்
வெளியீடு: அம்பிகாபதி நிலையம் 16, பி. புதுத் தெரு, நாகப்பட்டினம்-611 001.

எழுபது தலைப்புகளிலான இனிய தமிழ்க் கவிதைகளின் தொகுப்பு நூல் இது. கவிதைகள் மொழியியல், நாட்டியல், உழைப்பியல், காதலியல், உலகியல், நினைவியல், கனவியல் என ஏழு இயல்களாகப் பிரித்துத் தொகுக்கப்பட்டிருப்பது சிறப்பாக உள்ளது. ஒவ்வொரு இயலும் ஒவ்வொரு முழுப்பக்கப் படத்துடன் தொடங்குகின்றன.

தமிழகம் மட்டுமல்ல; பாரதத் திருநாடு, உருசியா, வியட்நாம், வங்கம், ஈழம் ஆகிய எல்லா நாடுகளும் எழில்மிகு கவிதைகளாலே படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. திருவள்ளுவர் முதல் - பெரியார், காரல் மார்க்ஸ், பேரறிஞர் அண்ணா உட்பட - பாவேந்தர் வரையிலான கற்றறிவாளர்களின் தத்துவங்கள் கடைவிரிக்கப்பட்டுள்ளன.

சமுதாய மாற்றம் சடுதியில் வேண்டும் என்ற உணர்வு 'முத்திரைக் குமரி'யின் கற்கண்டுக் கவிதைகளிலெல்லாம் மின்னலிடுகின்றது. புதுக்கவிதை மோகம் வளர்ந்து வரும் இந்நாளில் இப்படியொரு மரபுக்கவிதைத் தொகுப்பு வெளியிடும் துணிவு வந்ததற்காகவே நூலாசிரியரைப் பாராட்டலாம்.

—இந்திரன்

## இஞ்சி, எலுமிச்சை—தேன் எளிய வைத்தியம்

ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராசன்

வெளியீடு: தமிழ்ச் செல்வி நிலையம் 43, சித்திரைக் குளம் வடக்குத் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை ரூ. 5.00 பக்: 72.

தமிழரின் உணவு முறைகளே உடலுக்கு நலம் பயக்கும் மருத்துவப் பொருட்களைக் கொண்ட வகையில்தான் தொன்றுதொட்டே இருந்து வந்திருக்கிறது என்று கூறும் ஆசிரியர், நூல் முழுவதும் அதனை மெய்ப்பித்திருக்கிறார்.

என்னென்ன நோய்களுக்கு, எந்தெந்த மருந்துப் பொருட்களை எத்தகைய அளவில் கலந்து எவ்வாறு மருந்து தயாரிப்பது? மருந்தை எத்தனை வேளை, எத்தனை நாட்கள் பருக வேண்டும் என்பன போன்ற விரிவான விளக்கங்களைக் கூறும் நூல் இது.

இஞ்சியில் மட்டும் 17 வகை மருந்துகள் தயாரிக்கும் முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இப்படி எலுமிச்சை, தேன், ஆகியவை பற்றிய மருந்து விவரங்களும் உண்டு.

எளிய உடல் உபாதைகளைச் சிக்கனமாக நாமே போக்கிக் கொள்ள உதவும் நூல்.

## உயிரியல் பாட்டு சிறுவர் பாடல்கள்

ஆசிரியர்: பாவலர் தமிழியக்கன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41-பி. சிட்கோ எஸ்டேட். சென்னை-600 098.

விலை ரூ. 8.00 பக்: 80.

பள்ளி மாணவர்கள் படித்துப் பயன் பெறும்வண்ணம் அறிவியல் கருத்துக்களை எளிய சொற்களில் கவிதையில் கூறும்புதுமைப் படைப்பு இந்நூல்.



ஒவ்வொரு கவிதைக்கும் அதற்குரிய ஓவியங்களை வெளியிட்டிருப்பது சிறப்பாகவும் அழகாகவும் உள்ளது.

ஆசிரியர் கையாண்டுள்ள உவமைகள் என்றென்றும் நினைவில் நிற்பவை.

முதுகெலும்பற்றவை — முதுகெலும்புள்ளவை என்று பிரித்து, 31 உயிரினங்களைப்பற்றிக்கவிதை பாடி இருக்கிறார் ஆசிரியர். பாராட்டப்பட வேண்டிய அரிய முயற்சி.

—அ. மருதவிநாயகம்

## வாழ்க நலமுடன்

ஆசிரியர்கள்: டாக்டர் பி.எஸ். பன்னீர் செல்வம், புலவர் பெ. வேணு
வெளியீடு: சண்முகா மருத்துவ மனை, 2-ஆவது அக்ரகாரம் சேலம்-1.

விலை. இல்லை. பக்: 64.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதை மெய்ப்பிக்கின்ற இந்நூல் மனிதனை வருத்தி அழிக்கும் குடல்புண், புற்றுநோய், மூலம், காமாலை முதலான நோய்கள் பற்றிப் பேசுகின்றது.

ஒவ்வொரு நோயும் வருவதற்குரிய காரணங்கள் அவற்றின் அடையாளங்கள், தீர்க்கக்கூடிய வழிமுறைகள் என்பன மிகத் தெளிவாகக்குறிக்கப்பட்டுள்ளன.

மருத்துவமும் தமிழும் இணைந்து மோகன கீதம் இசைக்கின்றன. தமிழ்க் கவியின்பம் மாந்தியபடி மருந்தியல் நுட்பங்களில் தோய்ந்து நோய் ஆய்ந்து அதிலிருந்து விடுதலை பெறலாம். இலக்கியச் சான்றுகள் பலவும் இடம் பெற்றுள்ளன.

சிறந்த பயன்நிறைந்த நூல் இது.

-டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி

## நாங்கள் நாத்திகரானோம்

ஆசிரியர்: கோரா (தமிழாக்கம் கலசம்)
வெளியீடு: புதுவாழ்வுப் பதிப்பகம், 23 நான்காவது முதன்மைச் சாலை, கஸ்தூரிபாய் நகர், அடையாறு, சென்னை-600 020.

பக்: 120. விலை ரூ. 18

ஆந்திரநாட்டு நாத்திகச் செம்மல் கோரா அவர்களின் தன் வரலாற்று நூலாகும் இது. அறிவியல் துறைப் பேராசிரியரான அவர் காட்சிக்கு எளியர்; தந்தை பெரியார் அவர்களுடன் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். ஆங்கிலத்தில் அவரெழுதிச் சென்ற வரலாறு, அப்படியே சுவை குன்றாமல் திரு. கலசம் அவர்களால் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.

மாற்றம், அறிவுத்தாகம் முதலிய 19 விதத் தலைப்புகளின் கீழே பகுத்தறிவுப்பாடம் புகட்டும் கட்டுரைகள் 'நாங்கள் நாத்திகரானோம்' நூலை அணி செய்கின்றன.

நாத்திகர்கள் மட்டுமல்ல, ஆத்திகர்களும் இதனைப் படிக்கலாம். மக்கள் பற்று, காந்தியக் கொள்கை, முன்னேறிய நாடுகளின் மூர்க்கப் போக்கு, அரசியல் நெறி ஆகிய பலதரப்பட்ட நல்ல பல செய்திகளையும் நமக்குத் தரும் நூல் இது.

—'முடிகொண்டான்'.

> * எழுத்தில் புலமை மட்டும் இருந்தால் போதாது; அந்தப் புலமையோடு உள்ளொளியும் துலங்க வேண்டும். எழுத்தாளனின் எழுத்தியல்பைப் பார்த்து, அந்தப் புத்தகத்தைப் படிப்போரும் திருந்திப் பயனுறவேண்டும். அப்படி எழுதுபவன் எவனோ, அவனே சிறந்த எழுத்தாளன்!
>
> -மாந்தேன்

## கீதை—என் அன்னை

ஆசிரியர்: மகாத்மா காந்தி,
வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம், மதுரை-625 020,

விலை: ரூ. 3. பக்: 47.

கீதை எனக்குக் குருவாகவும், அன்னையாகவும் விளங்குகிறது என்று அண்ணல் காந்தியடிகள் கீதையின் பெருமையை உணர்த்துகிறார்.

அற நூலாகவும், அறிவு நூலாகவும் விளங்கிடும் கீதையின் கருத்துக்கள் தத்துவங்களெல்லாம் இந்நூலில் எடுத்துக்கூறப் பட்டுள்ளன. கீதை, வாழ்க்கைக்கு வழிகாட்டி மட்டுமல்ல, இறையுணர்வை உணர்த்தும் இனிய நூலாகவும் விளங்குகிறது என்பதை ஒவ்வொரு வரியிலும் நாம் அறிய முடிகிறது.

இளைஞர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும்கூட, படித்துத் தெளிவு பெறும் நூல்.

## சர்வோதயம்

ஆசிரியர்: டாக்டர் மா. பா. குருசாமி
வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம், காந்தி மியூசியம், மதுரை-625 020.

விலை: ரூ. 6. பக்: 102.

'எல்லோருடைய நலம்' என்பதே 'சர்வோதயம்' ஆகும். "சர்வோதயம் ஒரு வாழ்க்கைத் தத்துவம். தனி மனிதனும் சமுதாயமும் இணைகிறது. வளரத்தக்க சூழ்நிலைகளைத் தன்னகத்தே கொண்ட புதிய சமுதாய அமைப்பினை இது விளக்குகின்றது. இன்றைய சமுதாயஅமைப்பிலுள்ள அடிப்படைக் குறைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் ஆராய்கின்றது" (பக்கம்: 7)-என்று சர்வோதயத்தின் கோட்பாட்டினைத் தெளிவுபடுத்துகிறது இந்நூல்.

புதிய சமுதாயம் மலர வேண்டும் என்பது காந்தியடிகளின் கனவாகும். அந்தக் கனவை நனவாக்குவதுதான் சர்வோதயம். அந்தக் கருத்துகளை மிக அழகாகத் தொகுத்துச் சுவைபடத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

படித்துப் பயன் பெற வேண்டிய நூல்.

—பி.வி.கிரி

## மகாகவியும் மக்கள் கவியும்

ஆசிரியர்: நா. முத்துலக்கையன்
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41- 9 சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட். சென்னை-600 098.

விலை ரூ. 11 பக்:124

இந்தியாவின் மகாகவி பாரதியையும் ரஷ்யாவின் மக்கள்கவி மயாகோவ்ஸ்கியையும் இந்நூலில் ஒப்பிட்டு நோக்குகிறார் ஆசிரியர்.

மொழி, பொதுவுடைமைச் சமுதாயம் போன்றனபற்றி இவ்விரு கவிகளும் யாத்த தனிக் கவிதைகளை மட்டும் ஆய்ந்ததோடு நில்லாமல் பாரதியின் 'பாஞ்சாலி சபதத்'தையும் மயாகோவ்ஸ்கியின் 'லெனின் கவிதாஞ்சலி'யையும் ஒப்பிட்டு ஆய்ந்துள்ள விதம் பாராட்டும் வகையில் உள்ளது.

பாரதியின் கவிதைகளும் மயாகோவ்ஸ்கியின் கவிதைகளும் ஒருவரைப் பின்பற்றி ஒருவர் எழுதியதுபோல் ஒத்த கருத்துக்கள் கொண்டன என்பதை இந்நூலை படிக்கும்போது நாம் உணர்கிறோம்.

—வி. இராவணன்.

# மேற்குத் தொடர்ச்சி மலை
# மேம்பாட்டுத் திட்டம்

நமது நாட்டின் இன்றியமையாத சொத்து, இயற்கை அரணாக இருக்கும் மேற்குத் தொடர்ச்சிமலை என்று கூறினால் அது மிகையாகாது.

இந்த மலைத் தொடரின் அமைப்பால் நாம் பெற்றுவரும் நன்மைகள் பலவாக இருந்தாலும் இப்பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட திட்டக் குழுக்கள் மூலம் தயார் செய்யப்பட்ட திட்டப் பணிகள் பலப்பல.

மலை வளம் காத்திடவும், சுற்றுப்புறச் சூழ்நிலைகள் தூய்மை பெற்றிடவும், மண் வளப் பாதுகாப்பு, நீர் நிர்வாகம், வன விலங்குகள் பாதுகாப்பு, காடுகள் வளர்ப்பு, போக்குவரத்து, செய்தித் தொடர்பு போன்ற பல பிரிவுகளையும் உள்ளடக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், மேற்குத் தொடர்ச்சி மலை முழுவதும் சுற்றுப்புறச் சூழ்நிலை தூய்மை பெற்றிடவும், தீட்டிய திட்டம் தான் 'மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.'

மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள், திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு கண்காணிப்புப் பொறியாளர் ஒருவரின் (வே. பொ.) நேரடிக் கண்காணிப்பில் கோவை, பெரியார், அண்ணா, மதுரை, காமராசர், திருநெல்வேலி, கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் உள்ள 18 வட்டங்களில் தீவிரச் செயல்பாட்டில் உள்ளன.

இந்தத் திட்டத்தின் நோக்கம்:

1. இருக்க வேண்டிய தரமான மேல் மண் அழிந்து விடாமல் காக்கப்படுதல்.

2. காடுகள் அழிக்கப்படாமல் காக்கப்படுவதுடன் நல்ல முறையில் பராமரித்தல்.

3. விலங்குகள், தாவரங்கள் சமநிலை பெற்றிடப் போதிய பாதுகாப்புகள் தருதல்

4. சுற்றுப்புறச் சூழ்நிலை தூய்மை பெறுதல்.

5. நீர் சேமிப்பு, நீர் நிர்வாகம் ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்துதல்.

6. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தித் தேவையான பிற முன்னேற்றங்கள் உற்பத்திப் பெருக்கம், விளை பொருட்கள் விற்பனைவசதி, கால்நடைப்பராமரிப்பு. போக்குவரத்து வசதி, செய்தித் தொடர்பு இவை யாவும் செம்மையான முறையில் செயலாக்கம் பெறுதல்.

மண் அரிமானம் காத்தல், நீர் சேமிப்பு நீர் நிர்வாகம் போன்ற சிரிய பணிகள் வேளாண் பொறியியல் துறை மூலம் நீர்ப் பிடிப்பு வாரியாக நிலத்தின் தன்மை நன்கு ஆராயப்பட்டு நிலத்திற்குத் தேவையான நிவர்த்திப் பணிகள் திட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகளின் சம்மதம் பெற்று, தேவைக்கேற்றபடி பின்வரும் செயல்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. சம உயர கற்சுவர்கட்டும் பணி; 2. சம உயர வாய்க்கால் எடுக்கும் பணி; 3. இடைப்பட்ட வாய்க்கால் எடுக்கும் பணி; 4. படிமட்டம் அடைக்கும் பணி; 5. தடுப்பணைகள் கட்டும் பணி: 6. ஓடைகள் பராமரிக்கும் பணி: 7. பலன்தரும் மரங்கள் நடும் பணி;

திட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகளின் சம்மதம் பெற்றபின் தொழில் நுட்ப ரீதியாகத் தேவையினைக் கருத்தில் கொண்டு திட்டப் பணிகள் செயல்படுத்தப் படுகிறது. திட்டத்திற்குச் செலவாகும் தொகை 40% மானியமாகவும், 60% கடனாகவும் தந்திட திட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகளே மேற்கொள்ள முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பணி மேற்கொள்ளப்பட்ட இரண்டு ஆண்டுகள் கழித்து அப்போது நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் 10 ஆண்டு சம தவணைகளில் வருவாய்த் துறை மூலம் பணம் வசூல் செய்திட வழி வகை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தினால் என்ன நன்மை ?

நிலத்தில் சத்தான மேல்மண் பாதுகாக்கப்படுவதால் பயிர்கள் செழித்து வளர வாய்ப்புகள் அதிகம் உண்டு.

வழிந்துவரும் நீர்வேகம் சரியாகக் கட்டப்படுத்தப்படுவதால் மண் அரிமானம் கணிசமான முறையில் தவிர்க்கப்படுகிறது.

நீர் சேமிப்பால் நிலத்தில் எப்போதும் ஈரம் காக்கப்பட்டு பயிர் வளர வாய்ப்புகள் ஏற்படுகிறது.

தடுப்பணைகள் கட்டப்படுவதன் மூலம் நீர் தேக்கப்பட்டு பாசனத்திற்கு நீர்வர வாய்ப்புகள் கிடைக்கிறது. மேலும் நீர்வேகம் கட்டுப்படுவதால் ஓடைகள் பெரிதாகி நிலமிழப்பு ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது.



நீர்த் தேக்கங்களில் அபரிதமாக மண் சேர்க்கப்படுவது தடுக்கப்படுகிறது.

இதுபோன்ற திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் ஆங்காங்கே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரே சீராகப் பயிர் விளைச்சல் பெற்றிட வழி வகைகள் செய்து தரப்படுகிறது. நிரந்தர உற்பத்தி பெருக்கத்தால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் வாய்ப்புகள் அதிகரிக்கிறது.

1986-87-ஆம் ஆண்டிற்கான மண்வளப் பாதுகாப்பு பணிகளுக்கான இலக்கு மற்றும் சாதனை விவரங்கள் : செயல் இலக்கு 1175 எக்டேர் சாதனை: 930 எக்டேர். நிதி இலக்கு ரூ. 58.75 இலட்சம். சாதனை ரூ. 39.10 இலட்சம்.

**வி. கோவிந்த பிரசாத்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**அண்ணா மாவட்டம்.**

# வ.வே.சு ஐயர் வாழ்விலே



இந்திய விடுதலைப் போரில் தம்மை முழுமூச்சோடு ஈடுபடுத்திக் கொண்டவர்கள் பலராவர். அவர்களில் சிலர் வன்முறை மூலமே நாம் சுதந்திரம் பெற முடியும் என்று நம்பினார்கள்; அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இறங்கினார்கள். வேறு சிலரோ வன்முறை என்பது நன்முறையல்ல; அகிம்சா வழிமூலமே அதைப் பெற்றுவிடலாம் என்று கருதினார்கள்; சத்தியாக்கிரகம் போன்ற அறப்போர்களில் ஈடுபட்டார்கள்.

வன்முறையே நன்முறை என்ற கருத்துடைய இளைஞர்கள் கூட்டத்தில் குறிப்பிடத் தக்கவராக விளங்கினார் வ.வே.சு. ஐயர். இளம் ரத்தம் எப்போதும் அவரை வேகத்துடனேயே இருக்கச் செய்தது. விவேகத்திற்கும் குறைவில்லை.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வரகனேரி இவருக்குச் சொந்த ஊர். 12-வது வயதில் மெட்ரிகுலேஷன் தேர்வெழுதி மாநிலத்திலேயே முதல் மாணவராக வெற்றி பெற்றார். சட்டப் படிப்பும் தொடர்ந்து முடித்தார். இலண்டன் மாநகருக்குச் சென்று அங்கே பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

அங்கே படிக்கச் சென்றிருந்த போதுதான் இவரது நெஞ்சில் சுதந்திரக் கனல் மூண்டது.

இலண்டன் மாநகருக்குப் படிக்க வந்திருந்த இந்திய இளைஞர்களெல்லாம் 'இந்திய விடுதி'யில் பிறருக்குத் தெரியாமல் அடிக்கடி கூடி, இந்தியச் சுதந்திரம் பற்றி எண்ணினர். 'சுதந்திர இந்தியா' என்கிற அமைப்பொன்றை நிறுவி, ஒத்த நினைப்புள்ளவர்களெல்லாம் ஒன்று திரண்டார்கள்.

'ஸ்காட்லாண்ட் யார்டு போலீசாரால்' அவர்களுடைய நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன.

அந்த நேரத்தில் அங்கிருந்த இந்திய இளைஞனான மதன்லால் திங்க்ரா என்பவரால் கொலை வெறியர்களான இரு பிரிட்டிஷ் அதிகாரிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். திங்க்ரா கைதானான். அந்த வழக்கில் சம்பந்தப்படுத்தி காவல்துறை, இந்திய இளைஞர்களை வழி நடத்திய வீரசாவர்க்கரையும் சிறையிட்டது.

அப்போது வ. வே. சு. ஐயர் அடிக்கடி சிறைக்குப்போய் சாவர்க்கரைப் பார்ப்பதும், அவர் ஆலோசனை பெற்று வந்து வெளியே அதைத் தீவிரமாகச் செயல்படுத்துவதுமாக இருந்தார். அதன் காரணமாக பிரிட்டிஷ் ஒற்றர்கள் அவரைக் கைது செய்யத் தீர்மானித்தார்கள். வ.வே.சு. ஐயர் கிடைத்தால்தானே? அவர்களிடமிருந்து தப்பி, பிரான்ஸ் நாட்டுக்குப் போய் சேர்ந்தார் இவர்.

அங்கும் தொடர்ந்த சோதனைகள் காரணமாகப் பல்வேறு மாறுவேடங்களில் உலா வரும்படி ஆயிற்று. சிலகாலம் தான் அப்படியும் அங்கே வாழ முடிந்தது. பின்னர், அங்கிருந்து புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார், வ. வே. சு. ஐயர்.

பிரான்ஸில் இருந்தபோது, பாரீசுக்குப்போய், சிறந்த ரகத் துப்பாக்கிகளை வாங்கி இரகசியமாக இந்திய விடுதலை வீரர்களுக்கு அனுப்பி, சுதந்திரப் போரைச் சுறுசுறுப்படைய வைத்த பெருமை இவருக்கு உண்டு. தன் இடுப்பிலும் எப்போதும் ஒரு கைத்துப்பாக்கி செருகி வைத்திருப்பார்.

இந்திய சுதந்திரப்போரில் இவ்வளவு தீவிரமாக இருந்த வ.வே.சு. ஐயர் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவராகவும் திகழ்ந்தார். காந்தியாராலும் இவரது கைவண்ணங்கள் பாராட்டப்பட்டதுண்டு. ஆனால், காந்தியார் போராட்டம் பல கண்ட இவருடைய வேகத்தை மட்டுப்படுத்தவே விரும்பி முயன்றார்.

வ.வே.சு. ஐயர் எழுதிய ஆங்கிலப் புத்தகங்கள், படிப்போர் நெஞ்சில் விடுதலைப் புயலை உண்டாக்கும் போலிருக்கவே ஆங்கில அரசு அவற்றைத் தடை செய்தது.

திருக்குறளையும் குறுந்தொகையையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த சிறப்பு மட்டுமல்ல; கம்பராமாயணத்தை ஆராய்ச்சி செய்து ஆங்கில நூலொன்று எழுதிய பெருமையும் பெற்றவர் வ.வே.சு. ஐயர். 'தேச பக்தன்' 'பாலபாரதி போன்ற பத்திரிகைகளையும் நடத்திய அவர், தனது எழுச்சிமிகு எழுத்தால் சிறைத் தண்டனையும் பெற்றார்.

'மங்கையர்க்கரசியின் காதல்' போன்ற கதைகள் பலவற்றின் கர்த்தாவும் ஆன இவர், அறிவாற்றலோடு அஞ்சா நெஞ்சமும் வாய்க்கப் பெற்றவர்.

வேங்கடேச ஐயர் - காமாட்சி தம்பதியருக்கு 1881ஆம் ஆண்டு ஏப்ரல் 2-ஆம் நாளன்று பிறந்தவரான வ.வே.சு. ஐயர், தமது 42-ஆம் வயதில் சேரன்மாதேவியில் குருகுலம் ஒன்றை நடத்தி வந்தார்.

அதைச் சேர்ந்த மாணவ மாணவிகளையும், தனது மகள் சுபத்திரையையும் அழைத்துக் கொண்டு 3-7-1925-ஆம் நாளன்று, பாபநாசம் கல்யாண தீர்த்தத்தில் நீராடச் சென்றார் வ.வே.சு. ஐயர். அவருடைய மகள் சுபத்திரை கால் இடறி அந்த நீர்வீழ்ச்சியிலிருந்து வீழ்ந்து விட்டாள்; அது கண்டு பதறிப்போன வ.வே.சு. ஐயர் 'மகளே!' என்று கதறி, தானும் நீர்வீழ்ச்சிக்குள் அவளைக் காப்பாற்றும் எண்ணத்தோடு பாய்ந்தார்.

அந்தோ, பரிதாபம்! தந்தையையும், மகளையும் அந்தக் கல்யாண தீர்த்தம் கபளீகரம் பண்ணிவிட்டது. இன்றைக்கும், அந்த இடத்தில் அரசு நிறுவிய வ.வே.சு. ஐயர் நினைவு மண்டபத்தை நாம் காணலாம்.!

—'ராஜு'

# இராமநாதபுர மாவட்டம்...

உவர் நிலத்தில் நெல் விளைந்திடாது என்ற நிலை மாறி, இன்று பயன்தரக்கூடிய பணப்பயிர் மற்றும் மரம் வளர்க்க முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. குஜராத்தில், மத்திய அரசு உப்பு மற்றும் இரசாயன ஆராய்ச்சி நிலையம் இப்பணியில் தீவிரமாக முயன்று வெற்றி பெற்றுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமை, இம்மாவட்டத்தில் 5 இலட்சம் எக்டேர் நிலம் பயனற்று உள்ளது என்று அளவை செய்தது. இந்த ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் உவர் நிலத்தில் சில பயிர்கள் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென மண்டபம் ஊராட்சி ஒன்றியம் உச்சிப்புளி கிராமத்தில் இரண்டு நாற்றங்கால்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மானாங்குடி, தாமரைக்குளம் ஆகிய இடங்களிலும் கடலாடி ஊராட்சி ஒன்றியம் குதிரைமொழி, மூக்கையூர், கன்னிராஜபுரம் ஆகிய இடங்களிலும் எண்ணெய் வித்து மரம் மற்றும் கால்நடை உணவுப்புல் பயிரிடப் படவுள்ளது.

மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மற்றும் மாவட்ட வளர்ச்சி முகமை அலுவலர்கள் கூட்டம் 11-3-87 அன்று உச்சிப்புளியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட குஜராத் ஆராய்ச்சி நிலையத்தைச்சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் இ. ஆர். ஆர். ஐயங்கார் அவர்கள் இப்பயிர்கள் பற்றி விரிவுரையாற்றினார். 6 வகையான பயிர்கள் பயிரிடலாம் என்றும் 'லசியூரஸ் சின்டிக்ஸ் கேசரி' ( Lasiurus Sindics Gazri ) என்ற புல் பயிரிட்டால் மணல் சரிவைத் தடுத்திடலாம், கால்நடைகளுக்கும் நல்ல உணவாகும்

## வசந்த

என்றும் அவர் தெரிவித்தார். மேலும் 'சல்வோரா' ( Salvoora Plantation ) என்ற மரம் 6 ஆண்டுகளில் பலன்தரும். இதில் கிடைக்கும் விதைகள் மூலம் கிடைக்கும் எண்ணெய், தேங்



### மாணவர் கடமை

* **நாட்டின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் தங்களுக்கு இருக்கிறது என்பதை-உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவ, மாணவியர் உணர்ந்து செயல்பட வேண்டும்.**

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம். ஜி. ஆர்

காய் எண்ணெய் போன்றவற்றை சோப்பு தயாரிக்க பயன்படுத்தலாம்.

இந்த எண்ணெய், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆந்திரம், கர்நாடகம் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. இம்மரம் ஒரு ஏக்கர் நிலத்தில் ஓராண்டில் ஒரு

## வசந்தம்

டன் உப்பை அகற்றி விடுவதால் 6 ஆண்டுகளில், நல்ல தரமான வளமான நிலமாகி விடும். பிறகு நெல், சோளம், கம்பு போன்ற தானிய வகைகளைப் பயிரிடலாம் என்றும் உறுதியளித்தார். இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சியங்களுக்கும் நாற்றுகள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

**க. பன்னீர்செல்வம்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம்.**

* கடற்புறங்களில் உள்ள சிற்றூர் மீனவ மக்களோடு பழகி, இதுவரை ஏட்டிலே ஏறாத ஆயிரக்கணக்கான சொற்கள் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவரவிருக்கிறது.

# ஆயிரம் மீன்களுக்கு ஓர்

உலகில் முக்கால் பகுதி கடல். எஞ்சிய கால் பகுதி நிலத்தைப் பற்றி ஆய்ந்த அளவிற்கு, கடல் கடல்படு பொருள்களைப் பற்றியும், கடலில் வாழும் மீன்களைப் பற்றியும் நாம் ஆராயவில்லை.

உலகில் பதினாறாயிரம் வகை மீன்கள் இருப்பதாக அறியப்படுகிறது. அவற்றுள் இந்தியக் கடலோரங்களில் சற்றொப்ப நான்காயிரம் வகை மீன்கள் வாழ்வதாகக் கூறப்படுகிறது. மீன்வளத் துறையினருக்கு அம்மீன்களின் ஆங்கிலப் பெயர்கள் மட்டும் தெரிந்திருக்கிறது. மீன்வளத் துறை வெளியிட்டுள்ள கலைச்சொல்லகராதி வரிசையில் 200 மீன்களின் தமிழ்ப் பெயர்கள் மட்டும் காணப்படுகின்றன. ஆயிரக் கணக்கான மீன்வகைகளின் தமிழ்ப் பெயர்களைத் தமிழக மீனவர்களிடமிருந்து இன்றும் தொகுக்க முடிகிறது. மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் 1974-ஆம் ஆண்டு மே திங்கள் 7-ஆம் நாள் தொடங்கப்பட்டது. இது பன்னிரு மடலங்களையும் 32 பகுதிகளையும் கொண்ட பேரகர முதலியாக வெளிவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை அகரமுதலிகளில் இடம்பெறாமல் மக்களின் பேச்சுவழக்கில் மட்டும் இருக்கும் மீன்பிடித் தொழில், தச்சுத் தொழில், கொல்லுத் தொழில், வேளாண்மை, நெசவுத் தொழில் போன்ற பல்வேறு தொழில்சொல் வரிசைகள், வட்டார வழக்குகளையும் முறையாகத் தொகுக்கப்பட வேண்டுமென்று பாவாணர் அவர்கள் விரும்பினார். அதன் விளைதாக மாவட்டந்தோறும் சென்று பொதுமக்களிடையே இதுவரை ஏட்டில் ஏறாத சொற்களைத் தொகுக்கும் பணியில் இரண்டு களப்பணியாளர்கள் ஈடுபட்டனர்.

திரு க.கணேசன் என்னும் களப்பணியாளர் கடற்புறங்களிலுள்ள சிற்றூர்களில் மீனவ மக்களோடு பழகி, இதுவரை ஏட்டிலே ஏறாத ஆயிரக்கணக்கான சொற்களைத் தொகுத்துள்ளார். கடற்படு பொருள்களைப் பற்றியும், கடல் வாழ் உயிர்கள் பற்றியும் அரிய செய்திகளையும் அக் களப்பணியாளர் திரட்டியுள்ளார். இதுவரை அறியாத செய்திகளை அறிவிக்கும் அக்களப் பணியாளர் அரிய முயற்சியால் திரட்டியவை அனைத்தும் தொகுக்கப்பட்டு அடுத்து வெளிவரும் பாவாணர் அகரமுதலியில் சேர்க்கப்படும்.

அகரமுதலியின் 32 பகுதிகளும் வெளிவருவதற்கு ஆகும் கால நீட்சியை மனதிற்கொண்டு அவர் தொகுத்த அரிய செய்திகள் பொதுமக்களுக்கும் அறிஞர்களுக்கும் எட்டும் வகையில் ''மீன்பிடித் தொழிற் சொல் வரிசை'' எனும் நூலாக வெளிவரவிருக்கிறது. படவிளக்கங்களுடன் அமையும் இந்நூலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன்களும், அவற்றின் தமிழ்ப் பெயர்களும் இடம்பெறும். மீன்பிடித் தொழிற்சொல் வரிசையில் இடம்பெறும் சில செய்திகள் சான்றாக இவண் தரப்படுகின்றன.

நிலத்தில் ஓரிடத்தை எளிமையாக அடையாளங் காண முடிகிறது. கடலில் மீனவர்கள் எவ்வாறு அடையாளம் காண்கிறார்கள் என்பது நமக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் மீனவர்



களுக்கு அது எளிது. கடலில் ஒவ்வொரு பகுதியையும் செப்பாடு என அழைக்கின்றனர். பாறைச் செப்பாடு, கோயில் செப்பாடு, ஓடைச் செப்பாடு, சேற்றுச் செப்பாடு என்பவை அவற்றுள் சில.

பூம்புகார் பகுதியில் மீன்பிடிக்கும் மீனவர்கள் நீருக்கு அடியில் காணப்படும் கோயில் அமைப்புகளைக் கண்டு அப்பகுதிக்குக் ''கோயில் செப்பாடு'' எனப் பெயரிட்டிருக்கின்றனர். அடியில் பாறைகளே காணப்படின் அப்பகுதி பாறைச் செப்பாடு எனப்படும்.

தஞ்சை மாவட்டத்து மீனவர்கள் தம்முடன் பிறந்த சகோதரர் சகோதரிகளை 'பிறவன்' 'பிறவி' என்று அழைக்கின்றனர். நெல்லைப் பகுதி மீனவர்கள் கடிய உழைப்பாளியைக் 'கடவாளி' என அழைக்கின்றனர். கிழமைக்கு (வாரத்திற்கு) ஒரு நாள் மீனவர்கள் மீன் வேட்டைக்குச் செல்வதில்லை. இதை அவர்கள் வினை கெட்ட நாள் என்கிறார்கள். பெரும்பாலும் அவர்களுக்குச்



செவ்வாய்க்கிழமை வினைகெட்ட நாளாக இருக்கிறது. தமிழகத்தின் சில பகுதிகளில் திங்கட்கிழமையை மாடு பிறந்த நாளாகக் கருதி உழவர்கள் அன்று ஏர்கட்டி உழுவதில்லை. உழவர்களுக்குத் திங்கட்கிழமை வினை கெட்ட நாள்.

# அகர முதலி

**பேராசிரியர்**
**இரா. மதிவாணன்**
**இயக்குநர்**
**(முழுக் கூடுதல் பொறுப்பு)**
**செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்,**
**சென்னை.**

பொடிப்பொடியான அயிரை மீன் முதல் ஆளையே விழுங்கும் திமிங்கலம் வரை ஆழ்கடலில் வாழும் மீன் இனங்களின் தன்மைகளை மீனவர்கள் மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். 'நிலந்தட்டி' என்னும் பெயருடைய மீனுக்கு ஒரு பக்கம் மட்டும் கண் இருக்கும். அது திசை தெரியாமல் நிலத்தைத் தட்டித் தட்டித் திரும்புவதால் அதனை "நிலந்தட்டி மீன்'' என்றே அழைக்கின்றனர். அப்புக்குட்டி என்னும் மீன் ஒரு சாறுண்ணி அதன் 'தலைப் பகுதியிலுள்ள சல்லடை போன்ற உறுபபைப் பிற மீன்களின் உடலில் ஒட்டச் செய்து அவற்றின் சாற்றை உறிஞ்சிக் கொன்றுவிடும். இதை ஆங்கிலத்தில் ( Sucker Fish ) என்று அழைப்பர். இதனை 'அப்புக்குட்டி' என்று மீனவர்கள் அழைப்பினும் இதன் பெயர்க்காரணம் சரியாக விளங்கவில்லை. மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அம்மீனின் பழைய பெயர் அப்புக்குள்ளொட்டி (அப்பு - தண்ணீர்; தண்ணீரில் மற்ற மீனோடு ஒட்டிக்கொள்வது). அதுவே 'அப்புக்குட்டி' எனத் திரிந்துவிட்டதாகக் கூறினார்.

'அடுப்பூதி' என்னும் மீன், வலையில் கிடைத்தால் நல்வினை நிமித்தமாகக் கருதப்படுகிறது. மீன்கள் பருவத்திற்கேற்ப வெவ்வேறு பெயர்களைப் பெற்றிருக்கின்றன. தலையில் சிறு கல் உடையதாய்க் கருதப்படும் மீன் 'கத்தலை' என்றும், அம்மீன் இளம்பருவத்தில் 'முட்டி' என்றும், வளர்ச்சியடைந்த நிலையில் 'பழுதை' என்றும் செங்கை மாவட்டத்து மீனவரால் அழைக்கப்படுகிறது.

கடற்பரப்பில் கூட்டமாகத் திரியும் மீன்களை மீனவர்கள், 'மாப்பு' என்று அழைக்கின்றனர். மீனவர்களில் உயர்ந்தவர்களாகக் கருதப்படும் அம்பலக்காரரும், சுண்ணாம்பைச் சுடுதல், கிளிஞ்சல் எடுத்தல் ஆகிய தொழில்களைச் செய்யும் கடையரும், ஆழ்கடலில் முத்துக் குளிக்கும் முத்தரையரும், மீன்பிடி தொழில் செய்பவருள் பட்டுத் துணியையே விரும்பி அணியும் பட்டினவரும் பரவை (கடலை)யை ஆள்பவராகிய பரவரும், காயல், குளங்குட்டைகளில் மட்டும் மீன்பிடிக்கும் செம்படவரும் ஆகிய அனைவரும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள குடிமக்களாவர்.

அலை வற்றாப் பெருங்கடலில் நிலையற்ற வாழ்வை நடத்தும் அம்மக்களுக்கு மீன்பிடிக்கும் கலை கைவந்த கலை. காற்று நோக்கி கலம் செலுத்துவதைக் ''கால்வாங்கி ஓடுதல்'' என்கின்றனர். கடல் காற்றுக்கும், கடல் அலைகளுக்கும் கடலடி நீர் ஓட்டங்களுக்கும் அவர்கள் வைத்துள்ள பெயர்கள் ஏராளமானவை.

சோழன் கரிகால் பெருவளத்தானின் முன்னோர் ''வளிதொழில் ஆண்ட உரவோர்'' என்று கூறப்படுகின்றனர். வளிதொழில் என்பதன் விளக்கத்தை மீனவர்கள் செம்மையாகப் புலப்படுத்துகின்றனர். காற்று வீசும் திசையைத் தமக்கு அரணாகக்கொண்டு கோணத் திசைகளில் கலத்தைச் செலுத்தி தாம் வேண்டும் எத்திசையிலும் கலம் செலுத்துவதையே வளிதொழில் ஆளுதல் என்று அவர்கள் கூறுகின்றனர்.

'வளிதொழில் ஆளுதல்' என்னும் புறநானூற்றுப் பாடல் வரிக்கு உரையாசிரியர்களால் பெறமுடியாத பொருள் விளக்கத்தை மீனவப் பெருமக்களிடமிருந்து நாம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஒற்றைக்கட்டு மரம், பொறை, வத்தை, வள்ளம், பள்ளம், வங்கம், படகு, பரிசல், தோணி என நீர்வழிச் செல்லும் கலங்களுக்கு அவர்கள் ஆளும் பெயர்கள் பலப் பல.

கல்லாத மக்களிடையே வழங்கும் அரிய சொற்கள் பழந்தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலங்களாக விளங்குகின்றன. அகரமுதலித் தொகுப்புக்குத் தொடக்கப் பள்ளியாசிரியர்களும் இத்தகு சொற்றொகுப்புகளை அனுப்பி வைக்கின்றனர்.

## மாநகராட்சிக் கையேடுகள்

சென்னை மாநகராட்சி மக்களுக்குப் பயன்படும் வகையில் 'மக்கள் பணியில் சென்னை மாநகராட்சி' என்ற தலைப்பில் 12 கையேடுகளை வெளியிட்டுள்ளது. மாநகராட்சியில் மக்கள் தேவையென்ன என்பதைக் கருத்தில் கொண்டு அவற்றை எளிதில் அடைய என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை இக்கையேடுகள் விளக்குகின்றன.

உங்கள் தேவை, வீடுகட்ட அனுமதியா? கட்டடத்திற்குச் சொத்துவரி விதிக்கக் கோருவதா? வணிகம் செய்ய அனுமதியா? பிறப்பு-இறப்புச் சான்றிதழா? பன்னாட்டுப் பயண உடல்நலச் சான்றிதழா? விளம்பரம் செய்தவரா?கலவை உரமா? இவற்றை எப்படிப் பெறுவது? யாரை அணுகவேண்டும்? குறிதத காலத்தில் கிடைக்கவில்லையானால், யாரிடம் புகார் செய்ய வேண்டும் என்பதைச் சில கையேடுகள் விளக்குகின்றன. இவற்றைத் தவிர மரவரி, வர்த்தக நிறுவனவரி, தொழில்வரி, இடுகாடு-சுடுகாட்டுக் கட்டணங்கள் இவற்றை விளக்கும் கையேடுகளும் உள்ளன.

மாநகராட்சி மக்களின் சேவைக்காக வண்ணக் கூடாரம், பாண்டு வாத்தியக்குழு, விளையாட்டுத் திடல் இவற்றைக் குறைந்த வாடகைக்கு விடுகிறது. இவற்றைப் பற்றிய விவரங்களும், செடிக் கன்றுகள், நாற்றுகள் இவற்றைக் குறைந்த விலையில் எப்படி, எங்கு பெறலாம் என்பதைப் பற்றிய விவரங்கள் அடங்கிய கையேடுகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இவை தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. இவை தாமே படித்தறிந்து செயல்படத்தக்கவிதத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றைத் தங்கள் தேவைக்கேற்ப மாநகராட்சியிடமிருந்து இலவசமாக வாங்கிப் பெற்றுப் பயன் அடையுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே
# ஆரோக்கியம் இருக்குமிடம்!




**லைப்பாய்**

அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 98 203 TM






# எழில்மிகு ஏர்க்காடு

கண்ணைக் கவரும் வண்ண மலர்க்காடு!

இயற்கை அன்னை களிநடம் புரியும் ஏர்க்காடு!

அதன் எழில்மிகு தோற்றத்தைக் கண்ணால் கண்டுகளிக்க, அதே சமயத்தில் அங்கு நடைபெறும் கோடை விழாவைப் பார்த்துப் பரவசமடைய ஏர்க்காட்டை நோக்கிச் செல்கிறோம்.

மரஞ்செடி கொடிகள் நிறைந்த அந்த மலையில் வளைந்து வளைந்து செல்கிறது ஊர்தி. மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறோம். குளுமையான காற்று மெல்ல மெல்ல தவழ்ந்து வருகிறது.

கடல் மட்டத்திலிருந்து 5000 அடி உயரத்தில் உள்ளதுதான் ஏரிக்காடு என்னும் ஏர்க்காடு. வகை வகையான வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் காட்சியும், பசும்புல் தரையும், பனி படர்ந்த மலையும், காப்பித் தோட்டங்களும் காணக் கண்கோடி வேண்டும்.



அழகிய ஏரி, அண்ணா பூங்கா, ஏரிப்பூங்கா, சேர்வராயன் கோயில், லேடீஸ்சீட், கரடிக் குகை இப்படி கண்டு களித்திட ஏராளம் உண்டு அங்கே.

கோடை விழா!

அதை மெய்ப்பிக்கும் வகையில் கோலாகலக் காட்சிகள். ஆடவர், பெண்டிர், குழந்தைகள் என எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம்!

அழகிய ஏரியில் அலங்காரப் படகுகள்-மலர் மற்றும் தோட்டக்கலைக் கண்காட்சி- அரசுத் துறைகள் பங்கேற்ற பாங்கான பொருட்காட்சி -எல்லாம் என் னத்தைக் கவர்ந்தன.

14-வது கோடை விழாவினை யொட்டி நாள்தோறும் இலவசக் கலை நிகழ்ச்சிகளும், திரைப் படக் காட்சிகளும் நடந்தன.

மாண்புமிகு தொழில்வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம், மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. அ. அருணாசலம் ஆகியோர் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஏர்க்காட்டின் எழிலையும், ஏற்ற மிகு திட்டங்கள் குறித்தும் கருத்துரை வழங்கினார்கள்.

10.5.'87 முதல் 17.5.'87 முடிய எட்டு நாட்கள் நடந்த இந்தக் கோடை விழாவைக் கண்டு களித்திட, அண்ணா போக்குவரத்துக் கழகம் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்திருந்தது.

விழா நிறைவு நாளான மே திங்கள் 17ஆம் நாள், படகு அலங்கார அணிவகுப்பு, துப்பாக்கி சுடும்போட்டி ஆகியவை நடந்தன.

அன்று மாலை சிறப்புக் கூட்டம் நடந்தது.

சுற்றுலா அலுவலர் திரு. இரா. சதாசிவம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மு. தங்கதுரை இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''மலை வாழ் மக்கள் மேம்பாட்டிற்காக அரசு பல வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டிச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. கடந்த ஆண்டில் மட்டும் சேலம் மாவட்டத்திலுள்ள ஏர்க்காடு, கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்சைமலை, அருநூத்துமலை ஆகிய ஐந்து மலைப் பகுதிகளில் 374 லட்ச ரூபாயைப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிட்டுள்ளது. ஏர்ககாடு மலைப் பகுதிக்கு மட்டும் 31 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது'' என்றார்.

திரு. என். இராமசாமி உடையார், திரு. எஸ். செம்மலை எம்.எல்.ஏ., திரு பி. ஆர். திருஞானம் எம்.எல்.ஏ. ஆகியோர் கோடை விழாவின் சிறப்புகளை விளக்கினார்கள்.

**தமிழகத்தில், தனியார் துறையில் 4 இடங்களில் சர்க்கரை ஆலைகள் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி சிவகங்கை, கும்பகோணம், வாசுதேவநல்லூர், பெரியகுளம் ஆகிய ஊர்களில் சர்க்கரை ஆலை அமையும் என்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் தெரிவித்தார்.**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் விழா நிறைவுப்பேருரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப்பிடடார்:

## 'மலைகளின் இளவரசி'



மலைவளம் மிகுந்த மாவட்டம் சேலம் மாவட்டம் ஆகும். சேர்வராயன் மலைத்தொடரில் அமைந்துள்ள ஏர்க்காடு 'மலைகளின் இளவரசி' என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது.

ஏர்க்காட்டின் நடுவே அமைந்துள்ள ஏரி உல்லாசப் படகுச் சவாரிக்கும் ஓய்வாக மகிழ்ந்திருக்கவும் இனியது. ஏரியின் நடுவே அமைந்துள்ள தீவுத்திடல் மான் பூங்கா, சிறுவர் சிறுமியர்களுக்கான கண் கொள்ளாக் காட்சியாகும். ஏரிக்கரைப் பூங்காவும், அண்ணா பூங்காவும் அழகு மலர்களின் இருப்பிடம்.

ஏரியில் இருந்து 2 கல் தொலையில் தொலைக்காட்சி நிலையமும், அதன் அருகில் ''லேடீஸ்சீட்'' ''ஜென்ட்ஸ் சீட்'' ஆகிய இரு காட்சி மையங்களும் உள்ளன. அங்கு அமைந்துள்ள தொலைநோக்கிக் கருவியின் மூலம் சேலம் நகரை நன்கு பார்க்கலாம்.

தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ. 10 இலட்சம் செலவில் தொடங்கப்பட்ட தங்கும் விடுதி சிறந்த சேவையாற்றுகிறது. ஏரிக்கரையில் உல்லாசப் படகுச் சவாரி செய்ய ''படகு இல்லம்'' ரூ. 5 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் குறைந்த வாடகையில் தங்க ''இளைஞர் விடுதி'' ரூ. 10 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

ஏர்க்காடு வரும் பயணிகளுக்கு சுற்றுலாத் தகவல் தெரிவிக்க தற்காலிக ''சுற்றுலா தகவல் மையம்'' அமைக்கப்பட்டுள்ளது.

''ஏர்க்காடு பெரும்திட்டம்'' ரூ. 115 லட்சம் உத்தேச மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

ஏரியிலிருந்து லேடீஸ் சீட் வரை குழந்தைகள் ரெயில் விடுதல் (ரூ. 25 இலட்சம்), ஏரிக்கரையைச் சுற்றி அலங்காரப் பூங்கா அமைத்தல் (ரூ. 10 இலட்சம்), 'கான்பிரன்ஸ் ஹால்' (ரூ. 5 இலட்சம்) கட்டுதல், நிரந்தர சுற்றுலா தகவல் மையம் அமைத்தல் (ரூ. 3 இலட்சம்), பகோடா பாயிண்ட்டில் தொலைநோக்கி மற்றும் தங்கும்விடுதி அமைத்தல் (ரூ. 4 இலட்சம்) ஆகியவையும் அடங்கும்.



''ஏர்க்காடு சேர்வராயன் மலையில் உள்ள கோவிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்து வழிபடுகின்றனர். அந்தக் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு அரசு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. பொதுமக்களும் இதற்கு நிதி உதவி செய்ய வேண்டும்.''

விழாவில் துப்பாக்கிச் சுடும் போட்டி, படகு அணி வகுப்பு மற்றும் கண்காட்சியில் பங்கு பெற்றவர்களுக்கு மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

படகு அணிவகுப்பில் பல்வேறு துறைகள் கலந்துகொண்டதில், மூன்று துறைகள் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. அவை: 1. அண்ணா போக்குவரத்துக்கழகம் 2. அறநிலையத்துறை. 3.வனத்துறை.

''கோடை விழா என்பது பொதுமக்களும், மலைவாழ் மக்களும் சந்திப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது. முன்பெல்லாம் இங்கு மலர் அலங்காரம், துப்பாக்கிச் சுடும் போட்டிகள் மட்டும்தான் நடந்தது. ஆனால் இப்போது பல்வேறு வகையான போட்டிகள் நடக்கின்றன. இது தவிர பங்கரா நடனம், மல்யுத்தம் போன்றவைகளும் இந்த விழாவில் இடம் பெறச் செய்ய வேண்டும். கேரளாவில் உள்ளதைப் போல படகு அணிவகுப்பு இங்கும் சிறப்பாக நடக்க வேண்டும்.

''ஏர்க்காடு ஏரியைச் சீரமைக்கவும், தூர் எடுக்கவும், பூங்காக்கள் அமைக்கவும் ரூ.1 கோடி செலவிலான திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. மேலும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு விடுதிகளும், சுகாதார வசதி மற்றும் குடிநீர் வசதி கிடைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.





செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு மு.கிருஷ்ணன் நன்றி நவின்றார். விழா முடிவில் கண்கவர் வாணவேடிக்கை நடந்தது.

எழில்மிகு ஏர்க்காட்டில் கோலமிகு கோடைவிழா, உள்ளத்துக்கு உவகையை மட்டுமல்ல ஒப்பற்ற ஒருமைப்பாட்டையும் உணர்த்தியது.

அன்று இரவு, விழா முடிந்து அந்த அழகிய மலையை விட்டுப் பிரிய மனமில்லாமல் கீழே இறங்கி வருகிறோம். மேலே இருந்து சேலம் நகரைப் பார்க்கிறோம். மின்விளக்குகளின்கூட்டம் நட்சத்திரங்கள்போல் ஜொலிக்கின்றன! அண்ணாந்து வானைப் பார்க்கிறோம். அங்கேயும் நட்சத்திரங்கள். மேலேயும் வானம், கீழேயும் வானமா? வியக்கிறோம்!

—நமது செய்தியாளர்

# பெரியார் மாவட்டம்:

# வறட்சி நிவாரணப் பணிகள்

தமிழகமே வறட்சிப் பிடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கையில், பெரியார் மாவட்டம் மட்டும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. இம்மாவட்டம் என்றும் சந்தித்திராத வறட்சியினைத் தற்போது அடைந்துவிட்டது. இதனை முன்னிட்டு இம்மாவட்டத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சி நிலையினைப் போக்க அரசானது துரித காலத் திட்டங்களாலும், பணிகளாலும் வறட்சி நிலையினைச் சமாளித்து வருகிறது.

இம்மாவட்டத்தில் வற்றாத நதிகளெல்லாம் வற்றிவிட்டது. கீழ்பவானி, மேட்டூர், அமராவதி, பரம்பிக்குளம் போன்ற அணைகளில் நீரின் அளவு வெகுவாகக் குறைந்து விட்டதால் பாசனப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. நடப்பள்ளி, அரக்கன் கோட்டை, காளிங்கராயன் பகுதிகளில் மட்டும் ஓரளவுக்குச் சாகுபடி செய்யப்பட்டன. வரட்டுப் பள்ளம், குண்டேரிப் பள்ளம் மற்றும் உப்பார் பாசனப் பகுதிகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. தாராபுரம் வருவாய்க் கோட்டப் பகுதிகள் வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் பெரும்பாலும் மானாவாரிப் பயிர்கள் பயிரிடுவதால் இவைகள் மழையின்மையால் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டன.

எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தமட்டில் பயிரிடாமை மற்றும் சேதமடைந்த வகையில் 35780 எக்டேர்கள் நஷ்டமாகியுள்ளது. கீழ்பவானி இரண்டாம் பாசனப் பகுதி மற்றும் மானாவாரிப் பகுதிகளில் தென்னை மரங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து நீர் பற்றாக்குறை ஏற்படின் தென்னை மரங்களைப் பாதுகாக்க குறைந்த செலவினத்தில் சொட்டு நீர்ப் பாசனமுறையைச் செயல்படுத்த ஒரு மரத்திற்கு ரூ.10 செலவினம் கொண்ட செயல் விளக்கங்கள் ஒவ்வொரு வட்டாரத் தலைமையிடத்திலும் விளக்கப்பட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை மிகவும் பெரும் பிரச்சனையாக அமைந்துவிட்டது. குடிப்பதற்கே நீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே அரசானது வறட்சி நிவாரணப் பணிகளுள் குடிநீருக்கு முக்கியத்துவம் கொடுத்து அப்பிரச்சனைகளைப் பல வழிகளிலும் முறியடித்து வெற்றி கண்டுள்ளது.

1-4-86-ல் 2572 ஆழ் குழாய்க் கிணறுகள் இருந்தன. இன்று 3186 ஆழ் குழாய்க் கிணறுகள் உள்ளன. மே '86, ஜூன் '86 மற்றும் ஜூலை '86 ஆகிய மாதங்களில் பாதிக்கப்பட்ட பருவநிலைத் திட்டத்தில் 280 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, குடிநீர் வடிகால் வாரியத்தின் 1986-87 திட்டத்தில் 324 ஆழ்குழாய்க் கிணறுகளும், நீர்பற்றிய ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் வகையில் 157 எண்ணிக்கையும் செய்யத் திட்டமிட்டத்தில் நாளதுவரை 304 மற்றும் 118 ஆழ்குழாய்க் கிணறுகளும் முறையே அமைக்கப்பட்டுள்ளன. நிகரமுள்ளவையும் முடிக்கப்பட்டு விடும். மேலும், வறட்சி நிவாரணத் திட்டத்தில் ஊராட்சிகள், ஊரக, பேரூராட்சிகள், நகரப் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகள் ஆகியவைகளுக்கென மொத்தமாக 31 ஆழ்குழாய்க் கிணறுகள் அனுமதிக்கப்பட்டு 31-3-87-க்குள் முடிக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் மேலும் 200 ஆழ்குழாய்க் கிணறுகள் குடிநீர் வடிகால் வாரியத் திட்டத்தில் விரைவில் அமைக்கவும், குறைந்த தேவைத் திட்டத்தில் உடனடியாக 100 ஆழ்குழாய்க் கிணறுகள்





அமைக்கவும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பணிகளை விரைவில் செய்து முடிக்க, குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதுள்ள குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்தவும் குழாய்களை விரிவாக்கம் செய்யவும் மொத்தமாகவும் 4.50 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டுப் பணிகள் நடந்து வருகின்றன.

ரூ. 2.50 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டு 10 இடங்களில் புதிய கிணறுகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 12.20 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளன. உடனடியாக 84 கிணறுகளின் மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டுள்ளன. சுமார் 818 கிணறுகள் ஆழப்படுத்த வாய்ப்புள்ளது. நீர் நிலை அமைப்பதற்கு ஏற்றவாறு தற்போதுள்ள கிணறுகளில் நேர் மற்றும் பக்கவாட்டுத் துளைகள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சிகளில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாகனங்கள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள ரூ. 1.75 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. பணிகள் தேவைக்கு ஏற்றவாறு துவக்கப்படவுள்ளது.

குடிநீர் விநியோகத்தில் நிரந்தரத் தீர்வு காணப் பின்வரும் திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில், அப்பணிகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

1. காசிபாளையம் (தூக்கநாய்க்கன் பாளையம் ஒன்றியம்) பேரூராட்சிக் குடிநீர்த் திட்டம்.

2. கவுந்தப்பாடி பி.மேட்டுப்பாளையம், கலங்கபாளையம் பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

3. கெம்பநாய்க்கன்பாளையம், பேரூராட்சிக் குடிநீர்த் திட்டம்.

4. தொட்டம்பாளையம் மற்றும் 47 குக்கிராமங்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

5. ஜம்பை பேரூராட்சிக் குடிநீர்த் திட்டம்.

6. கலிங்கியம், கொளப்பலூர், சிறுவலூர், குன்னத்தூர், ஊத்துக்குளி பேரூராட்சிகள் மற்றும் வழித் தட கிராமங்களின் கூட்டு குடிநீர்த் திட்டம்.

7. பாலபாளையம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

8. காஞ்சிக்கோவில் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

9. பெருந்துறை பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

10. சீனாபுரம் மற்றும் பட்காரம்பாளையம் ஊராட்சிகளின் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.



11. மொடக்குறிச்சி, அரச்சலூர், அவல்பூந்துறை வடுகப்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 10 வழித்தட கிராமங்களின் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

12. கன்னிவாடி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

13. பாசூர் மற்றும் கிளாம்பாடி பேரூராட்சிகளின் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

14. சென்னிமலை பேரூராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டங்களுடன் பின்வரும் நடைமுறைத் திட்டங்களும் ஆய்வுக்கு எடுக்கப்படவுள்ளது:

1. சத்தியமங்கலம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

2. அரியப்பம்பாளையம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

3. ஆப்பக்கூடல் பேரூராட்சி (இரண்டாம் கட்டம் - பேரூராட்சியில் கீழ்வரும் குக்கிராமங்கள் குடிநீர்த் திட்டம்).

வேலைவாய்ப்புத் திட்டத்தில் அரசினர் ஊருணிகள் பழுதுபார்த்தல், நீர்ப்பாசனக் குளங்கள் பராமரிப்பு மற்றும் தூர் எடுத்தல் போன்ற பணிகளுக்காக ரூ. 20 இலட்சங்கள் அனுமதித்துள்ளனர். ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 248 வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விரைவில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தவிர பொதுப்பணித் துறையினருக்குக் கீழ்க்கண்ட ஒதுக்கீடுகள் அமைக்கப்பட்டு வேலைகள் துவங்கப்பட்டுள்ளன:

பாசனம் 2.00 இலட்சங்கள் : சிறுபாசனம் 2.00 இலட்சங்கள்; விவசாயப் பொறியியல் 2.50 இலட்சங்கள்.

வறட்சிப் பகுதியான தாராபுரம் வட்டத்திலுள்ள சிறுவிவசாயிகளுக்கும், விவசாயத்தொழிலாளர்களுக்கும், தங்கள் கால்நடைகளுக்குத் தீவனம் பெறும் பொருட்டு, போக்குவரத்துச் செலவினத்திற்காக 30 மெட்ரிக்டன் தீவனத்திற்கு மானியம் வழங்க அரசினருக்குத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் நிலவிவரும் கடுமையான வறட்சி நிலைகளையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் நேரில் கண்டறிய சமீபத்தில் இம்மாவட்டத்திற்குத் தமிழ்நாடு விவசாய உயர்மட்டக் குழு, மத்திய அரசு ஆய்வுக்குழு வருகை புரிந்தன. இக்குழுக்கள் இம்மாவட்டத்தின் கடுமையான வறட்சியினை நீக்க அரசுக்குச் சிபாரிசு செய்வதாக உறுதி அளித்துள்ளன.

தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்களும் இம்மாவட்டத்தில் அடிக்கடி முகாமிட்டு வறட்சி நிவாரணப்பணிகள் செவ்வனே நடைபெற அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்குகின்றனர். இதுபோன்ற அரசின் தீவிர நடவடிக்கைகளால் இம்மாவட்டத்தில் வறட்சி நிவாரணப்பணிகள் மும்முரமாகச் செயல்படுத்தப்பட்டு, வறட்சி நிலைகள் ஓரளவுக்கு முறியடிக்கப்பட்டு வருகின்றன.

**—மு. க. கிருஷ்ணசாமி**

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்,
ஈரோடு.



# சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க பூமி

மதுரை மாவட்டத்தில் பழனி மலைக் குன்றங்களின் சிகரத்தில் உள்ள கொடைக்கானல் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கபூமி. கடல் மட்டத்துக்கு மேல் 2317 மீட்டர் உயரத்தில், அதிஅற்புதமாக அமைந்திருக்கும் இது, இந்தியாவின் சிறந்த மலை வாசஸ் தலங்களுள் ஒன்றாகும்.

கண்ணைக் கவரும் நீர்வீழ்ச்சிகளும், அழகிய ஏரியும், வண்ண மலர்த்தோட்டங்களும், பிரமாண்டமான மரங்களும் என இயற்கை வழங்கிய அனைத்துக் கொடைகளும் கொண்ட கொடைக்கானலின் தனிப் பெருமை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிமலர். 1992ஆம் ஆண்டு இம்மலர் மீண்டும் பூக்க உள்ளது.

ஏப்ரல் முதல் ஜூன்வரை மற்றும் செப்டம்பர் முதல் அக்டோபர்வரை என இரண்டு சீசன்கள் உண்டு. எனினும் உல்லாசம் அனுபவிக்க ஆண்டின் எந்தப் பருவத்திலும் கொடைக்கானல் செல்லலாம்.

குளுமை நிறைந்த இயற்கைச் சூழலை அனுபவிக்க கொடைக்கானல் வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஆண்டுதோறும் தமிழக அரசின் சார்பில் கோடைவிழா நடத்தப்படுகிறது. வழக்கம்போல் இவ்வாண்டும் 16.5.87 முதல் 22.5.87 வரை கோடைவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கலை அரங்கில் 16.5.87 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு.வி.வி.சுவாமிநாதன் அவர்கள் கோடை விழாவைத் துவக்கி வைத்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் விழாத் தலைமை ஏற்றார்.

அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மிருத்யுஞ்சய் சாரங்கி இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.



கோடை விழாவைத் துவக்கி வைத்த மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''உதக மண்டலத்தைக் காட்டிலும் கொடைக்கானலின் இயற்கையழகு சுற்றுலாப்பயணிகளைக் கவரும் வகையில் உள்ளது.

''கொடைக்கானலில் தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க 12 லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இதுமேலும் அதிகரிக்கப்படும். பாம்பாறில் ரூ. 1 கோடி செலவில் அணை ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இவ்வணை கட்டிமுடிக்கப்பட்டால் கொடைக்கானலில் தண்ணீர்த் தட்டுப்பாடே இருக்காது.

''கொடைக்கானல் ஏரி, நகரியத்தின் பொறுப்பில் உள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் அரசுக்கு எழுதினால் இம்மாத இறுதிக்குள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் மேலும் 30 படகுகளை விட ஏற்பாடு செய்யப்படும். கொடைக்கானலுக்கு குட்டிவிமானப் போக்குவரத்து நடைபெறவும் இடத் தேர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

''கொடைக்கானலுக்கு வரும் வழியில் பயணிகளுக்கு தங்கும் விடுதி ஒன்று தேவை என்பதைக் கருத்தில் கொண்டு 'ஊத்து' என்ற இடத்தில் ரூ. 14 இலட்சம் செலவில் தங்கும் விடுதி ஒன்று அமைக்கப்படும். ரூ. 2.60 இலட்சம் செலவில் சிற்றுண்டி விடுதியும் கட்டப்படும்.

''கொடை ரோட்டில் ரூ. 14 இலட்சம் செலவில் சுற்றுலாத்துறை மூலம் தங்கும் விடுதி அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

'கோக்கர்ஸ் வாக்' என்ற இடத்தில் ரூ. 98 ஆயிரம் செலவில் குடிநீர்வசதி, உட்காரும் இருக்கை வசதி, மின்வசதி போன்றவை செய்துதரப்படும். பிரையன்ட் பூங்கா அழகுபடுத்தப்படும்.

''கொடைக்கானல் ஏரிப்பகுதிகளில் மலர்ச் செடிகள் வைத்து மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வெள்ளிநீர் வீழ்ச்சியில் பயணிகள் வசதிக்காக உடை மாற்றும் அறை கட்டப்படும்.

''பெருமாள் மலை உட்பட 7 மலைகள் தேர்வு செய்யப்பட்டு அங்கு கழிப்பறை கட்டவும், குடிநீர் வசதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். பேரிச்சம் ஏரியை சுற்றுலா மையமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

''கொடைக்கானலை மேலும் அழகுபடுத்தவும், இயற்கை வளங்களைக் காக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை அதிகப்படுத்தவும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. மத்திய சுற்றுலாத்துறை ஆலோசகர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்'' என்று கூறினார்.

கோடை விழா மலரினை மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட, தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. வெ.பாலகுரு அவர்கள் முதல் நூலைப் பெற்றுக்கொண்டார்.

விழா நாட்களில் தேர்ந்த கலைஞர்களின் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கோடை விழாவின் சிறப்பு நிகழ்ச்சியான மலர்க்காட்சி 23.5.87 அன்று துவக்கிவைக்கப்பட்டது. மலர்க்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு 24.5.87 அன்று பரிசுகள் வழங்கப்பட்டன.

—நமது செய்தியாளர்



## கொடைக்கானலில் பார்க்க வேண்டிய இடங்கள்

- வெள்ளி நீர்வீழ்ச்சி
- செண்பகனூர் அருங்காட்சியகம்
- ஏரி
- பிரியண்ட் பூங்கா
- கிரீன் வேலி வியூ
- குறிஞ்சி ஆண்டவர் கோயில்
- பில்லர் ராக்
- கோக்கர்ஸ் வாக்
- பியர் சோழா நீர்வீழ்ச்சி
- தொப்பி தூக்கிப் பாறை



# திரு. வி.பி. சிந்தன்
# திரு. ஐசரி வேலன்
# மறைவு



வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு வி.பி.சிந்தன் அவர்கள் இயற்கை எய்தினார் (8-5-87).

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த அவருக்கு வயது 68.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களும், மற்றும் அமைச்சர் பெருமக்களும், ஏனைய கட்சித்தலைவர்களும் அன்னாரது இல்லம் சென்று, அவர் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

சென்னை-இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐசரிவேலன் அவர்கள் 14.5.87 அன்று 45ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

'பார்லிமெண்டரி செகரட்டரி'யாகவும் பதவி வகித்த இவர், திறமைவாய்ந்த நாடக-திரைப்பட நடிகரும் ஆவார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் மற்றும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், வாரியத்தலைவர்களும், திரையுலகைச் சேர்ந்தவர்களும், சென்னை மாவட்ட எம்.ஜி.ஆர் மன்றத்தலைவராகவும் இருந்த அவர் இல்லம் சென்று அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.




ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் 'பென்சிலின்' மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்



**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002